# ஈழத்துத் தமிழ் நாவல்

## வளமும் வளர்ச்சியும்

கலாநிதி செ. யோகராசா

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

ஈழத்துத் தமிழ் நாவல்
வளமும் வளர்ச்சியும்

642066
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் நாவல்

## வளமும் வளர்ச்சியும்

கலாநிதி செ.யோகராசா
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

University of Peradeniya
08 MAR 2011
Library

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு – சென்னை
2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
642066

வெளியீட்டு எண் : 302

**ஈழத்துத் தமிழ் நாவல் : வளமும் வளர்ச்சியும்**
– கலாநிதி செ.யோகராசா எழுதியது

பதிப்புரிமை © 2008 கலாநிதி செ.யோகராசா

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12,

**Ellathu Tamil Navel**
by: Dr.S.Yogaraja

Copyright © 2008 Dr.S.Yogaraja

*Published by* **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

ISBN - 978 - 955 - 659 - 116 - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எழுத்துலகில் 'நீண்டபயணம்' செய்து
எண்பதாம் அகவையில்
காலடி பதிக்கும்
செ.கணேசலிங்கனின்
எழுத்துப் பணிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
642066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி தொடர்பாக சென்றவருடம் வெளிவந்த "ஈழத்து நவீன தமிழ்க்கவிதை", "ஈழத்து இலக்கியமும் இதழியலும்" தொடர்பான எனது நூல்களைத் தொடர்ந்து வெளிவருகின்ற இந்நூலின் வரவு முன்னைய நூல்களைவிட, எனக்குத் திருப்தி தருகின்றது. ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக எழுபதுகளில் வெளிவந்த "ஈழத்து நாவல் இலக்கியம்" (நா. சுப்பிரமணியன்) என்ற நூல் எழுபதுகள் வரையான நாவல் வளர்ச்சி பற்றிக் கூறுவதுடன் நின்றுவிட, பிற்பட்ட கால நாவல் வளர்ச்சி பற்றி நூலுருவில் எவையும் வெளிவராத ஆரோக்கியமற்ற சூழலில் அத்தகைய குறைபாட்டினை இந்நூல் ஓரளவு பூர்த்தி செய்வதாக உள்ளமையே அதற்கான காரணமாகும்.

வழமைபோன்று, இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளும் அவ்வப்போது வெளிவந்த சஞ்சிகைகள், நடைபெற்ற கருத்தரங்கு களின் தேவையையொட்டி உருவானவை; கூறியது கூறல் இடம் பெறுவதியல்பே. எனினும், ஒரு சில கட்டுரைகள் புதியவை! இந்நூலில் இடம்பெற்றுள்ள 'தொண்ணூறுகளில் ஈழத்து நாவல் வளர்ச்சி' பற்றிய கட்டுரையிலுள்ள சில விவரங்கள், 'எண்பதுகளில் ஈழத்து நாவல் வளர்ச்சி' பற்றி எழுதப்பட்டுள்ள கட்டுரையில் இடம்பெற்றிருந்தாலும் அவை குழப்பத்திற்குரிய விடயமாகா என்பதும் கூர்ந்து நோக்கும்போது குறிப்பிட்ட தலைப்புகளுக்கு அவை பொருந்தக் கூடியன என்பதும் கவனிக்கத்தக்கன.

மேலும், இந்நூலிலுள்ள கட்டுரைகள் ஈழத்து நாவலின் 'வளர்ச்சி'பற்றி எடுத்துரைக்குமளவிற்கு 'வளம்' பற்றி எடுத்துரைக் கின்றன என்று கூற முடியாதுள்ளது. இந்நூலின் அடுத்துவரும் பதிப்பிலேதான் இவை சமநிலை பெற வாய்ப்பேற்படும். அவ்வாறே, ஆங்காங்கே மிகச் சுருக்கமாக அமைந்துள்ள குறிப்புக்களும் அவ்வேளை விரிவடையும் சாத்தியமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரைகளைப் பிரசுரித்த சஞ்சிகைகள், ஆய்விதழ்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள், கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் ஆகியோர் எனது நன்றிக்குரியவர்களாகின்றனர்.

சமூக நோக்குடன் எனது நூல்களை வெளியிட்டு வருகின்ற நண்பர் குமரனுக்கும் நன்றிகள் உரித்தாகுக!

**கலாநிதி செ. யோகராசா**

மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
செங்கலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## I. வளர்ச்சிப்போக்கு


1. ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றமும் எழுபதுகள் வரையான வளர்ச்சியும் : மறுமதிப்பீடு 3

2. எழுபதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள் 11

3. எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள் 21

4. எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல் : ஒரு புதிய அலை 32

5. தொண்ணூறுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்: புதிய போக்குகள் 37


## II. சிறப்பு நோக்கு


6. மட்டக்களப்பின் முதல் நாவல் : 'அரங்கநாயகி' 51

7. நாற்பதுகளில் எழுதப்பட்ட ஈழத்துநாவல் 'அனிச்ச மலரின் காதல்' 55

8. மார்க்சிய நோக்கில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்: செ. கணேசலிங்கனின் நாவல்கள் பற்றி அவதானிப்பு 60

9. ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள் : கானல், அடிமைகள் பற்றிய சிலகுறிப்புகள் 82

10. எண்பதுகளில் வெளிவந்த ஒரு நாவல்: 'மரக்கொக்கு' 89


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I
# வளர்ச்சிப்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றமும் எழுபதுகள் வரையான வளர்ச்சியும்

## மறுமதிப்பீடு

ஈழத்தின் முதல் நாவல் 1885இல் ('அசன்பேயுடைய கதை') வெளிவந்திருப்பினும் (தமிழ்நாட்டு இலக்கியத்திலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியம் வேறுபட்டதும் தனித்துவம் கொண்டிருப்பதாகும் என்ற பிரக்ஞை ஏற்பட்ட பின்பான) ஈழத்தின் முதல் நாவல் எது என்பது பற்றி நிலவுகின்ற கருத்துக்கள் (முதல் நாவல் இளங்கீரனின் 'நீதியே நீகேள்' என்பதும் முதல் யதார்த்த நாவல் செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' என்பதும் அவ்வாறான கருத்துக்களில் முக்கிய மானவை) மறுமதிப்பீட்டிற்குள்ளாகவேண்டிய நிலை காணப்படு கின்றது. ஈழத்து நாவல் வரலாற்றுப் பின்புலத்தில் இதுபற்றி அவதானிப்பது பொருத்தமானது.

ஈழத்தின் முதல் நாவல் வெளிவந்த 1885 தொடக்கம் 1905 வரையான நாவல்கள் ஒன்றில் கதைநிகழ் களங்கள் பிறநாடு சார்ந் தனவாக (எ-டு : 'அசன்பேயுடைய கதை'; 'மோகனாங்கி') அல்லது தழுவல்களாக (எ-டு : 'உசோன் பாலந்தைக் கதை') அமைந்துள்ளன.

1905இல் வெளிவந்த (சி.வை.சின்னப்பிள்ளை எழுதிய) 'வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம்' தொடக்கமே ஈழத்தைக் களமாகக் கொண்ட நாவல்கள் வெளிவருகின்றன. இவ்வழி, முதன்மைப் பெறும் அன்றைய சமூக நிலைமை சார்ந்த இந்நாவல் வர்த்தகம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் சென்ற ஒரு இளைஞனது அனுபவங்களைப் பற்றி எழுந்துள்ளது.

1905 தொடக்கம் ஏறத்தாழ 1940 வரை வெளிவந்த நாவல்கள், (1) கற்பனை சார்ந்த காதலும் வீர சாகசமும் (எ-டு : 'காந்தமலர் அல்லது கற்பின்மாட்சி' - 1936), (2) வரலாறு (எ-டு : 'விஜயசீலம்' - 1916),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) துப்பறிதலும் மர்மமும் (எ-டு : 'செல்வரத்தினம்' - 1935), (4) சமூகக் குறைபாடுகள் (எ-டு : சாதி பற்றிய இடைக்காடர் எழுதிய 'நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்', சீதனம், மதுபானம், தீயோர் நட்பு பற்றி ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய 'துரைத்தினம் நேசமணி' - 1927/28), (5) சமகாலச் சமூக நிலைமையைப் பிரதிபலித்தல் (எ-டு : கிறிஸ்தவ மத மாற்றம் பற்றி மங்களநாயகம் தம்பையா எழுதிய 'நொருங்குண்ட இருதயம்', கிறிஸ்தவ மத மாற்றத்தைக் கண்டித்து ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய 'கோபால நேசரத்தினம்'), (6) தழுவல் (ஏரம்ப முதலி எழுதிய 'அரங்க நாயகி'), (7) மொழிபெயர்ப்பு (ஈழகேசரியில் வெளிவந்த ரஷ்யநாவல் மொழி பெயர்ப்பான 'துர்க்கனேவ்' முதலான பல படைப்புகள்) என்பன சார்ந்தனவாக வெளிப்பட்டன.

(தழுவல், மொழிபெயர்ப்பு முயற்சிகள் தவிர்ந்த) மேற்கூறியவை அனைத்தும் அறப்போதனை செய்வதைத் தலையாய நோக்கமாக (அல்லது தலையாய நோக்கங்களுள் ஒன்றாக)க் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாவல் எழுதப்படுவது அதற்காகவே என்பது அக்கால நாவலாசிரியர் அனைவரதும் அபிப்பிராயமாகும். ஆரம்பகால நாவலாசிரியர்களுள் ஒருவரான சி.வை.தாமோதரம்பிள்ளை இவ்வாறு எழுதியுள்ளமை இவ்வேளை கவனிக்கத்தக்கது :

> உலகத்தில் மக்களது அறிவு விருத்திக்குக் காரணமாயுள்ளவை நூல்களேயாகும். இந்நூல்கள் நீதிகள், ஒழுக்கங்கள் முதலிய வற்றைக் கூறுவனவும் கதை ரூபமாக அவற்றை விளக்குவனவுமாக இரு வகைப்படும். தீவிர அறிவு வாய்ந்தவர்களுக்கேயன்றிச் சாதாரண அறிவுள்ள பொதுமக்கள் எவர்களுக்கும் நீதிநெறிகளை நேரே கூறும் நூல்களிலும் பார்க்கக் கதைகள் மூலமாக அவற்றைக் கூறும் நூல்கள் எளிதில் உணரக் கூடியனவாயிருக்கின்றன. இதுபற்றியே முற்காலத்தில் புராணங்களும் காப்பியங்களும் அறிஞரால் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், அவைகள் செய்யுள் வழக்கில் இருந்தமையால் அவற்றைப் பொது மக்கள் அறியும்படி விளக்கிக் கூறக் கல்வியறிவுள்ள மற்றொருவரின் உதவி வேண்டப்படுவதாயிருந்தது. இதனால் பிற்காலத்தில் செய்யுள் வழக்கின்றி வசனரூபத்திலும் நூல்கள் ஆக்கப்படுவனவாயின. இவ்வாறாக்கப்படும் வசனநூல்களின் கதைகள் சில உண்மையான வைகளாகவும் சில கற்பிதங்களாயும் இருக்கும். கற்பிதங்களாக எழுதப்படும் நூல்கள் தற்போது நவல் என்றும் ஆங்கில பதத்தால் வழங்கப்படுகின்றன.

மேற்கூறிய நோக்கத்திற்கமைவாக எழுந்துள்ள இக்கால கட்ட ஈழத்து நாவல்களிலே காவியப் பண்புகள் இடம்பெற்றிருப்பது வியப்பிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதன்று, முற்குறிப்பிட்டவாறு அறம் முக்கியம் பெற்றிருப்பதோடு, காவியப்பாங்கான வர்ணனைகள், நீதிச் செய்யுள்கள், நீதி சார்ந்த மேற்கோள்கள் என்பன பரவலாக இடம்பெறுதல், காவியப் பண்புகொண்ட பாத்திர வார்ப்பு எனப் பலவிதங்களிலும் காவியத்தாக்கம் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்ட நாவல்களுள் இன்று பின்நோக்கிப் பார்க்கின்ற போது நாவலாசிரியர் இருவரது நாவல்கள் விதந்துரைக்கப்பட வேண்டியனவாகவுள்ளன. இவர்களுள் முதன்மையாவர், மங்கள நாயகம் தம்பையா. இவரெழுதிய 'நொருங்குண்ட இருதயம்' சமகாலச் சமூக நிலைமைகளை (கிறிஸ்தவ மதமாற்றம் முதலியன) முதன் முதலாகச் சிறப்பாகச் சித்திரிக்கின்ற நாவலாகின்றது. அதுமட்டுமன்றி இந்நாவலின் இரு பெண்பாத்திரப் படைப்புகளை (பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற கண்மணி, துணிவும் புத்தி சாதுர்யமும் ஆண்களுக்கே ஆலோசனை கூறுகின்ற நுண்மதியும் கொண்ட பொன்மணி ஆகியோரை) சமகால தமிழக நாவல்களிலும் காண்பதரிது. (சமகாலத்தில் மட்டுமன்றி இன்று பார்க்கின்ற போதும் அவை வியப்பளிக்கின்ற பாத்திர வார்ப்புகள்.)

மற்றொரு நாவலாசிரியர், ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை. இவர் 'உலக பலவிதக் கதைகள்' என்ற பெயரில் 'காசிநாதன் நேசமலர்' (1924), 'கோபால நேசரத்தினம்' (1926 - 27), 'துரைரத்தினம் நேசமணி' (1927 - 28) ஆகிய மூன்று நாவல்களை எழுதியுள்ளார். இவற்றுள் முதல்நாவல் சமயநோக்கும் அடுத்த நாவல்கள் சீர்திருத்த நோக்கு முடையவை. ஏனைய சமகால நாவல்களுடன் ஒப்பிடும்போது எளிமையான நடை, கதையூடாக வாசகரைக் கவர்கின்ற தன்மை முதலான இயல்புகள் இந்நாவல்களில் இடம்பெற்றுள்ளன. இத்தியாதி காரணங்களால் தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் நூலின் இணை ஆசிரியர்கள்,

> திருஞானசம்பந்தப் பிள்ளையின் இந்த நாவல் முயற்சி (கோபால நேசரத்தினம்) ஈழத்துப் பின்னணியில் ஒரு முக்கியமான திருப்பம் என்று சொல்ல வேண்டும். இதைத் தொடர்ந்து எழுதிய 'துரைரத்தினம் நேசமணி' என்ற நாவலையும் அன்றைய யாழ்ப் பாணச் சமுதாயத்திற் கண்ட மதமாற்றம், சீதனக்கொடுமை, சாதிப்பிரச்சினை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு நடப்பியல் ரீதியில் யாழ்ப்பாண மக்களின் பேச்சுத் தமிழை உபயோகித்து திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதினார்" என்று கணிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், ஈழத்து ஆய்வாளர் சிலர் மேற்கூறிய நாவல்களைக் கவனிக்காமற்போலும், இடைக்காடர் எழுதிய "நீலகண்டன் ஒரு சாதி வேளாளன்" நாவலை முதன்மைப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க விடயமொன்றுள்ளது. ஈழத்து நாவல்களிலே மேற்கூறியவாறு ஈழத்துப் பிரச்சினைகள் இடம் பெற்றிருப்பினும் ஈழம் என்ற உணர்வு எழுந்தமை காரணமாக அவை பேசப்பட்டன என்பதற்கில்லை; யதார்த்தப் பண்பும் முழுமையான விதத்தில் வெளிப்பட்டுள்ளன என்று கூறுவதற்குமில்லை.

1940 தொடக்கம் 1950 வரையான நாவல்களில் கிராமியம் அல்லது பிரதேச மணம், அனுபவ வெளிப்பாடு முதலான பண்புகள் புதிதாக முகிழ்க்கத் தொடங்கின. அ.செ.முருகானந்தத்தின் 'வண்டிற்சவாரி' (1944), 'புகையில் தெரிந்த முகம்' (1950) முதலானவை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன. காவியச் செல்வாக்கிலிருந்து ஈழத்து நாவல் மெல்ல விலகி, யதார்த்த சூழலுக்கு மாறுகின்ற நிலையும் இவ்வேளை உருவாக ஆரம்பித்தது.

பலராலும் கவனிக்கப்படாத, இக் காலகட்டத்திற்குரிய 'அனிச்சமலரின் காதல்' என்றொரு நாவல் பற்றி இவ்வேளை குறிப்பிடுவது அவசியமாகின்றது. (நூல் வடிவில் 1953இல் வெளிவந்திருப்பினும்) கையெழுத்துப் பிரதியாக 1942/43இல் உருப்பெற்ற இந்நாவலின் ஆசிரியர் வே.தில்லைநாதன் பின்வருமாறு தமது முன்னுரையில் குறிப்பிடுவது கவனத்திற்குரியது :

> 'I always hold the view that any writing to be of any value to society should be realistic and tackle human problems'

இந்நாவலாசிரியர் கவனத்திற் கொண்டுள்ள பிரச்சினை வித்தியாசமானதாகவும், சமகாலச் சமூகத்தில் நடைபெற்று வந்துள்ளதொன்றாகவும் விளங்குகின்றது. அதுபற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

> முக்கியமாக பெண்ணுக்கு விருப்பமில்லாத சடங்கு செய்கிற கொள்கையை முறியடிக்கிறதே இப்புஸ்தகத்தின் நோக்கம். என்னுடைய அனுபவத்திலும் பத்திரிகை வாயிலாகவும் வேறு நேராகவும் எத்தனையோ தற்கொலைகள் நடைபெற்றதை அறிந்தேன். உதாரணமாக என்னிடம் கற்ற ஓர் மாணவனும் காதலித்த பெண்ணும் தங்கள் பெற்றோர் தங்கள் சடங்கிற்கு அனுமதி கொடாத காரணத்தால் ஒரு கிணற்றில் வீழ்ந்து உயிரை நீக்கிவிட்டார்கள். இவ்விதமான நிகழ்ச்சிகள் தமிழ் மக்களுக்குள் மட்டுமல்ல சிங்கள மக்களுக்குள்ளும் நடைபெறுகிறதை ஒவ்வொரு வாசகரும் அறிந்த காரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய விதத்தில் இன்றைய பெண்நிலைவாத நோக்கிலும் இந்நாவல் முக்கியம் பெறுவது கண்கூடு.

தவிர, (1953இல் நூலுருப்பெற்ற) இந்நாவலிலேயே "நாவல்" என்றால் யாது என்பது பற்றிய (பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய) பொருத்தமான விளக்கம் ஈழத்து நாவல்களுள் முதன் முதலாக இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் ஏறத்தாழ 1950கள் வரையும், ஈழத்தில் காவியப் போக்கிலிருந்து விடுபட்டு முழுமையான யதார்த்தப் பாங்குடைய நாவல்கள் எவையும் ஏன் வெளிவரவில்லை என்றொரு கேள்வி இவ்வேளை எழுகின்றது. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த இலக்கியத் தரமான நாவல்களெவையும் ஈழத்து வாசகர்களுக்குக் கிடைத்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. இச்சூழலில் தமிழ்நாட்டி லிருந்து இங்கு வந்து சேர்ந்த தரமற்ற நாவல்களுக்கு ஈழத்து நாவலாசிரியர் மத்தியில் பெருமளவு எதிர்ப்பும் காணப்பட்டது. இதுபற்றி ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை ஒரு தடவை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் :

> சென்னை முதலாம் இடங்களிற் பிரசுரமாகும் காமசிருங்கார வர்ணனையோடு கூடிய கற்பனா சரித்திரங்களை மிக்க ஆவலோடு வாங்கிப் படிக்கும் இங்குள்ள ஆடவர் மகளிர் அவற்றையொழித்து சற்போதம் பயக்கும் இந்நூலை ஆர்வத்தோடும் ஏற்றுப் படித்துப் பயனடைதல் சாலவும் நன்றாம்.

மேலும், எமது நாவலாசிரியர்கள் தமிழ்நாட்டு ஆரம்பகால நாவலாசிரியர்கள் போன்று தமிழிற்கு புதிய இலக்கிய வடிவங்களை அறிமுகம் செய்ய வேண்டுமென்று எண்ணமுடையவர்களாக விளங்கினரென்பதற்கில்லை; மேலைத்தேயச் சிறந்த நாவல்களைத் தேடி வாசிக்கமுற்பட்டனரென்பதற்குமில்லை; நாவலாசிரியரொ ருவரே இவ்வாறு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது :

> இதுவரை ஆரணி குப்புசாமி முதலியார், புனா வாசுதேவராவ் கேய்க்வார் முதலிய தமிழ்ப் பூஷணங்களால் எழுதப் பெற்று வெளிவந்துள்ள அரிய பெரிய நாவல்களைக் கண்ணுற்றே யானும் நாவல்களைப் பகுத்தறியும் தன்மை பெற்றேனேயன்றி உண்மை யில் தமிழ் மிகப் படித்தவனல்லன்.

மேற்கூறியவாறான ஆரோக்கியமற்ற நிலைமைகள் 1950 களிலிருந்தே மாற்றமுறத் தொடங்கின. இக்கால ஈழ அரசியல், சமூக மாற்றங்கள் - 1956 இல் சிங்கள மொழிச் சட்டம், 1958இல் ஏற்பட்ட இனக்கலவரம் - எழுத்துலகையும் பாதித்தன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இச்சூழலில் "ஈழத்து இலக்கியம்" பற்றிய உணர்வு ஈழத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் மத்தியில் முகிழ்ப்பதற்கேற்ற விதத்தில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டமை இன்று வரலாறாகிவிட்டதொரு விடயம். இத்தகைய சூழலிலேதான் இக்காலப்பகுதியில் வெளிவந்த (இளங்கீரனின்) 'நீதியே நீ கேள்' (1959) நாவல் ஈழத்தின் முதல் நாவல் என்று ஆய்வாளர் சிலரால் கணிக்கப்பட்டது. எனினும் அந்நாவலின் யதார்த்தப்பாங்கு எத்தகையது என்பது பற்றிய கேள்வி அவ்வேளை எழுப்பப்படவில்லை.

ஆயினும், இன்று பின்நோக்கிப் பார்க்கின்றபோது குறிப்பாக, யதார்த்தப் பாங்குடைய ஈழத்து நாவல் என்ற விதத்தில் 'நீதியே நீ கேள்' நாவலைவிட அதற்கு முன்பே வெளிவந்த (கனகசெந்திநாதன் எழுதிய) 'விதியின் கை' கவனிக்கப்பட வேண்டியதொன்றாகின்றது. இந்நாவல் பற்றி இளங்கீரன் எழுதியுள்ள மதிப்புரை இவ்வேளை எமது கவனத்தைக் கோரியுள்ளது. அது வருமாறு :

> ஈழத்து இலக்கிய உலகிலே சிறுகதை எழுத்தாளர்கள் மிகுதி. நாவல் எழுத்தாளர்கள் மிக மிகக் குறைவு. அதிலும் கிராமத்தை அடிப்படையாக வைத்து நாவல் எழுதுவோர் இல்லை என்றே சொல்லிவிடலாம். இப்படியான காலகட்டத்தில் கனக.செந்தி நாதன் ஒரு கிராமந்தர நாவலை எழுதத் துணிவு கொண்டமை மெச்சக் கூடியதே.
>
> நகர்ப்புறத்து எழுத்தாளர் கிராமத்தைப் பற்றிச் சிந்திப்பதே யில்லை. அப்படி ஏதாவது சிந்தித்து எழுதினாலும் அவை செயற்கைத் தன்மை உடையதாகவே இருக்கின்றன. குரும்பசிட்டி என்னும் அசல் கிராமத்திலே பிறந்து வளர்ந்த கனக.செந்தி-நாதனாலேதான் கிராமத்தின் வளர்ச்சியை, கிராமத்து மக்களின் உணர்வு ஓட்டங்களை, நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்சங்-களைச் சரியானபடி காட்டமுடியும்.
>
> மமதை பிடித்த பொன்னம்பலவாணரை, சகுனி நல்ல தம்பிக் கிழவனாரை, சண்டியன் வீடி மூர்த்தியை, நொண்டிக் கணபதியை இப்போதும் நிச்சயமாகக் கிராமங்களில் காணலாம்.
>
> கிராமத்துப் பாடசாலையின் படிப்பிடிப்பும் அங்கு நிகழும் தூய்மையான காதலும் கிராமச்சங்கத் தேர்தலும் தாளக்காவடி ஆட்டமும் இந்நாவலுக்கு உயிர் ஊட்டுகின்றன.
>
> இந்நாவலில் வரும் நொண்டிக்கணபதி மறக்க முடியாத பாத்திரம். படிப்பு வாசனையற்ற அந்த ஹரிசனக் கிழவன் தனக்கு இன்னா செய்தவனுக்கும் இனியவே செய்து மன்னித்து உயர்த்து நிற்கின்றான்.
>
> இதில் கதாநாயனாக வரும் மாசிலாமணி ஒரு ஆசிரியர். வளைவு சுளிவு இல்லாத ஒரு முற்போக்கு வாதி. பழைய நிலப்பிரபுத்துவ அமைப்பிலிருந்து விடுபட்டு புதிய வாழ்க்கையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மேற்கொள்ளத்துடிக்கும் கிராமத்தின் பிரதிநிதி. வளர்ந்து வரும் மாறிவரும் கிராமிய உணர்ச்சிகளின் எதிரொலிதான் மாசிலாமணி. துணைப் பாத்திரங்களைத் தத்ரூபமாகவும் முழுமையாகவும் ஆசிரியர் படைத்துள்ளார்.

மேற்கோள் நீண்டு விட்டதாயினும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விடயங்கள் பலவுள்ளமை காரணமாக அது முக்கியம் பெறுவது அதனை நுணுகி நோக்கும்போது புலப்படுமெனலாம்.

இதன்பின் வெளிவந்த நாவல்களுள் (இளங்கீரன் 1955இல் எழுதிய) 'தென்றலும் புயலும்' கவனத்திற்குரிய படைப்பாகின்றது. ஈழத்தின் முக்கியமான பிரச்சினைகளுளொன்றான சாதிப்பிரச்சினை பற்றிப் பேசுகின்ற முதல் ஈழத்து நாவலாக அது விளங்குகின்றது. மார்க்சிய நோக்குடைய முதல் நாவலாகவும் காணப்படுகின்றது.

'தென்றலும் புயலும்' நாவலின் விரிவாகவே 'நீதியே நீகேள்' முகிழ்த்துள்ளது என்பதில் தவறில்லை. ஆயினும் மிகுதியான பிரச்சாரமும், பேச்சுவழக்கு முரண்பாடுகளும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன. இவற்றின் தர்க்கரீதியான விளைவாக யதார்த்தப்பாங்கு குன்றியுள்ளது.

மேற்கூறிய இரு நாவல்களும் மார்க்சிய நோக்கில் அத் தத்துவத்திற்கேற்ப திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நாவல்களாகப் பரிணமித்தமை காரணமாக கலாபூர்வமான படைப்புகளாக அமையாமையும் கவனிக்கத்தக்கது. இவ்வடிப்படையில் இவ்விரு நாவல்களையும்விடக் கவனத்திற்குரியதொரு நாவலாக (1965இல் வெளிவந்த செ.கணேசலிங்கனின்) 'நீண்ட பயணம்' அமைகின்றது.

'நீண்ட பயணம்' வருவதற்கு முன் (1960) எழுதப்பட்டு, (1964ல்) வெளிவந்த, போதியளவு கவனத்திற்குட்படாத (மு.தளையசிங்கத்தின்) 'ஒரு தனிவீடு' என்ற நாவலின் வரவும் இக்காலகட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. புங்குடுதீவு கிராமத்தைக் களமாகக் கொண்டுள்ள இந்நாவலின் முதற்பாகம் அவ்வாறான வாழ்க்கையில் ஏற்படுகின்ற பொருளாதார ரீதியான மாற்றங்களையும் கொழும்பு கடை வியாபாரம் காரணமாக உயர்ந்துவிட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சேதாவிற்கும் அவ்வாறான நிலையை அடைய முடியாது கடகம் இழைத்தல் முதலான வேலைகளைச் செய்துவருகின்ற சிங்கராசன் என்ற இளைஞனுக்குமிடையில் உருவான காதலின் தோல்வியையும் கலாபூர்வமாக சித்திரிக்கின்றது. பேச்சுமொழியும் பாத்திர வார்ப்புகளும் தத்ரூபமாக விளங்குகின்றன. இரண்டாம் பாகம், சமகால அரசியல் நிகழ்வுகளுக்கு (1958 இனக்கலவரம்) முதன்மை கொடுக்கின்றது. கொழும்பில் கடைவைத்திருந்த சேதாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் இனக்கலவரச் சூழலில் கொல்லப்படுவதும் சேதா ஊருக்கு வருவதும் சிங்கராசன் அவளுக்கு மறுவாழ்வு கொடுப்பதும் ஒருபுறமாக, அன்று உருவான அரசியல் சூழலில் தமிழரைப் பொறுத்தவரையில் எதிர்கால வாழ்வு தனிநாட்டுக் கோரிக்கையில் சென்று முடியுமென்பதைத் தூரப்பார்வையோடு வெளிப்படுத்துவதாக நாவல் முடிவுறுகின்றது. (ஒரு தனி வீடு என்பது ஒரு தனி நாடு என்பதன் குறியீடு). இந்நாவல் அச்சுருவில் வெளிவரத் தாமதமானமையாலோ இடதுசாரி அணியினரின் தேசியம் பற்றிய புரிதலை விமர்சிப்பதனாலோ என்னவோ ஆரம்பகால ஈழத்து விமர்சகர்கள் இந்நாவல் பற்றி எதுவும் பேசினரல்லர். அது எவ்வாறாயினும் ஈழத்தின் சமகால அரசியல் பற்றிப்பேசும் முதல்நாவல் இதுவென்பதில் தவறில்லை.

'தென்றலும் புயலும்' நாவலை விட மார்க்சிய நோக்குடைய, சாதிப் பிரச்சினையைக் கூர்மைப்படுத்துகின்ற (செ.கணேசலிங்கனின்) 'நீண்டபயணம்' ஒப்பீட்டு ரீதியில் யதார்த்தபாங்கு, பேச்சுமொழி, பாத்திரவார்ப்பு முதலான அம்சங்களில் சிறந்து விளங்குகின்றது. 'சடங்கு' (1967), யாழ்ப்பாண நிலவுடைமைச் சமூகம் அனுட்டிக்கின்ற (திருமண, இறப்புச்) சடங்குகளின் போலித்தன்மைகளை நுணுக்கமாகவும் ஓரளவு கலாபூர்வமாகவும் வெளிப்படுத்துகின்றது. தரையை மறந்து தாரகைகளைப் பிடித்து மாலையாக்க விரும்பும் மத்தியதர வர்க்கத்தினரின் உணர்ச்சியையும் வாழ்வையும் யதார்த்தமாகக் காட்டக் கூடியதாக வெளிப்படுகின்றது 'தரையும் தாரகையும்' (1968). ஓரளவு செயற்கைத் தன்மை இழையோடினும் ஈழத்து சமகால அரசியலைப் (எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா காலம்) பெருமளவு முதன்மைப்படுத்துகின்ற முதல் நாவலாகச் 'செவ்வானம்' (1967) விளங்குகின்றது.

ஆக, 1950 தொடக்கம் 1970 வரையான காலகட்டத்திலேதான் யதார்த்த பூர்வமான, ஈழத்து சமூக, அரசியல் பிரச்சினைகளை ஆழமாக நோக்குகின்ற, தத்துவார்த்தப் பார்வை கொண்ட நாவல்கள் ஈழத்தில் வெளிவருகின்றன. இவ்விதத்தில், கனக செந்திநாதன், மு.தளையசிங்கம், இளங்கீரன், செ.கணேசலிங்கன் ஆகியோர் முதன்மை பெறுகின்றனர்; ஈழத்து நாவல் முன்னோடிகளாகின்றனர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# எழுபதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்

சமகால ஈழத்துத் தமிழ்நாவலிலக்கிய வரலாற்றில் ஏழாம் தசாப்தம் புதிய கால கட்டமொன்றைக் குறிக்கிறது. முதன்முதலாக வர்த்தக நோக்கில் நிறுவன அடிப்படையில் மாதாந்த நாவல்கள் வெளியிடும் முயற்சியானது இக்காலப் பகுதியின் முக்கிய பண்பாக விளங்குவது மட்டுமன்றி, ஈழத்து நாவல் வளர்ச்சிப் போக்கில் சில குறிப்பிடத்தக்க பாதிப்புக்களையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

'வீரகேசரி', 'ஜனமித்திரன்' வெளியீட்டு முயற்சிகள் இவ்விதத்தில் விதந்துரைக்கத்தக்கன. தமிழகச் சஞ்சிகைகளுக்கும் நூல்களுக்கும் 'ராணிமுத்து' வெளியீடுகளுக்கும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடும், இதனால் ஈழத்தின் பெரும்பாலான வாசகர் மத்தியில் ஏற்பட்ட தவிப்பும், 'வீரகேசரி' மாதமொரு புத்தகம் வெளியிடும் முயற்சியை ஆரம்பிக்கவும் தொடர்ந்து நடத்திவரவும் ஏற்ற சூழ்நிலையை உருவாக்கின. 'வீரகேசரி'யின் வெற்றியைத் தொடர்ந்து 'மாணிக்கம்' 'சிரித்திரன்' முதலியனவும் வெளியீட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இவற்றின் விளைவாக ஈழத்திலே ஒருபுறம் பொழுதுபோக்கு நாவல்களும், மறுபுறம் யதார்த்த நாவல்களும் எழத் தொடங்கின. இதுவும் ஒரு காரணமாக, ஏறத்தாழ எழுபதுகள் வரையில் ஈழத்து நாவலுலகில் காணப்பட்ட தனித்துவப் போக்குகள் செல்வாக்கிழப் பதையும் அவதானிக்க முடிகிறது; அத்துடன் புதிய சில போக்குகளும் இடம்பெறத் தொடங்கின.

எழுபதுகள் தொடக்கம் வெளிவந்துள்ள நாவல்களை மேற்குறித்தவாறு பொழுதுபோக்கு நாவல்கள், யதார்த்த நாவல்கள் என இருபெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஆயினும் இவற்றை மேலும் இரு பிரிவுகளாகப் பாகுபடுத்திப் பார்ப்பது பொருத்த முடையது. இவ்விதத்தில் பொழுதுபோக்கு நாவல்களை (அ) குடும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்கள் (ஆ) துப்பறியும் / மர்ம நாவல்கள் என்றும், யதார்த்த நாவல்களை (அ) பிரதேச அல்லது மண்வாசனை நாவல்கள் (ஆ) சமுதாய பிரச்சினைகளையும், சமுதாய மாறுதல்களையும் பிரதி பலிக்கின்ற நாவல்கள் என்றும் பிரித்து நோக்கவியலும்.

குடும்ப நாவல்கள் என்ற பிரிவினுள் அடங்குபவை 'பூசைக்கு வந்த மலர்' (நா.பாலேஸ்வரி), 'புயலுக்குப் பின்' (பொ. பத்மநாதன்), 'தீக்குள் விரலை வைத்தால்' (கே.எஸ்.ஆனந்தன்), 'கர்ப்பக்கிருகம்' (கே.எஸ். ஆனந்தன்), 'நீலமாளிகை' (சிவம்பொன்னையா), 'ஒரு விலைமகளைக் காதலித்தேன்' (இந்துமகேசன்), 'அஞ்சாதே என் அஞ்சுகமே' (ரஜனி), 'வாழ்க்கைப் பயணம்' (நயீமா ஏ.பஷீர்), 'உள்ளத்தின் கதவுகள்' (அன்னலட்சுமி இராசதுரை) முதலியன. காதல், பாசம், தியாகம் முதலிய உணர்ச்சிகளின் தீவிர மோதுதலே இவற்றின் அடிப்படை; கதை பின்னும் திறமையும் விறுவிறுப்பாக எழுதும் ஆற்றலும் இவ்வாசிரியர்களுக்கு கைவந்த கலை. குடும்ப நாவல்கள் என்று கூறினாலுங்கூட உண்மையில் மர்மநாவல்களுக்குரிய பண்புகளையே இவற்றுள் பெரும்பாலானவை (உள்ளத்தின் கதவுகள் தவிர) கொண்டுள்ளன. பெற்றோர் யாவரென்றறியாது தேடிப் புறப்படும் ஜனார்த்தனி (பூஜைக்கு வந்த மலர்), பார்வதி (புயலுக்குப் பின்) முதலிய கதாபாத்திரங்களையும், இவர்களது செயல்களையும் வாசிக்கும்போது இந்நாவலாசிரியர்கள் சிறந்த மர்ம நாவல்கள் எழுதும் ஆற்றல் பெற்றிருப்பது புலனாகும். சுருங்கக்கூறின், இந்நாள் வரையிலான தமிழகச் சஞ்சிகைகள், 'கல்கி', மு.வ.,மணியன், நா.பார்த்தசாரதி முதலியோரது நாவல்கள் வாசிப்பினதும், தமிழகத் திரைப்படங்கள் பார்க்கும் பழக்கத்தினதும் ஒன்று சேர்ந்த அறுவடையே இந்நாவல்களாகும்.

'பழம் பெரும் எழுத்தாள'ராகிய 'ரஜனி' (கே.எஸ்.வாஸ்) யின் நாவல்கள் (விதியின் வழியிலே, தாரணி, மைதிலி) பலவும், அருள் செல்வநாயகம் (மர்ம மாளிகை), கே.எஸ்.ஆனந்தன் முதலியோரது நாவல்களுள் சிலவும், ஜன - மித்திரன் வெளியீடுகளும் துப்பறியும்/ மர்ம நாவல்களாக விளங்குகின்றன. சிரஞ்சீவி, மேதாவி, தமிழ்வாணன் முதலியோரது நாவல்களுக்கு எவ்விதத்திலும் சோடை போகாத வண்ணம் இவை அமைந்துள்ளன. ஈழத்தில் இத்தகைய நாவல்கள் அதிகமெழுதிய ஒருவராகவும் ஒரு காலகட்டத்தில் (தொடர்கதைகள் மூலம்) ஈழத்தில் வாசகர் தொகையைப் பெருக்கியவர்களில் ஒருவராகவும் வாஸ் விளங்குகின்றார். நீண்டகாலமாக வரலாற்று சிறுகதைகளும் நாவல்களும் எழுதிவந்த அருள் செல்வநாயகம் காலப்போக்கில் மர்ம நாவலாசிரியராக மாறியமை தற்செயல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வன்று; இயல்பானதொன்றாகும். மேலைத்தேயத்தில் துப்பறியும் மர்ம நாவல்கள் தோன்றிய காலகட்டத்தை அடுத்தே வரலாற்று நாவல்கள் தோன்றின. அத்துடன் இவ்விருவகை நாவல்களுக்கு மிடையில் பண்படிப்படையில் பெருமளவு வேறுபாடுகளில்லை. இதனால் மேலைநாட்டில் வரலாற்று நாவலாசிரியர்கள் பலரும் துப்பறியும் நாவலாசிரியராகவும் அமைந்தனர். தமிழக வரலாற்று நாவலாசிரியர் ஒருவர் மர்ம நாவலாசிரியராக விளங்குவதற்கு தமிழகத்தில் சிறந்த எடுத்துக்காட்டு 'ஜெகசிற்பியன்' என்றால், இங்கு அருள் செல்வநாயகத்தைக் குறிப்பிடலாம். (மர்ம நாவல்களும், வரலாற்று நாவல்களும் பெருமளவு தோன்றிய காலகட்டத்தில் 'கல்கி' வாழ்ந்தமையினால் அவரது வரலாற்று நாவல்கள் மட்டுமின்றிப் பல சமூக நாவல்கள் கூட மர்ம நாவல்களின் பண்புகளைப் பெற்றிருந்தன.) இவ்வாறே, துப்பறியும் நாவலாசிரியராகிய 'ரஜனி' அவ்வப்போது வரலாற்று நாவல்கள் எழுதுவதையும் (உ-ம் : ஆஷா) அவதானிக்க முடியும்.

அடுத்து, யதார்த்த நாவல்களுள் ஒரு பிரிவாக அமையும் மண்வாசனை நாவல்கள் அல்லது பிரதேச நாவல்கள்-பற்றிக்குறிப்பிட வேண்டும். 'வீரகேசரி' வெளியீட்டு முயற்சி வர்த்தக நோக்கில் செயற்பட்டாலுங் கூட, அவ்வப்போது புதிய இளம் எழுத்தாளரது நாவல்களும் ஓரளவு தரமான சில நாவல்களும் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதே. இத்தகைய புதிய எழுத்தாளர்கள் தத்தம் பிரதேசங்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதுவதும் எதிர் பார்க்கக் கூடியதுதான். இவ்விதத்தில் 'நிலக்கிளி' (பாலமனோகரன்) யும், 'யுகசந்தி' (மணிவாணன்), 'வாடைக் காற்று' (செங்கை ஆழியான்) முதலியனவும் புதியதொரு போக்கின்- மண்வாசனை அல்லது பிரதேசநாவல்களின் - தொடக்க நிலையினைக் குறித்து நிற்கின்றன என்று கூறலாம். முறையே தண்ணீரூற்றுப் பிரதேசத்தையும் தர்மபுரத்தினையும் நெடுந்தீவையும் இவை களமாகக் கொண்டுள்ளன.

இவற்றுள் 'நிலக்கிளி'யே ஓரளவு விதந்துரைக்கத்தக்கது. தண்ணிமுறிப்புக் காடுகளின் சூழலோடும், பிரதேசத்தோடும் இரண்டறக் கலந்து உருவாகியுள்ளன, நாவலில் வரும் பதஞ்சலி, கதிர்காமன், பாலியர்,மலையர் முதலியோரது இயல்புகள். ஆனால் 'வாடைக்காற்'றில் நெடுந்தீவு மக்களது வாழ்விற்கும், சுற்றாடலுக்கு மிடையில் நெருங்கிய பிணைப்பைக் காணமுடியவில்லை. எனினும், 'யுகசந்தி'யுடன் ஒப்பிடும் போது 'வாடைக்காற்று' முதன்மை பெறுகிறது. 'யுகசந்தி'யில் தருமபுரத்தின் சூழலைத் தவிர்த்து வெறுமனே கதைகூறும் நோக்கே ஆசிரியரை முன் நடத்துகிறது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலின் இறுதிப் பகுதியில் நிகழும் சம்பவங்களும் முடிவும் நம்பமுடியாதவை மட்டுமின்றி, திரைப்படத்தினை நினைவூட்டுவன வாகவுமுள்ளன. பெற்றோரைத் தேடி அலையும் 'புயலுக்குப் பின்', 'பூசைக்கு வந்த மலர்' கதாநாயகிகள் போன்று 'யுகசந்தி'யின் கதாநாயகனும் அமைந்துள்ளான்; ஈழத்துக் குடும்ப நாவல்களின் கதாபாத்திரங்கள் எல்லாம் அனாதைகளாக இருப்பது அவர்களின் தலைவிதி போலும்.

இம்மூன்று நாவல்களும் (குறிப்பாக 'நிலக்கிளி') புதிய பிரதேசங்களின் மக்களது வாழ்வைப் பின்னணியாகக் கொண்டுள்ளன என்ற விதத்தில் மண்வாசனை நாவல்களென்றும், வாசகர்களுக்குப் புதிய அனுபவங்களைத் தருகின்றன என்றும் சிலரால் பாராட்டப்படு கின்றன. உண்மையில் இது சற்று மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகும். மண்வாசனை என்பது வெறுமனே இயற்கை வர்ணனைகளோ புவியியல் விபரங்களோ மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேச மக்களது வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், சடங்குகள், பேச்சுவழக்குகள் என்பனவற்றையும் உள்ளடக்கும்; இவைகள் மானிடவியலாளனது தரவுகளாகாவண்ணம் அமையவேண்டும். (நீல பத்மநாதனது 'தலைமுறை'களின் பலவீனம் இதுவாகும்.) நாவல் பாத்திரங்களும் இயல்புகளும் நாவலோட்டமும் கதையும் கதைவளர்ச்சியும் இவற்றோடு இரண்டறக் கலந்திருக்க வேண்டும். (தி.ஜானகிராமன், ஆர்.சண்முகசுந்தரம், நீல பத்மநாதன், ஹெப்சிபா ஜேசுதாசன் முதலியோரது நாவல்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.) ஆனால், மேற்குறித்த ஈழத்து நாவல்களில் பெரும்பாலும் சுற்றாடல் விபரங்களே - அவையும் ஓரளவே - இடம் பெறுகின்றன. மேலும், நாவலின் களம், பாத்திரங்களின் இயல்புகள், செயல்கள் என்ப வற்றோடு ஒன்றாமல் அவை விடுபட்டு நிற்கின்றன என்பதை மனங்கொள்ள வேண்டும். ஆயினும், இதுவரையும் கொழும்பு முதலிய நகரங்களையோ குறிப்பிட்ட யாழ்ப்பாணத்துக் கிராமங்களையோ அங்குள்ள மக்களது பிரச்சினைகளையோ முதன்மையாகக் கொண்டு முக்கியத்துவம் கொடுத்துச் சித்திரித்த போக்கானது மாற்றமடைந்து, (பிரச்சினைகட்கு முக்கியத்துவம் கொடுக்காது) புதிய பிரதேச மக்களது சாதாரண வாழ்வினைச் சித்திரிக்கும் போக்குத் தொடங்குவதை அவதானிக்கலாம்.

யதார்த்த நாவல்களுள் சமூகப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நாவல்களாக 'காலங்கள் சாவதில்லை' (தெளிவத்தை ஜோசப்), 'சீதா' (சொக்கன்), 'மீட்டாத வீணை' (ஏ.ரி.நித்திய கீர்த்தி), 'மழைக்குறி' (சி.சுதந்திரராஜா) முதலியனவும், பிரச்சினைகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய மாற்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் நாவல்களாக 'விடிவை நோக்கி' (தெணியான்), 'பஞ்சமர்' (டானியல்), 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' (அருள் சுப்பிரமணியம்), 'குமாரபுரம்' (பால மனோகரன்) 'பிரளயம்' (செங்கை ஆழியான்) ஆகியனவும் இக் காலப் பகுதியில் வெளிவந்துள்ளன. ('செல்லும் வழி இருட்டு', 'தூரத்துப் பச்சை' என்பன எழுபதுகட்கு முன்பே பிரசுரிக்கப்பட்டிருந்தன).

இவற்றுள். 'பஞ்சமர்' சாதிப் பிரச்சினையைப் பொருளாகக் கொண்டுள்ளது. 'பஞ்சமர்' ஒரு நாவலுக்குரிய கதைச் செறிவையோ அமைப்பையோ ஓட்டத்தையோ பெற்றிருக்கவில்லை; மொத்தத்தில் ஒரு நாவலே அன்று; தனித்தனியான அனுபவங்கள் அல்லது தனித்தனிக் கதைகள் சிலவற்றின் தொகுப்பாகும். இந்நாவல் ஒரு முழுமையான குழந்தையாகவன்றி அரைகுறைப் பிறவியாகப் பிறந்துள்ளமைக்குக் காரணமென்ன?

> இன்றுவரை... பெற்ற அனுபவங்களோ எண்ணிக்கை அற்றவை. என் அனுபவங்கள் முழுவதையும் இச் சிறு நாவல் மூலம் வெளிக் கொணர முடியவில்லையாயினும் குறிப்பிடக்கூடிய அளவாவது கொண்டு வந்திருக்கிறேன்

என்ற ஆசிரியருரை ஆழ்ந்து நோக்கத்தக்கது. ஏனெனில், நாவலின் அடிப்படைப் பலவீனங்களுக்கான தோற்றுவாய் இங்கு புலப்படு கின்றது. அதாவது, தான் நேரடியாகப் பெற்ற அனுபவங்கள் அனைத்தையும் கூறிமுடிக்க வேண்டுமென்ற தவிப்பும் துடிப்பும் பேராசையும் ஆசிரியரை வழிநடத்திச் சென்றபோது ஒரு நாவலாக அனுபவங்கள் வெளிப்படுகின்ற நிலமை மழுங்கடிக்கப்பட்டு விட்டதென்றே கூறவேண்டும். (அன்றேல் ஆசிரியர் நாவலெழுதும் ஆற்றலற்றவர் என்ற முடிவிற்கே வரமுடியும்). "மக்களிடம் படிப்பது அவர்களிடம் படித்ததை அவர்களுக்கே திருப்பிக் கொடுப்பது" - அப்படியே திருப்பிக் கொடுப்பது - என்ற கோட்பாட்டுக்குள் நின்று செயற்பட்டுள்ளார் ஆசிரியர்.

மேலும், பன்நெடுங்காலமாகப் பல்வேறு அடக்குமுறைகளுக் குட்பட்டு வாழும் பஞ்சமர் என்று கூறப்படும் மக்களுடைய பிரச்சினைகளை உள்ளடக்கியதாகக் கூறப்படும் இந்நாவல் இம்மக்களது பிரச்சினைகளை எடுத்துரைப்பதிலும் பார்க்க 'உயர்சாதிக்காரர்' எனப்படும் வேடதாரிகளின் பொய்மைகளையும் சூழ்ச்சிகளையும், வஞ்சனைகளையும் அம்பலப்படுத்துவதில் குறிப்பாகக் கவனஞ் செலுத்தியுள்ளது. காரணம், ஆண்டாண்டுகாலம் அனுபவித்து வந்த அடிமை வாழ்வினதும் இன்னல்களினதும் விளைவாக உருவாகிய தவிர்க்கவியலாத (உளவியல் ரீதியிலான)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வு மனப்பான்மைக்கும் தாழ்வுமனப்பான்மைக்கெதிரான உயர்வுந்தலுக்கும் ஆசிரியருட்பட்டமையாகும். எனவே, நாவலது நோக்கு திசைமாறிற்று; உயர்சாதிக்காரரை தாக்குவதாயிற்று. (சாதிப்பிரச்சினையைப் பொருளாகக் கொள்ளும் ஈழத்து நாவல்களும் சிறுகதைகளும் பெரும்பாலும் உயர்சாதிக்காரரின் திரைமறைவு வாழ்க்கையினை-அதிலும் குறிப்பாக முனைப்பான பாலுணர்வு வேட்கையின் செயற்பாடுகளை - வெளிப்படுத்தும் நோக்கினையே குறிக்கோளாகக் கொள்கின்றன. இதுபற்றிய ஆய்வு சுவையான வொன்று). இவ்வாறு நாவலின் பொருள் அமையக்கூடாது என்பது கருத்தன்று; இந் நாவலைப் பொறுத்தவரையில் நாவலினது நோக்கும் போக்கும் அமைப்பும் சிதைவுறவும் பிறழ்ச்சியுறவும் இதுவும் காரணமாயமைந்துள்ளது என்பதுவே நமக்கு வேண்டியது. இவ்விதத்தில் 'தான் கலந்து' அனுபவம் பெற்று எழுதப்பட்ட இந் நாவலை விட 'அத்தகைய அனுபவம் பெறாத எழுத்தாளர்' சிலரது நாவல்கள் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'நீண்ட பயணம்' தொடக்கம் 'பஞ்சமர்' வரையும் இதுவரை வெளிவந்துள்ள ஈழத்து நாவல்கள் பொதுவாக சாதிப் பிரச்சினையைப் போராட்ட ரீதியிலேயே அணுகியுள்ளன. இவ்விதத்தில் சற்று வேறுபட்ட முறையில் சாதிப் பிரச்சினையை நோக்குகிறது 'விடிவை நோக்கி'. ஆசிரியரது அனுபவங்கள் சாதிவெறி மிக்க வடமராட்சிக் கிராமமொன்றில் ஏற்படும் மாற்றங்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது. ஆயினும் இந் நாவல் வெளிப்பாட்டிலேயே ஒரு குறுநாவல்; வெளியீட்டு வசதிக்காக மேலும் குறுக்கப்பட்ட நாவலும் கூட. இதனால், உள்ளடக்கமுஞ்சரி உருவமுஞ்சரி ஒரு முழுமையைப் பெறத் தவறிவிட்டன; ஏமாற்றத்தையே அளிக்கின்றன.

சாதிப்பிரச்சினையை பொருளாகக் கொண்டுள்ளது என்று கூறப்படும் 'சீதா' உண்மையில் அதைவிடுத்து கதாநாயகனான ஓர் எழுத்தாளனது இலட்சியங்களுக்கு (அல்லது 'இலட்சிய எழுத்தாள' னுக்கு)ம் அவனது செயற்பாட்டிற்குமுள்ள முரண்பாட்டினையும் பொய்மையினையும் வெளிப்படுத்துவதிலும் காதல் போராட்டத் திலுமே கவனஞ்செலுத்துகிறது. நாவலின் முடிவிற்காகவும் வாசகரின் திருப்திக்காகவும் தமது இயல்பினை மாற்றிக் கொள்ளாத பாத்திரங்களின் இயல்புகளும் செயல்களுமே இந்நாவலின் குறிப்பிடத்தக்க அம்சம்.

அண்மைக்கால நாவல்களுள், 'அவர்களுக்கு வயது வந்து விட்டது' இரு விதங்களில் முக்கியம் பெறுகிறது. ஒன்று: சிங்கள தமிழர் உறவு நாவலின் சிறப்பம்சமாக அமைவது. ஈழத்துத் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்களுள், இதுவரையும் சிங்களப் பாத்திரங்கள் மிகச் சில நாவல்களுள், அதுவும் சாதாரண பாத்திரங்களுள் ஒன்றாக இடம் பெற்றுள்ளன. இந்நிலையில் சிங்களப் பெண்ணான மெனிக்கா நாவலின் கதாநாயகியாக இடம் பெறுவது மட்டுமின்றி, நாவலின் உள்ளடக்கமே சிங்கள தமிழுருறவை விதந்துரைப்பதாக உள்ளது. எனவே, தேசிய ஒருமைப்பாட்டுணர்வினை முழுமையான முறையில் வெளிப்படுத்தும் நாவலென்றும் சிலர் கூறக் கூடும். ஆயினும், இவ்விருசாராரும் நெருங்கி வாழும் பிரதேசங்களைக் களமாகக் கொள்ளும் போது இரு இனத்தவரும் கதாபாத்திரங்களாக இடம்பெறுவதும் ஒருவரோடொருவர் பழகும்போது சில சமயம் காதலுறவு ஏற்படுவதும் இன்றைய சூழலில் சாதாரணமானவொன் றாகும். இந்நாவலைப் போன்றே சிங்கள தமிழர் உறவினை விதந் துரைக்கும் The Barrier Gives Way (S.Bevilapitiya) என்ற (ஆங்கிலத்தில் எழுதப்பட்ட) நாடகமொன்றும் இங்கே குறிப்பிடத்தக்கது. கந்தளாயை ஒட்டிய பிரதேசமே கதைக்களம். களத்தாலும், வேறு சில பண்புகளினாலும் இவ்விரு படைப்புக்களும் ஒப்பிட்டு ஆய்தற்குரியன. எவ்வாறாயினும், இத்தகைய காதலுறவுகளினால் தேசிய ஒற்றுமை ஏற்படுமென்றோ தேசிய ஒற்றுமையை நோக்க மாகக் கொண்டே இவ்வாறான படைப்புக்கள் எழுதப்படு கின்றனவென்றோ கூறுவது எவ்வளவு தூரம் பொருத்தமுடைய தென்பது சிந்தனைக்குரியது.

மற்றொரு அம்சம்: இந்நாவல், வழக்கமான ஈழத்து நாவல் களின் பாணியிலிருந்து விடுபட்டு புதிய உத்தி முறைகளைக் கொண்டுள்ளமை. தமிழகத் தமிழ் நாவல் போக்கினை அவதானிக்கும் போது அவ்வப்போது அங்கு நாவலுலகில் பற்பல பரிசோதனை முயற்சிகள் இடம்பெற்று வந்துள்ளமை புலனாகும். பொய்த்தேவு, ஒரு நாள், அசுரகணம், ஒரு புளிய மரத்தின் கதை, பள்ளிகொண்ட புரம் முதலிய நாவல்கள் இத்தகையனவே. இப்படியான பரிசோதனை முயற்சிகள் இங்கு நிகழ்வது குறைவு. எஸ்.பொ.வின் நாவல்களே இவ்விதத்தில் விதந்துரைக்கத்தக்கன. 'அவர்களுக்கு வயது வந்து விட்டது'வும் இரண்டே நாளில் கதையை நடத்திவிடும் புதுமை, பாத்திர அறிமுகம், கதையின் வளர்ச்சிக்குத் தேவையான சம்பவங்கள், காட்சிகள், வர்ணனைகள் என்பனவற்றில் கையாளப்படும் உத்திகள் என்பன மூலம் குறிப்பிடத்தக்கதாகின்றது.

மலையக மக்களது பிரச்சினைகளை புதிய கோணத்தில் அணுகமுயல்கிறது 'காலங்கள் சாவதில்லை'. இந் நாவலின் உள்ளடக்கத்தை இரு பகுதிகளாக்கலாம் : (i) கல்வியறிவற்ற தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளரது சம்பளத்தைக் 'கிளாக்கர்மார்' ஏமாற்றிப் பறிக்கும் முறைகள் (ii) இவற்றுக்கெதிராகத் தொழிலாளர் செயற்படல். முதற் பகுதியைச் சித்திரிப்பதில் ஆசிரியர் பெற்றுள்ள வெற்றி இரண்டாவது பகுதியில் கிட்டவில்லை. பிறிதொரு விதமாகக் கூறின் முதற் பகுதி யதார்த்த நாவல் போன்று விளங்க, இரண்டாவது பகுதி சிறந்ததொரு துப்பறியும் மர்ம நாவல் போன்று உள்ளது. தொழிலாளர் தலைவனான ஆறுமுகம் துப்பறியும் நிபுணன் போலவும், வக்கீல்போலவுமே செயற்படுகின்றான். இவையொரு புறமிருக்க நாவலுக்கான முடிவும் ஒரு 'தொடர்கதை'க்கான முடிவேயாகும்.

ஏழ்மை காரணமாக விவாகம் செய்யாமலிருக்கும் யாழ்ப் பாணத்து பெண்களது சோகமயமான வாழ்க்கையையும் அவர்களுக்கு ஏற்படும் பன்முகப்பிரச்சினைகளையும் திறம்பட எடுத்துக் காட்டுகிறது 'மீட்டாத வீணை'. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்து - குறிப்பாக வடமராட்சிப் பகுதி மக்களில் ஒரு சாராரது - வாழ்க்கை எப்படி இருந்தது என்பதனை பிற்காலத்தில் அறியவிரும்புமொருவர் நிச்சயம் இந்நாவலையும் படிக்க நேரிடும் என்று கூறுமளவிற்கு தேவி, செல்வம், மீனாட்சி, கோபாலன் முதலிய பாத்திரங்கள் உயிருள்ளவை யாகவும், உரையாடல்கள் உயிர்த்துடிப்புள்ளவையாகவும், வாழ்க்கை முறையும் சம்பவங்களும் தத்ரூபமுடை யனவாகவும் விளங்குகின்றன. ஆயினும், சில எழுத்தாளர்கள் பிரச்சினைகள் சிலவற்றிற்கு முற்போக்கான முறையில் தீர்வுகாண வாய்ப்பிருக்கும்போது - அதற்கு நாவலின் கதையமைப்பும் பாத்திரங்களின் இயல்புகளும் சில சமயம் இடந்தரும்போது - எதற்காகக் குறிப்பிட்ட பாத்திரங்களைத் தற்கொலை செய்வதற்கோ இறப்பிற்கோ உள்ளாக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை. 'பாலும் பாவை'யிலும் விந்தன் தொடக்கி வைத்த இம் மரபிற்கு 'மீட்டாத வீணை'யின் முடிவும் விதிவிலக்கன்று. நாவலின் மெய்மைத்தன்மைக்கு ஊறுவிளைக்கும் 'பொய்மைத் தன்மை' மிக்க நடை சிலவிடங்களில் இடம் பெறுவது தவிர்த் திருக்கப்பட வேண்டியது.

சமுதாயத்தில் பொதுவாக மாற்றங்கள் நிகழ்ந்து வரும்போது பெண்களின் வாழ்க்கை, வாழ்க்கைமுறை, குடும்ப நிலைமை, இலட்சியங்கள் முதலியவற்றிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் இடம் பெறுவதியல்பே. இத்தகைய மாற்றங்களை, தமிழக எழுத்தாளர்கள் பெரும்பாலானோர், காதலுறவு, திருமண உறவு, பாலுறவு, மேலைத்தேய நாகரீகக் கலப்பு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து 'நியூவேவ்' பாணியில் நாவல்களில் சித்திரிக்கத் தொடங்கினர். மணியன், புஷ்பா தங்கத்துரை, குமாரி பிரேமலதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோர் 'நியூவேவ்' நாவல் மரபினை ஆரம்பித்து வைத்தனர். இவர்களது பரம்பரை நீண்டுகொண்டே செல்கிறது. இங்கு கே.எஸ்.ஆனந்தன், இந்து மகேஸ் முதலியோர் இவர்களது வாரிசுகளாக உள்ளனர். இத்தாக்கத்திற்குட்படாமல் யதார்த்த ரீதியில் 'குமாரபுரம்' என்னும் கிராமத்தில் பெண்களை முதன்மையாகக் கொண்ட விவசாயக் குடும்பமொன்றில் ஏற்படும் மாற்றங்களை வெளிப்படுத்த முனைகிறது 'குமாரபுரம்'. நம்பக்கூடிய நிகழ்ச்சிகள் இந்நாவலில் இடம்பெற்றிருப்பினும் அவை சில இடங்களில் அதீதமான முறையிலும், இலட்சியப்பாங்குடனும் வெளிப்படுவதும், கதாநாயகி சித்திராவின் செயல்கள் சில சமயம் சரித்திர வீராங்கனைகளை நினைவூட்டுவதும் தவிர்க்கக்கூடியன.

செங்கையாழியானது வழக்கமான நாவல்களின் போக்கிலிருந்து 'பிரளயம்' சற்று மாறுபட்டுள்ளது உண்மைதான். இந்நாவலில் சலவைத் தொழிலாளரது குடும்ப வாழ்க்கை மூலம் அச்சமூகத் தினரிடையே ஏற்பட்டுவரும் விழிப்புணர்ச்சியும் மாற்றங்களும் புலப்படுத்தப்படுகின்றன; இவ்விதத்தில் ஆசிரியர் ஓரளவு வெற்றி பெற்றிருக்கவும் கூடும். ஆயினும், ஆசிரியர் கூறுவது போன்று நாவலின் பகைப்புலத்தை - மேலோட்டமாக அல்ல - நன்கு உணர்ந்து கொண்டு நோக்குமொருவருக்குக் கூட, திருமண முடிவினால் ஒரு பிரளயம் ஏற்படுமளவிற்கு பின்னணி ஆழமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளதா என்ற கேள்வி எழவே செய்யும்.

கம்பளைக் கடையொன்றில் வேலைபார்க்கும் சிப்பந்திகளது நாளாந்த வாழ்க்கைப் போக்கினைக் களமாகக் கொண்டுள்ளது 'மழைக்குறி'. அங்கு வேலைசெய்யும் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊழியர்களது தத்ரூபமான வாழ்க்கைநிலை, நாளாந்தப் பிரச் சினைகள், அவர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் அரசியல் விழிப் புணர்ச்சி, போராட்ட உணர்வு என்பனவற்றை யதார்த்தரீதியில் ஆழமாகவும் நுணுக்கமான அவதானிப்புகளுடனும் அநாயாச மாகவும் வெளிப்படுத்துவதில் ஆசிரியர் பெருமளவு வெற்றி பெற்றுள்ளார். ஆயினும், பல பாத்திரங்களினது உரையாடல் களாகவும் பல நிகழ்ச்சிகளினது தொகுப்பாகவும் அமைந்துள்ள 'மழைக்குறி' ஒரு நாவலுக்குரிய இன்றியமையாத அம்சங்களைப் பெற்றுள்ளதா என்று பார்க்கும்போது கேள்விக் குறியாகி விட்டது. இந்நாவலின் சிங்களப் பாத்திரங்களின் முதன்மையும், இயல்பான சிங்கள உரையாடல்களும், 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' நாவலைத் தொடர்ந்து ஈழத்துத் தமிழ் நாவல்களின் பாத்திரக்களம் மேலும் விரிந்து செல்வதனைக் குறிக்கின்றன எனலாம். நாவலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியோடு தாம் பெற்ற அனுபவங்களினூடே பாத்திரங்களும் 'முதிர்ச்சி' பெற்று வளர்ச்சியடைந்தும், நாவலுக்குரிய வேறு சில பண்புகளைப் பெற்றும் 'மழைக்குறி' அமைந்திருக்குமாயின் (டி.எம்.செல்வராஜின்) 'தேனீர்' போன்றதொரு சிறந்த நாவலாகப் பரிணமித்திருக்கும்.

ஏதோ ஒரு விதத்தில் சமுதாயப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்ட எழுபதுகளுக்குப் பிற்பட்ட மேற்குறித்த நாவல்களுக்கும், எழுபதுகளுக்கு முற்பட்ட நாவல்களுக்குமிடையில் பொதுவாகக் காணப்படும் முக்கியமான வேறுபாடொன்றையும் குறிப்பிட வேண்டும். முற்பட்ட நாவல்கள் பிரச்சினைகளை அணுகுவன வாகவும் பிரச்சாரத்தன்மை மிக்கனவாகவும் அமையும் போது பிற்பட்ட நாவல்களில் இவற்றின் முக்கியத்துவம் குறைந்தோ அல்லது அற்றோ விளங்குகின்றன; இவற்றுக்கான காரணங்கள் விரிவானதொரு ஆய்வை வேண்டிநிற்கின்றன.

**'எழுபதுகளுக்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள்',**
***அலை*, நவம்பர் - டிசம்பர், 1976.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்

எண்பதுகள் முன்னைய காலப் பகுதிகளைவிட, ஈழத்துக் கவிதை, சிறுகதை, நாடகம், ஓவியம் என நவீன கலை, இலக்கியத் துறைகள் அனைத்திலும் மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தின் தொடக்கமாகும்.

எண்பதுகளிலே ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்கள் காரணமாக, முதன்முதலாக ஈழத்தின் எல்லாப் பிரதேசங்களையும் சார்ந்த - எல்லா மட்டங்களையும் சார்ந்த - தமிழ் பேசும் மக்கள் அனைவரும் பொதுவான சமூக அனுபவங்களுக்குட்பட்டனர். இத்தகைய பரந்துபட்ட அனுபவம் நாவல் வளர்ச்சிக்கான அடிப்படை அம்சங்களுள் ஒன்றென்பது அனைவருமறிந்ததே.

மேற்குறித்தவாறான அரசியல், சமூக மாற்றங்களுள் (சிங்களவர், தமிழர் ஆகிய இரு சமூகங்களுக்கிடையிலான) "இனப்பிரச்சினை" என்பது குறிப்பாக எழுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து அதுவரை காலமும் வகுப்புவாதமாகக் கருதப்பட்டு வந்த நிலைமாறி, "தேசிய இனப்பிரச்சினை" என்ற நிலைக்கு பரிணாமங் கண்டது. ஒருபுறம் அது தனிநாட்டுக் கோரிக்கை, அதற்கான தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஆயுதப் போராட்டம் என்பனவாகவும், மறுபுறம் அரச இராணுவ ஒடுக்குமுறையின் உச்சமாகவும் விரிவு கண்டது. இத்தகைய சூழ்நிலையில் 1983 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தின் விளைவாக ஈழத் தமிழர் புலம்பெயர்ந்து ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, தமிழ் நாடு ஆகியவற்றிற்குச் சென்று வாழத் தொடங்கினர்.

ஈழத் தமிழ்ப் பெண்கள் மத்தியில் உயர்கல்வி வாய்ப்பு அதிகரித்தமையும், தமிழீழ விடுதலை இயக்கங்கள் பெண்கள் பிரச்சினைகளில் கரிசனை காட்டத் தொடங்கியமையும், பெண்கள் மத்தியிலேற்பட்ட சமூக விழிப்புணர்ச்சியும் இக்காலப் பகுதியிலிருந்து பெண்நிலைவாதச் சிந்தனைகள் பரவ வழிவகுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த அரசியல், சமூக மாற்றங்களின் பின்புலத்திலே எண்பதுகளுக்குப் பிற்பட்ட ஈழத் தமிழ் நாவலின் செல்நெறிகள் எவ்வாறமைகின்றன என்று காண்பது பொருத்தமானது.

## எண்பதுகளிலிருந்து ஈழத்துத் தமிழ் நாவல்களின் முக்கிய செல்நெறிகள்

### 1. தேசிய இனப் பிரச்சினை :

இக்காலப் பகுதியின் முக்கியமான செல்நெறியாகிய தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையும் அதன் விளைவுகளும் வெவ்வேறு விதங்களிலே இக்காலப் பகுதி நாவல்களில் இடம் பெற்றுள்ளன. வசதிக்காக, இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

(i) இராணுவ ஒடுக்குமுறைகள் : இவ்விதத்தில் சித்திரவதைகள், படுகொலைகள் என்பன சித்திரிக்கப்படுதல். எ-டு: செ.யோகநாதனின் 'நியாயப்படுத்தப்பட்ட கொலைகள்'.

(ii) இராணுவ - இயக்க செயற்பாடுகளின் மத்தியில் அன்றாட வாழ்வு : எ-டு: தாமரைச் செல்வியின் 'தாகம்', பொன்.கணேசமூர்த்தியின் 'தொடுவானம் தூரத்தில்'. முறையே இவை கிளிநொச்சி பிரதேச மக்களின் வாழ்வையும், யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வையும் விவரிக்கின்றன.

(iii) அகதி நிலைமையும் இடப் பெயர்வுகளும் : எ-டு: தெணியானின் 'சிதைவுகள்', செ. யோகநாதனின் 'துன்பக் கேணியில்', செங்கை ஆழியானின் 'மரணங்கள் மலிந்த பூமி'.

(iv) இயக்கங்களின் போராட்டங்கள் : எ-டு: துரையின் 'சுயம்வரம்', மலரவனின் 'போருலா', கோவிந்தனின் 'புதிய உலகம்'. இவற்றில், சுயம்வரத்தின் ஒரு பகுதியும் போருலாவின் முழுப் பகுதியும் இயக்கமொன்றின் போராட்டச் செயற்பாடுகள் பற்றி விவரிக்கின்றன. புதிய உலகம் இயக்கமொன்றின் உட்பூசல்கள் பற்றி விமர்சிப்பது.

(v) அண்மைக்கால வாழ்க்கை: குறிப்பாக, நீண்ட காலத்தின் பின், இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேச வாழ்க்கைமுறைக்குட்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை சித்திரிக்கப்படுதல். எ-டு: செங்கை ஆழியானின் 'போரே நீ போ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vi) முற்பட்ட காலவாழ்க்கை : மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் உந்தல் காரணமாக, முன்னைய வாழ்க்கை நிலை பற்றிச் சித்திரித்தல். எ-டு: செ.யோகநாதனின் 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே', வ.அ. இராசரத்தினத்தின் 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது'. இவற்றில், முதல்நாவல் தமிழரது நீண்டகால வரலாற்றை, குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத் தமிழரின் வாழ்க்கையை விவரிக்கிறது. ஏறத்தாழ, முப்பதுகளளவிலான திருகோணமலைப் பிரதேசம் சார்ந்த ஆலங்கேணி மக்களது வாழ்க்கையை விவரிப்பது அடுத்த நாவல்.

## 2. புகலிட நாவல்கள்

புகலிடக் கவிதைகள், சிறுகதைகள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது, புகலிடத்திலிருந்து வெளிவரும் நாவல்கள் எண்ணிக்கை ரீதியில் குறைவாகும். கவிதை, சிறுகதை என்பவற்றைவிட, நாவல் வடிவம் ஆழ்ந்தகன்ற அனுபவத்தை விழைந்து நிற்பதும் அத்தகைய நிலை ஏற்பட அதிக காலமெடுப்பதும் புகலிட அனுபவங்கள் அத்தகைய வாய்ப்பினை மிக அண்மைக் காலமாகவே தருவதும் இதற்கான - அதிக நாவல்கள் வெளிவராமைக்கான - காரணமாகின்றன. ஆயினும், இப் புகலிட நாவல்களில் பின்வரும் செல் நெறிகளை ஓரளவு இனங்காண முடிகின்றது :

(i) ஈழத்தமிழரது பிரச்சினைகள் / இராணுவ ஒடுக்குமுறைகள் / இயக்கங்களின் போராட்டங்கள் : ஆதவன் எழுதிய (முற்றுப் பெறாத தொடர் கதையாகிய) 'மண்மணம்', குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பொதுவாக ஈழச் சூழலில் இடம்பெற்ற மேற்குறித்த விடயங்கள் பற்றிச் சித்திரிப்பதனையும், துரை எழுதிய 'சுயம்வரம்', 1987இல் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்ற "ஒப்றேசன்", முதற் கடற்சமர் முதலியன பற்றிப் பேசுவதையும் இங்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். 'இத்தியாதி விடயங்கள் ஈழத்திலிருந்து எழுதப் படுவதைவிட புகலிட நாடுகளிலிருந்து எழுதப்படும்போது கூடுதலான எழுத்துச் சுதந்திரம் இருப்பதையும் விமர்சன ரீதியில் சிலவற்றைக் கூற வாய்ப்பிருப் பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. இவ்வாறான படைப்புகளில் அத்தகைய தன்மை வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) சாதிப் பிரச்சினை / சீதனப் பிரச்சினை : முறையே பார்த்திபன் எழுதிய 'வித்தியாசப்படும் வித்தியாசங்கள்', 'ஆண்கள் விற்பனைக்கு' என்பன இவ்விதத்தில் நினைவு கூரப்பட வேண்டியன. புகலிட நாட்டு அனுபவங்களே (அங்கு வாழும் தமிழர் மத்தியில் இவை நிலவி வருவது காரணமாக) இவை எழுதுவதற்கு மறைமுக உந்துசக்தியளிக்கின்றன என்பது கவனத்திற்குரியது.

(iii) புகலிடத் தமிழரது வாழ்க்கை : ஜேர்மனியில் அகதி முகாமொன்றில் வாழும் தமிழ் இளைஞர்களின் நாளாந்த வாழ்க்கையைச் சித்திரிக்கும் பார்த்தீபன் எழுதிய (முற்றுப் பெறாத தொடர்கதையாகிய) 'கனவை மிதித்தவன்', அத்தகு பின்னணியில் அண்மைக் காலத்தில் பொ.கருணாகரமூர்த்தி எழுதிய 'வானம் வசப்படும்' என்பன இவ்வித செல்நெறிக்குச் சில எடுத்துக்காட்டுகளாம். இலண்டன் வாழ் தமிழ் இளைஞர்கள், குடும்பங்கள் பற்றி ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதி வரும் நாவல்களும் விதந்துரைக்கப்பாலனவே (எ-டு: 'உலகமெல்லாம் வியாபாரிகள்', 'தேம்ஸ் நதிக்கரையில்'). இத்தகைய நாவல்கள் யாவும் குறிப்பிட்ட வட்டத்தினுள் சுழல, (தியாகலிங்கம் எழுதிய) 'அழிவின் அழைப்பிதழ்' வித்தியாசமான பின்னணியில் - "எயிட்ஸ்" நோய்க்குள்ளாகி விட்ட தமிழ் இளைஞன் ஒருவனது மன உணர்வுகளைச் சித்திரிக்கின்றது.

(iv) புகலிட நாட்டினது வாழ்க்கை : ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வை முதன்மைப் படுத்தி தமிழ் எழுத்தாளர் எழுதிய நாவல்கள் எதுவும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை (அத்தகு சிறுகதைகள் சில வெளியாகியுள்ளன). ஆயினும், முற்குறிப்பிட்ட நாவல்கள் சிலவற்றில் (எ-டு: தேம்ஸ் நதிக்கரையில், அழிவின் அழைப்பிதழ்) புகலிட நாட்டு மக்களது வாழ்வு அவற்றின் ஒரு பகுதியாக இணைந்து இடம் பெற்றுள்ளது. இவற்றுள், டேனிஷ் குடும்பம் ஒன்றின் வாழ்வு பற்றி விவரிக்கும் 'சுயம்வரம்' குறிப்பிடத்தக்கது. மேலைத்தேயத்தவரது நற்பண்புகள் இங்கு பேசப்பட்டுள்ளன.

தவிர, தமிழ் நாட்டு மக்களது வாழ்க்கையை விதந்து பேசும் ஈழத்து எழுத்தாளரது நாவல்கள் சில வெளியாகியுள்ளன. ஜெயலலிதா காலத்துத் தமிழ் நாட்டு அரசியல் நிலை பற்றிச் சித்திரிக்கும் (செ.கணேசலிங்கனின்) 'ஒரு அரசியலின் கதை', சிவகாசி சிறுவர் உழைப்புப் பற்றிப் பேசும் 'அடைப்புகள்', சூழல் மாசடைதல் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்துள்ள 'நரகமும் சொர்க்கமும்' முதலியன இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன.

## 3. பெண்நிலைவாதம்

மேற்கூறியவாறு வகைப்படுத்திப் பார்ப்பது ஈழத்துக் கவிதைகளுக்கும் சிறுகதைகளுக்குமே பொருந்தக்கூடியது. ஏனெனில், இத்தகைய நோக்குடைய நாவலாசிரியைகள் ஈழத்தில் மிகக் குறைவே. சாதாரண குடும்ப வாழ்விலே பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் பேசும் ஒரு நாவலினைத் தவிர (கோகிலா மகேந்திரனின் 'தூவானம் கவனம்') விதந்துரைக்க வேறெதுவுமில்லை. ஆயினும், பெண்நிலைவாதச் சிந்தனை கொண்ட பாத்திரங்கள் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் சில நாவல்களில் (எ-டு: 'உலகமெல்லாம் வியாபாரிகள்') இடம் பெற்றுள்ளன.

பெண்நிலைவாத நோக்குடன் ஆண் நாவலாசிரியர்கள் எழுதியுள்ள நாவல்களும் (எ-டு: செ.யோகநாதனின் 'தனியாக ஒருத்தி', செ.கணேசலிங்கனின் 'வன்முறை வடுக்கள்', 'உலகச் சந்தையில் ஒரு பெண்') கவனத்திற்குரியன.

## 4. ஏனைய செல்நெறிகள்

### (i) சாதிப் பிரச்சினை

முன்னர் (எழுபதுகள்) போன்று இக்காலப் பகுதியிலும் சாதிப் பிரச்சினை பற்றிய நாவல்கள் வெளிவந்துள்ளன. அடிநிலை மக்களது ஏறத்தாழ நூற்றாண்டுகால சாதி ரீதியான ஒடுக்கு முறையும் அண்மைக் காலம் வரையிலான அவர்களது வாழ்க்கைப் போராட்டமும் பற்றிய டானியலின் பல நாவல்கள் (பஞ்சமர், அடிமைகள், கானல், தண்ணீர், கோவிந்தன், பஞ்ச கோணங்கள்) இக்காலப் பகுதியிலேயே வெளியாகின. முற்காலகட்ட (குறிப்பாக, செ.கணேசலிங்கனின்) நாவல்கள் போன்று தெளிவான வர்க்கப் பார்வை இவற்றிலே வெளிப்படவில்லையெனினும், இவை நாவலாசிரியரது நேரடியான அனுபவங்களினதும் ஆழமான தேடல்களினதும் பதிவுகள் என்பது முக்கியமானது.

தவிர, பிராமணச் சாதியினர் பற்றிய இரு நாவல்களின் வரவு இக்காலப் பகுதியில் நிகழ்ந்துள்ளது. தமிழ்நாடு போன்று ஈழத்திலே பிராமணர் அதிக எண்ணிக்கையினருமல்லர்; பொருளாதார ரீதியில் உயர்ந்தவர்களுமல்லர். இத்தகையவர்களது வாழ்வுப் போராட்டங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
542066

களை (தெணியான் எழுதிய) 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்', (ஈழத்துச் சோமு எழுதிய) 'விடிவெள்ளி பூத்தது' ஆகிய படைப்புக்கள் வெளிப்படுத்துகின்றன.

மேலும், உயர்வர்க்கத்தினரில் ஒருசாராராகிய மணியகாரர், உடையார் ஆகியோரின் இன்றைய வாழ்நிலையையும், அவர்களது வீழ்ச்சியையும் முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட (தெணியானின்) 'மரக்கொக்கு' நாவலும் இக்காலப் படைப்புகளுள் குறிப்பிடத் தக்கதே.

(ii) **சீதனப் பிரச்சினை**

இப்பிரச்சினையும் சாதிப்பிரச்சினை போன்று ஈழத் தமிழச் சூழலில் முக்கிய இடம் பெற்றுள்ளதெனினும், முன்னர் போன்றே இக்காலப் பகுதியிலும் இப்பிரச்சினை ஈழத்து எழுத்தாளரை ஈர்த்துக் கொண்டது குறைவு. ஓரிரு நாவல்களே வெளிவந்துள்ளன. முற்குறிப்பிட்ட புகலிடச் சூழலிலிருந்து வெளியான ந. பார்த்தீபன் எழுதிய 'ஆண்கள் விற்பனைக்கு' இவ்விதத்தில் முக்கியமானது.

(iii) **தொழிலாளர் வாழ்க்கை**

முன்னர் போன்று இக்காலப் பகுதியிலும் இத்தகைய நாவல்கள் வெளிவந்துள்ளன. இவ்விதத்தில் மலையக தொழிலாளர் பற்றி வெளிவந்துள்ள நாவல்களுள் சில குறிப்பிடத்தக்கன. குறிப்பாக, மாத்தளைச் சோமு எழுதிய 'எல்லை தாண்டா அகதிகள்' என்ற நாவல் களுகங்கைப் பிரதேசத்தில் மாணிக்கக்கல் தோண்டும் மக்கள் வாழ்க்கை பற்றியும், தி. ஞானசேகரனின் 'லயத்துச் சிறைகள்', தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை பற்றியும், செ. யோகநாதனின் 'மீண்டும் வந்த சோளகம்' மீனவத் தொழிலாளர் வாழ்க்கை பற்றியும் சித்திரிப்பன.

கடந்த சில வருடங்களாக, ஈழத்தில் இயங்கி வரும் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் (முஸ்லிம்) தொழிலாளர் பற்றியும், அவர்களது தொழிற்சங்கப் போராட்டம் பற்றியும் சித்திரிக்க முற்படுகின்றது என்ற விதத்திலே திக்வெல்லை கமாலின் 'ஒளி பரவுகின்றது' கவனிக்கப்பட வேண்டிய படைப்பாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) **பிரதேச நாவல்கள்**

தமிழ் நாட்டுடன் ஒப்பிடும் போது, ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் தொகையும் வாழ்விடப் பரப்பும் குறைவானதே. அத்துடன், இவர்கள் வாழும் பிரதேசங்கள் அருகருகே உள்ளனவாகவும் பரப்பளவிலே குறுகியனவாயுமுள்ளன. ஆயினும், இத்தகைய பிரதேசங்களில் வாழ்வோரிடம் பண்பாட்டு ரீதியில் ஒருமைப்பாடு நிலவினும் நுணுகி நோக்கும்போது வேறுபாடுகளும் தனித்துவப் பண்புகளும் (அசமத்துவ ரீதியிலான வளர்ச்சி நிலையும்) காணப் படுகின்றன. இப்பின்னணியில் ஈழத்திலே பிரதேச நாவல்களின் வரவு தவிர்க்க இயலாததே. முன்னைய காலகட்டம் போன்று அதிக அளவிலான பிரதேச நாவல்கள் இப்போது வெளிவரவில்லையாயினும் சில குறிப்பிடத்தக்க நாவல்கள் வெளிவந்துள்ளன. (ஆயினும், ஈழத்திலே இன்றுவரை வெளிவந்துள்ள பிரதேச நாவல்களின் தொகை குறைவானதுதான்.) பின்வருவன இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன:

**யாழ்ப்பாணம் / நயினாதீவு :** இவ்விதத்திலே தேவகாந்தன் எழுதிய 'கனவுச்சிறை' நயினாதீவு மக்களின் குறிப்பிட்ட காலப்பகுதி வாழ்க்கை நிலைமைகளை ஓரளவு தத்ரூபமாக வெளிப்படுத்த முற்படுகின்றது.

**யாழ்ப்பாணம் / வடமராட்சி :** முன்னர் குறிப்பிட்ட துரை எழுதிய 'சுயம்வரம்' நாவலின் ஒருபகுதி போராட்டம் ஆரம்பித்த எண்பதுகளின் பிற்பகுதியில் இப்பிரதேச மக்களது வாழ்க்கையை நுணுக்கமாகப் படம் பிடிக்கின்றது.

**அம்பாறை / அக்கரைப்பற்று :** ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'தில்லையாற்றங்கரை' நாவல் இப்பிரதேசக் கிராம மக்களின் வாழ்வினைச் சித்திரிப்பது.

**வடமேல் மாகாணம் / நீர்கொழும்பு :** நீர்கொழும்பூர் முத்துலிங்கம் எழுதிய 'ஒரு உதயத்தின் அஸ்தமனம்' நீர்கொழும்புப் பிரதேச மக்களது வாழ்க்கையின் சிற்சில அம்சங்களை அழகாக வெளிக் கொணர முற்படுகின்றது.

**திருகோணமலை / ஆலங்கேணி :** வ.அ. இராசரத்தினம் எழுதிய 'ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' என்ற நாவல் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை நிலைமைகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னிலங்கை / திக்வெல்லை :** முன்னரும் திக்வெல்லைப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை எழுத்திலே பதிவு செய்த திக்வெல்லை கமால் 'ஒளி பரவுகிறது' நாவலில் பிறிதொரு கோணத்தில் அதனை வெளிப்படுத்தியுள்ளார்.

**மட்டக்களப்பு / ஓட்டமாவடி :** வை. அகமத் எழுதிய 'கிராமத்துப் பெண்' இப்பிரதேச முஸ்லிம் மக்களது வாழ்க்கையினை மேலோட் டமாகச் சித்திரிப்பினும், சுவைபடச் சொல்கின்றது.

**மலையகம் :** இவ்விதத்தில் மாத்தளை சோமுவின் பலபடைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றின் (குறுநாவல்களான) 'நான்காவது உலகம்' மலையகத்தில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் செய்யும் சுரண்டல்களையும், 'ஆயுதங்கள்' இங்கு தலை தூக்கும் போராட்ட நிலைமைகளையும் அழகாக வெளிப்படுத்துகின்றன.

### (v) முஸ்லிம் மக்களது வாழ்க்கை

தமிழ்நாடு போலன்றி, ஈழத்திலே முஸ்லிம் மக்கள் (தமிழ் மொழி பேசினும்) தம்மைத் தனி இனமாகக் கருதுகின்ற நிலையுள்ளது. இதனால், ஈழத் தமிழ் இலக்கியத்திலே முஸ்லிம் இலக்கியம் என்பது தனி இடத்தைப் பெற்றுள்ளது. இவ்விதத்தில் முற்கூறப்பட்ட 'ஒளி பரவுகின்றது', 'ஒரு கிராமத்துப் பெண்' முதலானவற்றோடு ஜுனைதா ஷெரிப் எழுதிய நாவல்களுட் சிலவும் (எ-டு: 'சாணைக்கூறை') கவனத்திற்குரியன.

### (vi) வித்தியாசமான படைப்புகள்

வித்தியாசமான களங்கள், பிரச்சினைகள் கொண்ட நாவல்கள் என்ற விதத்திலே சில குறிப்பிடத்தக்கன. செங்கை ஆழியான் எழுதிய 'ஓ! அந்த அழகிய கிராமம்' சூழலியலுடன் (காடழித்தல் பற்றிச் சித்திரிப்பது) தொடர்புடையது. முற்குறிப்பிட்ட 'சொர்க்கமும் நரகமும்' தமிழ் நாட்டினைக் களமாகக் கொண்டாலும் சூழலியலுக்கு முதன்மை கொடுப்பது. செ.யோகநாதன் எழுதிய 'கிட்டி' காட்டு வாழ் மக்கள் பற்றியது.

இதுவரை கூறப்பட்டவை தொடர்பாக இரு விடயங்கள் கவனத்திற்குரியன. முக்கியமான போக்குகள் பற்றிய சில முக்கியமான படைப்புகளே எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளன என்பது ஒன்று. பொழுதுபோக்கு அம்சங்கள் மிகுந்த நாவல்கள் (இவை, தமிழ் நாட்டுடன் ஒப்பிடும் போது ஈழத்தில் குறைந்தளவே வெளிவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன) இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை (எ-டு: சோ.இராமேஸ்வரனின் பல படைப்புகள்) என்பது மற்றொன்று.

மேற்கூறப்பட்டுள்ளவாறான ஈழத்துத் தமிழ் நாவல்களின் சமகாலச் செல்நெறிகள் பற்றித் தொகுத்துப் பார்க்கும் போது, தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில் இரு புதிய செல்நெறிகள் விதந்துரைக் கப்பட வேண்டியனவாகின்றன. தேசிய இனப் பிரச்சினையும் புகலிட அனுபவங்களுமே அவை. இவ்விதங்களில், பொதுவான தமிழ் நாவல் செல்நெறிகளுடன் ஈழத்துத் தமிழ் நாவல் செல்நெறிகள் சங்கமித்துக் கொள்கின்றன என்பதிலே தவறில்லை.

மேலும், முன்னைய காலகட்டச் செல்நெறிகளின் தொடர்ச் சியாக இக்காலப் பகுதியிலே எழுந்துள்ள சாதிப் பிரச்சினை பற்றிய டானியலின் நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் தோற்றத்தினை ஈழத்திலிருந்து ஆரம்பிக்க வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாவல்களின் படைப்பாக்க முறைமை

இனி மேற்கூறப்பட்ட ஈழத்து நாவல்களின் படைப்பாக்க முறைமை பற்றிக் கூர்ந்து அவதானிக்கும் போது, அது முக்கியமாக இரு தடங்களில் அமைந்து வந்துள்ளமை புலப்படுகின்றது.

### (i) விவரண ரீதியிலான பதிவு

இக்காலப் பகுதிக்குரிய பெரும்பாலான நாவல்கள் இப்பண் பினவே. இதுபற்றி நாவலாசிரியரொருவரின் கூற்றினை எடுத்தாள்வது பொருத்தமானது. அது பின்வருமாறு :

> இத்தகைய மாபெரும் மக்கள் வெளியேற்றத்தைச் சுட்டிக் காட்டி நாவல் வடிவில் பதிவு செய்யும் நோக்கிலேயே இந்நாவலை எழுத முயன்றேன்.... மேலே கூறப்பட்ட நிகழ்வுகள், சூழ் நிலை சம்பவங்களை மட்டுமே மாதிரியாகக் கொண்டு, ஒரு சில பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மூலம் சுட்டிக் காட்ட முனைந்தேன்....

இத்தகைய விவரணப் பதிவு மேலோங்கிய நாவல்களில் பின்வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன :

அ. நிகழ்ச்சிகள் / சம்பவங்களின் தொகுப்பாதல்.

ஆ. இயல்பான பாத்திர உருவாக்கமும் உரையாடலும் இடம்பெறுதல்.

இ. கதையம்சம் முக்கியம் பெறுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) **கருத்து / கருத்தியல் விளக்கம் :**

மேற்குறிப்பிட்ட பண்பிலான நாவல்களில் பின்வரும் பண்புகள் இடம் பெற்றுள்ளன :

அ. பாத்திரங்கள் எலும்புக் கூடுகளாக அமைதல்.

ஆ. பிரச்சாரம் முதன்மை பெறுதல்.

இ. ஒரே பாணியில் அமைதல்.

ஈ. செயற்கைப் பாங்குடன் அமைதல்.

உ. நிகழ்ச்சிகள், சம்பவங்கள் என்பனவற்றின் தொகுப்பாதல்.

ஊ. கதையம்சம் முக்கியம் பெறுதல் / முக்கியம் பெறாமை.

இவ்விருவகைப் படைப்பாக்க முறைமை கொண்ட நாவல்கள் சிலவிதங்களில் ஒன்றுபடுகின்றன. அவையாவன :

அ. உலக நோக்கோ வாழ்க்கை பற்றிய தரிசனமோ இடம் பெறாமை.

ஆ. பாத்திரங்களின் அக உணர்வுகள் வெளிப்படாமை.

இ. மொழிநடை வளம் பெறாமை.

ஈ. படைப்பாக்க முறைமையிலும் கலையழகிலும் கவனஞ் செலுத்தாமை.

உ. எடுத்தாளப்படும் பிரச்சினைகள் பன்முகத் தன்மையுடன் இடம்பெறாமை; ஆழமாக அணுகப்படாமை.

## மதிப்பீடு

எண்பதுகளிலே, புதிய செல்நெறிகளுக்கு எடுத்துக்காட்டான நாவல்கள், முன்னர் குறிப்பிட்டது போன்று (கவிதை, சிறுகதை ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது) பெருமளவு வெளிவரவில்லை.

எனினும், புதிய செல்நெறிகளாக இனங்காணப்பட்ட தேசிய இனப்பிரச்சினை பற்றிய நாவல்களும் புகலிட நாவல்களும் பொதுவான தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

எண்பதுகளில், முன்னைய செல்நெறிகளின் தொடர்ச்சியாக அமையும் சாதிப் பிரச்சினை பற்றிய (டானியலின்) நாவல்கள் தமிழில் தலித் நாவல்களின் முன்னோடிகளாக அமைகின்றன. இவ்விதத்திலே அவை தமிழ் நாவல் வளர்ச்சிக்கு ஈழத்து நாவல் துறையின் பங்களிப்பாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய செல்நெறிகள் என்ற விதத்தில் இவ்வேளை கவனிக்கப் பட்ட நாவல்களின் முக்கியத்துவம் உள்ளடக்கம் சார்ந்ததே தவிர படைப்பாக்க முறைமை சார்ந்ததன்று.

எண்பதுகளின் தமிழக நாவல் செல்நெறிகளுடன் ஒப்பிடும் போது ஈழத்து நாவல்கள் உள்ளடக்க ரீதியிலே ஓரளவு ஒப்பிடக் கூடியனவே தவிர, படைப்பாக்க முறையிலே தேக்கநிலையையே எட்டியுள்ளன. இதற்கான காரணங்கள் விரிவான ஆய்வை நாடி நிற்கின்றன.

***'எண்பதுகளில் ஈழத்து நாவல்கள்',***
***தேசிகம், யாழ்ப்பாணம், 19.03.2000.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்
## ஒரு புதிய அலை

"ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன இந்த நாட்டிற்கு வந்து. என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சிதான் எப்பொழுதும் மனதில் ...... இங்கு தனிமை ஒரு பக்கம், வெள்ளையர் அனுபவிப்பதைப் பார்த்தால் ஏற்படும் ஏக்கம் இன்னொரு புறம் ..... நான் சாதாரண மனிதன். என்னைப் பருவம் பந்தாடுவதை உணருகிறேன். பலருக்கு உண்மையைச் சொல்லத் துணிவில்லை. நான் உண்மையைச் சொல்கிறேன், நான் வெக்கப்படவில்லை. வெக்கப்பட வேண்டிய விஷயமுமல்ல. இந்தப் பெண்களைப் பார்த்தால் மனசு பேதலிக்கிறது. காதல் வருகின்றதோ இல்லையோ அவளோடு கலவி செய்ய வேண்டும்போல ஓர் உணர்ச்சி ......"

மேற்கூறிய வித்தியாசமான குரல் ஈழத்து நாவல் உலகிற்குப் புதிய குரல். நோர்வே நாட்டிலிருந்து ஒலிக்கும் தமிழ் இளைஞனொருவனது குரல். உண்மைதான். எண்பதுகளளவில் ஈழத்து நாவல் வளர்ச்சியில் புதிய அலை - புகலிட நாவல் இலக்கியம் - என்பது உருவாகத் தொடங்கியமையின் வெளிப்பாடே இதுவாகும்.

எண்பதுகளளவில் ஏற்பட்ட பேரினவாத ஒடுக்குமுறையின் உச்சமாக வெளிப்பட்ட இனக்கலவரம் ஈழத்தமிழர் பலரை ஐரோப்பிய நாடுகளுக்கும் (ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், ஒல்லாந்து, சுவிஸ், பிரித்தானியா முதலியன) கனடாவிற்கும் அவுஸ்திரேலியாவிற்கும் தஞ்சம் புகவேண்டிய நிலையை உருவாக்கியது. இவ்வாறு சென்றோரில் சிலர் பல்வேறு இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபட்டனர். நவீனகவிதை, சிறுகதை முயற்சிகளுடன் ஒப்பிடும்போது, புகலிட நாவல்களின் எண்ணிக்கை சொற்பமே. எனினும் அவற்றின் முக்கியத்துவம் கவனத்திற்குரியவொன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த புகலிட நாவல்களுள் கணிசமானவை ஈழத்து அரசியலுடன் அல்லது ஈழத்து மண்ணுடன் தொடர்புபட்டவை. அவை நீங்கலாக புகலிட நாட்டு வாழ்க்கை அனுபவங்களைப் பேசுகின்ற நாவல்களே இவ்வேளை எமது முக்கிய கவனிப்பிற் குரியனவாகின்றன.

மேற்கூறியவாறான புகலிட நாவல்களுள் கணிசமானவை இலண்டன் தமிழரது வாழ்க்கையோடு தொடர்புபட்டனவாகவுள்ளன. இவ்வாறு இன்றுவரை வெளிவந்த நாவல்களில் பலவும் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் எழுதப்பட்டனவாகும்.

மேற்கூறிய நாவல்கள் வெவ்வேறு உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பினும் பொதுவான இயல்புகள் சிலவற்றையும் பெற்றுள்ளன. அவை: (1) தமிழ்ச் சமூகமும் அதன் பண்பாடும் விமர்சனத்திற்குள்ளாக்கப்படுகின்றமை (இத்தகைய ஒரு நாவலின் தலைப்பாக 'உலகமெல்லாம் வியாபாரிகள்' என்பது அமைந்துள் ளமையை இப் பின்னணியிலேயே நோக்கவேண்டும்); (2) இதற் கேற்றவாறு பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றமை.

மேற்கூறிய பின்னணியில் வெளிவந்த முதல் நாவலான 'ஒருகோடை விடுமுறை' (1981) இலண்டனில் வாழ்கின்ற தமிழ் இளைஞர்களின் அரசியல் ஈடுபாட்டை ஓரளவு வெளிப்படுத்த முற்படுகின்றது. தமிழீழ விடுதலையில் நாட்டங்கொண்டு செயற் படுவோரும் (எ-டு : சபேசன்) தமிழர் - சிங்களவர் ஒற்றுமை பேசும் முற்போக்குவாதிகளும் (எ-டு : சத்தியன்) இதில் இடம்பெறுகின்றனர். (இந்நாவலின் மற்றொரு பகுதி ஈழத்தில் நிகழ்கின்றது).

'உலகமெல்லாம் வியாபாரிகள்' (1991) முற்குறிப்பிட்ட நாவலை விட விரிவாக இலண்டன் வாழ் தமிழர்களது அரசியலு ணர்வுகளை வெளிப்படுத்துகின்றது. அத்துடன், ஈழத்திலிருந்த போது தந்தைக்கடங்கி காதலைத் துறந்து இலண்டன் சென்றபின் தந்தையின் கட்டளைப்படி பணக்காரனான சிவனேசுவை மணந்து அவனது கொடுமைகள் தாங்காமல் அவனைக் கைவிட்டு இலண்டனில் வாழ்கின்ற தனது முன்னாள் காதலனை அடையும் துணிவைப் பெறும் சகுந்தலாவும் இலண்டன் வாசியான அன்ரனி என்ற ஆங்கிலேயனைக் காதலிப்பவளாக மற்றொரு மகளாக மீனாவும் இந்நாவலில் இடம்பெறுகிறார்கள். புலம்பெயர்ந்து பலநாடுகளிலும் வாழ்கின்ற தமிழரில் ஒருசாராரது பண்பாடும் அரசியலும் இந்நாவலில் முற்குறிப்பிட்டதுபோல, கூர்மையான விமர்சனத்திற்குட்படுவதற்கு சான்றாக பின்வரும் பகுதிகளைக் குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்யாணம் என்பது என்னைப் பொறுத்தவரையில் இரண்டு மனிதப் பிறப்புகளுக்கிடையில் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. அது சமயச் சார்பிலோ அல்லது வேறு எந்தப் பொருளாதார முறையிலோ அமைவது வெறும் வியாபாரம். உன் தந்தை போன்றவர்களுக்கு வாழ்க்கையில் எல்லாமே வியாபாரம். தனிப்பட்ட வாழ்க்கையிலோ அரசியலைப் பொறுத்தவரையிலோ எதிலும் லாப, நட்டத்தின் அடிப்படையில்தான் அவர்களால் யோசிக்க முடியும்".

- கார்த்திகேயன்

"காசுக்காக எதையும் வாங்க எத்தனையோ தமிழர்கள் காத்திருக்கினம். எங்கட தமிழர்களைப் பொறுத்த வரையில் பெண்கள் வெறும் கத்தரிக்காய்கள்தானே. வாங்கலாம் விற்கலாம்."

- சகுந்தலா

உயர்கல்விகற்கின்ற நோக்கத்துடன் இலண்டனுக்கு வந்து வாழ்கின்ற (1972 - 74) தமிழ் இளைஞர்களின் மன ஓட்டங்கள், அவர்கள் வாழ்க்கையைப் பார்க்கும் விதம் என்பனவற்றை அடிச்சரடுகளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது 'தேம்ஸ் நதிக்கரையில்' (1992). குறிப்பாக அவ்விளைஞர்கள் அந்நாட்டுப் பெண்களோடு "காதல்" கொள்வதும் பின்னர் கல்வி கற்று முடிந்ததும் ஈழத்தில் திருமண சந்தையில் தம்மை எவ்வித தயக்கமுமின்றி விற்றுக் கொள்வதும் பற்றி சித்திரிக்கின்றது.

'பனிபெய்யும் இரவுகள்' (1993) வித்தியாசமானதொரு காதல் கதையாகும், பருவகாலக் காதல் (ராதிகா - தியாகு), அர்ப்பணிப்புக் காதல் (தியாகு - சாரதா), இன்ரலெக்சுவல் காதல் (இராமநாதன் - சாரதா) என்ற மூன்று வகைக் காதல் பற்றி பேசுவதாகும். எனினும், பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டிற்கு அதிர்ச்சி தரக்கூடிய பல விடயங்கள் இந்நாவலில் இடம்பெறுகின்றன.

மாற்றமுறுகின்ற - புதிய - பண்பாட்டுச் சூழலுக்கு இலண்டனில் வாழ்கின்ற தமிழ்ப்பெண்கள் எவ்வாறு முகங்கொடுக்கிறார்கள் என்பது பற்றி விபரிப்பது, 'வசந்தம் வந்துபோய் விட்டது' (1997).

'அவனும் சில வருடங்களும்' என்ற நாவல் மேற்கூறிய நாவல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, இலண்டன் திரைப்படக் கல்லூரியில் பயில்கின்ற தமிழ் மாணவர்களது அனுபவங்கள் சார்ந்துள்ளது.

புகலிட நாவல்களுள் இரண்டு, நோர்வேயில் வாழ்கின்ற தமிழரது வாழ்க்கை முறைபற்றி விவரிக்கின்றன. புலம்பெயர்ந்து நீண்டகாலம் வாழ்கின்ற தமிழர்கள் அனுபவிக்கின்ற தனிமை வாழ்க்கை மிகக்கொடூரமானது. அவர்களது உடலுணர்ச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிகாலாவது அந்நாட்டுப் பெண்களுடன் அவர்கள் ஏற்படுத்துகின்ற உறவாகும். இதுகாரணமாக எயிட்ஸ் நோய்க்குள்ளாகிய தமிழ் இளைஞனொருவனது மன உணர்வுகள் துல்லியமாகவும் யதார்த்த பூர்வமாகவும் வெளிப்படுத்துகிறது 'அழிவின் அழைப்பிதழ்' (1997) என்ற நாவல்.

புகலிட நாடுகளிலுருவாகி வரும் புதிய நெருக்கடிகளுள் முதன்மை பெற்றுள்ள நவநாஜிகள் இயக்கத்தின் கெடுபிடிகள் பற்றி விவரிப்பது 'நாளை' (1999). அத்தகைய இயக்கத்திற்கு நோர்வேயில் வாழ்கின்ற தேவகுருவின் குடும்பம் இலக்காவதும் அத்தகையோரை தேவகுரு அன்பினால் திருத்த முனைவதும் அவ்வியக்கத்தால் மகள் கொல்லப்படுவதுடன் மனைவி துன்புறுத்தப்படுவதும் தேவகுரு தளர்ச்சியடையாமல் அகிம்சை வழிமுறையைப் பின்பற்றுவதுமே நாவலின் உள்ளடக்கமாகும்.

டென்மார்க் தமிழரது வாழ்க்கை பற்றி எழுந்த (துரை எழுதிய) 'சுயம்வரம்' (1993) நாவலின் ஆரம்ப பகுதி மட்டுமே அந்நாட்டின் பின்னணியைக் கொண்டது. அப்பகுதியில் உயர்ந்த பண்பாடு கொண்ட டென்மார்க் குடும்பமொன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது. (பிற்பகுதி ஈழத்தில் நடக்கிறது).

தவிர, இரு குறுநாவல்கள் பற்றியும் பொருத்தம் கருதி இவ்விடத்தில் குறிப்பிடுவதவசியம். இவற்றுள் ஒன்றான (பொ.கருணா கரமூர்த்தி எழுதிய) 'மாற்றம்' மேற்கு ஜேர்மனியில் வாழ்கின்ற தமிழ்க் குடும்பம் பற்றியது. ஈழத்தில் பெண்நிலைவாதச் சிந்தனைக் காட்பட்டிருந்தவள், புகலிட நாட்டு வாழ்க்கையில் பாரம்பரியச் சிந்தனைக்குட்பட்ட தமிழ்ப் பெண்ணிற்கான உன்னத எடுத்துக் காட்டாக மாறவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவதையே இப்படைப்பு எடுத்துக் காட்டுகின்றது. 'வானம் வசப்படும்' என்ற மற்றொரு குறுநாவல் மேற்கு ஜேர்மனியில் அகதி முகாமொன்றில் வாழ்கின்ற தமிழர் நால்வரது அன்றாட வாழ்க்கை நிலையைச் சுவைபடச் சித்திரிக்கின்றது.

புலம்பெயர்ந்து செல்லாது ஈழத்தில் இருந்து கொண்டு (அல்லது தமிழ் நாட்டிலிருந்து கொண்டு) எழுதப்பட்ட சில புகலிட நாவல்களு முள்ளன. இவ்விதத்தில் செ.கணேசலிங்கன் எழுதிய 'கோடையும் பனியும்' (2003), சுவீடன் நாட்டில் வாழ்ந்துவிட்டு இங்கு வருகின்ற சிவபாலன், ரூபி (சுவீடிஷ்) தம்பதிகள் பற்றியது; அங்கும் இங்கும் அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் பற்றி அலசுவது. 'இருட்டறையில் உலகம்' (2004) கனடாவில் கணவனுடன் வாழ்கின்ற புனிதம் என்ற பெண் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தாய் வீடு' (2001) ஜேர்மனியிலிருந்தும் கனடாவிலிருந்தும் தந்தையின் மரணச் சடங்கிற்கு வருகின்ற இரு புதல்விகள் ஊடாக அந்தந்த நாட்டுப் பிரச்சினைகள் பற்றியும் வெளிப்படுத்தமுயல்கின்றது. உரையாடல்களே இந்நாவல்களின் பலமும் பலவீனமுமாகின்றன.

புகலிட நாவல்களின் வரவு, ஈழத்து நாவல் வளர்ச்சியில் புதிய களங்களையும் புதிய பிரச்சினைகளையும் அறிமுகப்படுத்துகின்றது. இவை கையாள்கின்ற பிரச்சினைகள் பலவும் புகலிடஞ் சார்ந்த ஈழத்தவர்களுக்கு மட்டுமன்றி அங்கு வதியும் ஏனைய நாட்டவர்க்கும் பொதுவானவையாகின்றன. இவ்விதத்தில் ஈழத்து நாவல்கள் மூன்றாம் உலக நாட்டு நாவல்களுக்குச் சமமான திசைநோக்கிச் செல்கின்ற ஆரோக்கியமான வளர்ச்சி நிலைமை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# தொண்ணூறுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்
## புதிய போக்குகள்

### போர்க்கால வாழ்க்கை

ஈழத்துத் தமிழ் மக்கள் தொண்ணூறுகள் தொடக்கம் போர்க்கால வாழ்க்கைக்குட்பட்டனர். இத்தகைய வாழ்க்கை முறையின் பன்முக வெளிப்பாடுகளைச் சித்திரிக்கும் நாவல்கள் குறிப்பாக வன்னி, யாழ்ப்பாணப் பிரதேசங்களிலிருந்து இக்காலப் பகுதியில் வெளிவந்துள்ளன.

வன்னிப் பிரதேச நாவல்களுள் (தாமரைச் செல்வி எழுதிய) 'விண்ணில் அல்ல விடிவெள்ளி' (1992), 'தாகம்' (1993), (பொன்.கணேசமூர்த்தி எழுதிய) 'துளித்துளியாய்' (2002) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. போர்க்காலச் சூழலில் கிளிநொச்சிப் பிரதேசத்தில் சாதாரண ஒரு விவசாயக் குடும்பம் எதிர்நோக்கும் அவலங்கள் (குத்தகைக் காணியில் விவசாயம் செய்தலும் அதனாலேற்படும் பிரச்சினைகளும் இந்திய அமைதிகாக்கும் படையின் அட்டூழியங்களும்) 'விண்ணில் அல்ல விடிவெள்ளி'யில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கராஜ் வைத்திருக்கும் ஒருவனையும் அவனது தொழிற்கஷ்டங்களையும், அமைதியாக வாழ்கின்ற இன்னொரு குடும்பத்தையும் இவர்களுக்கிடையிலான உறவினையும், போர்க்கால நெருக்கடிகள் ஏற்படுத்தும் மாற்றங்களையும் வெளிப்படுத்துவது 'தாகம்' ஆகும். 'துளித்துளியாய்' சற்று வித்தியாசமான சூழலில் அமைந்துள்ளது; போர்நெருக்கடிச் சூழலில் கடும் நோயினால் பீடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளைஞனொருவனின் மன உணர்வுகளைப் படம்பிடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பிரதேச நாவல்களுள் (பொன்.கணேசமூர்த்தியின்) 'தொடுவானம் தூரத்தில்' (1995) போர்க்காலச் சூழலில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இளம் போராளி ஒருவனது மனிதநேய உணர்வுகளையும் அங்குள்ள இளம்தாதி ஒருத்தியின் அவன் மீதான பாசத்தையும் அவளது தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் வெகு இயல்பான முறையில் சித்திரிக்கின்றது.

வெளிநாடு செல்லும் எண்ணத்துடன் கொழும்பு புறப்பட்ட இளைஞனொருவன் ஆனையிறவிலும் வவுனியாவிலும் கொழும்பிலும் அனுபவிக்கின்ற சித்திரவதைகளையும் அதுகாரணமாக, மனமாற்றத்துடனும் மனத்தெளிவுடனும் ஊருக்குத் திரும்புவதையும் காட்டுவது (இயல்வாணனின்) 'சுவடுகள்' (1992).

(செ.கணேசலிங்கனின்) 'ஒரு மண்ணின் கதை' (1994) நாவலில் திருமணத்திற்காக கனடாவிலிருந்து கொழும்பு வருகின்ற இளைஞனொருவனூடாக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நிகழ்கின்ற போர்க்கால நெருக்கடிகள் விவரிக்கப்படுகின்றன. (செ.கணேசலிங்கனின்) 'அயலவர்கள்' (1995), 'பொய்மையின் நிழலில்' (1997) ஆகியன கொழும்பில் முன்னர் நட்புக்கொண்டிருந்த இரு தமிழ் சிங்களக் குடும்பங்கள் மறுபடி போர்ச்சூழலில் யாழ்ப்பாண மண்ணில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை மார்க்சிய நோக்கிலான பின்னணியில் வெளிப்படுத்துகின்றன.

(மு.பொன்னம்பலம் எழுதிய) 'நோயிலிருத்தல்' (1999) இந்திய அமைதி காக்கும் படை யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவரது சமகால அனுபவங்களையும் முன்னைய கால நினைவுகளையும் விவரிக்கின்றது. எனினும், வித்தியாசமான முறையில், அவை அனைத்தினூடாகவும் தர்க்கரீதியான ஆத்ம விசாரணை பற்றிய அலசலுக்கு முதன்மையளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொண்ணூறுகளில் இடம்பெற்ற யாழ்ப்பாண மக்களது இடப்பெயர்வினை முதன்மைப்படுத்தி, அவ்வேளை பொதுமக்கள் எதிர்கொண்ட அவலங்களை (செங்கையாழியானின்) 'மரணங்கள் மலிந்த பூமி' (2000)யும், இடம்பெயராது தங்கிவிட்டவர்களது துயரங்களை (செ.கணேசலிங்கனின்) 'ஈனத்தொழில்' நாவலும் அவ்விடப் பெயர்வு பற்றியும் அதனோடொட்டி நிகழ்கின்ற போராட்ட இயக்கத்தினரின் செயற்பாடுகள் பற்றியும் செங்கை ஆழியனின் 'போரே நீ போ' நாவலும் பேசுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக, தொண்ணூறுகளுக்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இராணுவக் கெடுபிடிகளும் போராட்டச் செயற்பாடுகளும் உக்கிரம் பெறுகின்ற போது பொதுமக்கள் தமிழ்நாட்டிற்குச் செல்வது இயல்பாகும். இவ்வாறு செல்கின்றோர் வழிநடுவிலும் தமிழ்நாட்டிலும் பெறுகின்ற அனுபவங்கள் அகதி முகாம்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியதாகவுள்ளது (செ.யோகநாதனின்) 'துன்பக்கேணியில்' (1997).

தொண்ணூறுகளில் வெளிவந்த நாவல்களுள் அளவில் பெரிய நாவலாகவும், விமர்சகர் பலரது கவனத்திற்குள்ளான நாவலாகவும் திகழ்வது 'கனவுச் சிறை' என்ற பொதுத்தலைப்பில் (தேவகாந்தன் என்பவரால்) எழுதப்பட்ட சமகால வரலாற்று நாவல். ஏறத்தாழ 2000 பக்கமளவில் 'திருப்படையாட்சி', 'வினாக் காலம்', 'அக்னிதிரவம்', 'உதிர்வின் ஓசை', 'ஒரு புதிய காலம்' என்ற மகுடங்களில் வெளி வந்துள்ள இந்நாவல் 1981 தொடக்கம் 2001 வரையான காலப் பகுதியைக் களமாகக் கொண்டது. நயினாதீவில் ஆரம்பித்து கட்சிப் பூசல்கள், கூட்டணி அமைப்பு, தமிழீழ போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி, இடப்பெயர்வு, தமிழக வாழ்க்கை, புலம்பெயர் வாழ்க்கை என்ற வெவ்வேறு களங்களில் விரிந்து செல்கின்றது. வலுவான யதார்த்தப் பின்புலமும் பாத்திர உருவாக்கமும் கட்டமைப்பும் கதைசொல்லும் முறையும் நாவலுக்குச் சிறப்பளித்துள்ளன.

## போராளிகளின் அனுபவங்கள்

விடுதலைப் போராட்டத்திலீடுபட்டவர்கள் நாவல் எழுதுகின்ற முயற்சி இக்காலப் பகுதியிலேயே இடம் பெறுகின்றது. இவ்விதத்தில் மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு பற்றிய அனுபவப் பகிர்வாக வெளியிடப்பட்டுள்ள (மலரவன் என்ற போராளி எழுதிய) 'போருலா' என்ற நாவல் விதந்துரைக்கப்பட வேண்டியது. (அதே நாவலாசிரியர் எழுதிய) 'புயல் பறவை' என்ற நாவல் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக மாணவர்கள் போராட்ட இயக்கங்களில் இணைந்து செயற்பட முற்படுவதை விவரிக்கின்றது.

('தமிழ்க்கவி' என்பவராலெழுதப்பட்ட) 'இனி இருள் விலகும்' என்ற நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பெண்போராளிகள் சிலரது கெரில்லா தாக்குதல் அனுபவங்கள் பற்றி விவரிக்கின்றது. (அதே நாவலாசிரியரின்) 'இனி வானம் வெளிச்சிடும்' (2002) நாவல் பரந்த தளத்தில் இயங்குகின்றது; இளம் பெண்ணாக குடும்ப வாழ்விலீடு பட்ட காலத்தில் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளிலீடுபட்டது தொடக்கம் பின்னர் விடுதலை இயக்கமொன்றில் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டச் செயற்பாடுகளிலீடுபட்டு தனது இரு பிள்ளைகளையும் போரிலே பறிகொடுத்துவிட்டு வாழ்கின்றது வரை ஒருதாயின் நீண்டகாலத்து மனப்போராட்டங்களையும் அனுபவங்களையும் நுணுக்கமாக சித்தரிக்கின்றது.

## முஸ்லீம் தேசியம்

முன்னைய காலப் பகுதியிலேயே முகிழ்த்திருந்த முஸ்லீம் தேசியவுணர்ச்சி பற்றி கவிதைகளும் சிறுகதைகளும் ஏலவே வெளிவந்திருப்பினும் அதுபற்றி விவரிக்கும் முக்கியமான முதல் நாவல் இக்காலப்பகுதியிலெழுந்துள்ள (எஸ்.நஸீறுதீன் எழுதிய) 'நச்சு வளையம்' (2004) ஆகும். நிலாம் என்ற முஸ்லீம் இளைஞனது இளமைக் கால வாழ்க்கையைச் சுற்றி பின்னப்பட்டுள்ள இந்நாவலில் முஸ்லீம் - தமிழரது நெருக்கமான உறவும் பின்னர் மெல்ல மெல்ல உருவாகிவந்த உறவுப் பிறழ்வும் ஈரினப்படுகொலைகளும் தத்ரூபமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிலாம் என்ற பாத்திர உருவாக்கம் சிறப்பாக அமைந்துள்ளமையும் வளமான மொழி நடையும் இந்நாவலின் சிறப்பம்சங்களாகும்.

## சமூக வரலாறு

முற்பட்ட கால சமூக வாழ்க்கை, சமூக உருவாக்கம் சார்ந்த விடயங்களை நாவலாக எழுதுவதில் இக்கால நாவலாசிரியர்கள் சிலர் ஆர்வங்காட்டிவந்துள்ளனர்.

ஆலங்கேணி (மூதூர்சார்ந்த கிராமம்) மக்களது 1938 - 1945 கால வாழ்க்கை முறை பற்றி சுருக்கமாக பதிவு செய்துள்ளது (வ.அ.இராசரத்தினத்தின்) 'மண்ணில் சமைந்த மனிதர்கள்' (1996).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் ஆங்கில நிர்வாகத்திற்கெதிராக போர்க்கொடி உயர்த்திய வன்னிப் பிரதேச தண்ணீரூற்று மக்களது வாழ்க்கை பற்றியது (முல்லைமணி எழுதிய) 'கமுகஞ்சோலை' (2000). 'கமுகஞ் சண்டை' என்ற பெயரில் வழங்கும் நாட்டார் கதைப்பாடல் ஒன்றை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்டிருப்பது இந்நாவலின் சிறப்பம்சமெனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரையிலான யாழ்ப்பாண மக்களது வரலாற்றை விரிவாக எழுதும் நோக்குடன் (செ.யோகநாதனால்) ஆரம்பிக்கப்பட்ட நாவல் முயற்சியென்று விரிவாகத் திட்டமிடப்பட்டாலும் பின்னர் குறுகி 'அசுரவித்து' என்ற பெயரில் முதற்பகுதியாகவும், ஏனைய பகுதிகள் 'நேற்றிருந்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வீட்டினிலே' என்ற நாவலாகவும் வெளிவந்துள்ளன. ('அசுரவித்து' இவ் ஆய்வாளரது பார்வைக்கெட்டவில்லை).

இறுதியாகக் கூறப்பட்ட நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணத் தமிழ் மக்களது வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டுள்ளது; கற்பனைப் பாத்திரங்களோடு சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர், வைமன் கதிரைவேற்பிள்ளை போன்ற தமிழ் பெரியார்களையும் நடமாடவிட்டுள்ளது. இது காரணமாக, சில ஆய்வாளர்கள் கூறுவது போன்று முற்றுமுழுதாக ரொமான்றியப் பாங்குடைய நாவலென்று கூறமுடியாத நிலையைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏறத்தாழ ஐம்பதுகளில் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் குடியேறி பின்னர் கிளிநொச்சி என்ற கிராமமும் நகரமும் உருவான வரையான வரலாற்றை விவரிக்கின்ற நாவலாக (தாமரைச்செல்வியின்) 'பச்சை வயல் கனவு' (2004) அமைந்துள்ளது.

நூற்றாண்டுக்கால யாழ்பாண முஸ்லீம் மக்களது வரலாற்றை (மொஹடின்ரஜா எழுதிய) 'நேற்றைய சுகந்தமும்' (2001) காத்தான்குடி முஸ்லீம் மக்களது வரலாற்றை (ஜூனைதா ஷெரிப் எழுதிய) 'சின்ன மரைக்கார் பெரிய மரைக்கார்' (2005) நாவலும் சித்திரித்துள்ளன.

மேற்கூறிய அனைத்தையும் விட (தேவகாந்தன் எழுதிய) 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' (2003) முக்கிய கவனிப்பிற்குரிய படைப்பாகின்றது. இருநூற்றாண்டுக்கால (19ம் நூற்றாண்டு தொடக்கம் 20ம் நூற்றாண்டின் 5ம் தசாப்தம் வரையான) தமிழ்ச் சமூக வரலாற்றை வெகுநேர்த்தியாக, கலாபூர்வமான விதத்தில் தந்துள்ளது. சாதாரண மக்களது வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்டுள்ளது.

வன்னிப் பிரதேசக் கிராம மக்களின் 1945 - 1960 கால வாழ்க்கை முறைகளை - இருதலைமுறையினரின் வாழ்க்கையை - நிலப் பிரபுத்துவ / விவசாயக் குடும்பங்களுக்கிடையிலான ஊடாட்டத்தை முதன்மைப்படுத்தி எழுந்துள்ள (முல்லைமணி எழுதிய) 'மழைக் கோலம்' (2003) நாவலும் குறிப்பிடத்தக்க படைப்பாகின்றது.

கொழும்புப் பிரதேசத்தில் இன்று இடிந்த நிலையிலுள்ள நெசவாலையின் முன்னைய கால வரலாற்றை தொழிலாளரது வாழ்க்கைப் போராட்டங்களை முதன்மைப்படுத்தி விவரிக்கின்ற (கே.விஜயன் எழுதிய) 'மனநதியின் சிறுஅலைகள்' (2000) நாவலும் கவனத்திற்குரியதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் துஷ்பிரயோகம்

மேற்கூறிய விடயம் ஈழத்திலே இன்று முக்கிய பிரச்சினையாக விருப்பினும் எழுத்தாளர்கள் இதுபற்றி போதிய கவனஞ் செலுத்தியிருப்பதாகக் கூறமுடியாது. இந்நிலையில் இவ்விடயம் பற்றி எழுந்துள்ள (லறினா ஏ.ஹக் எழுதிய) 'ஒரு தீப்பிழம்பும் சில அரும்புகளும்' நாவல் கவனத்தை ஈர்த்திருப்பது கண்கூடு. ஏழைச்சிறுமியொருத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுதல், அக்காட்சியைப் பார்த்த மற்றொரு சிறுமி மனப்பாதிப்பிற்குட்படுதல், குடிகாரத தகப்பனுள்ள வீட்டுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தல் முதலான சிலவிடயங்கள் சுருக்கமாக இந்நாவலில் பேசப்படினும் முதல் நாவல் என்ற விதத்தில் குறிப்பிடத்தக்கதொன்றே.

## கருத்து விளக்க நாவல்கள்

முதுமை, மரணம் ('மரணத்தின் நிழலில்' - 1994), அந்நியமாதல் ('அந்நியமாதல்' - 1995), சுயநலம், சுரண்டல் ('தேன்பறிப்போர்' - 2004) ஆகிய விடயங்களுக்கு முதன்மை கொடுத்து பெரும்பாலும் உரையாடல்களூடாக அவற்றை அலசுகின்ற நாவல்களும் இக்காலப் பகுதியில் (செ.கணேசலிங்கனை நாவலசிரியராகக் கொண்டு) வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்ளடக்கம் புதிதாயினும் இவை எவ்வளவு தூரம் நாவலாகியுள்ளன என்பது கேள்வியை எழுப்புவது அவசியமே.

## அனுராதபுர மக்களது வாழ்க்கை

அனுராதபுரத்தில் வாழ்கின்ற முஸ்லீம் விவசாய மக்களது வாழ்க்கையையும் அவர்களுக்கும் அங்கு வாழ்கின்ற சிங்கள மக்களுக்குமிடையிலான தொடர்புகளையும் விவரிக்கும் (ப.ஆப்டீன் எழுதிய) 'கருக்கொண்ட மேகங்கள்' (1999) என்ற நாவல் அனுராதபுர மக்களது வாழ்க்கையை களமாகக் கொண்ட முதல் நாவல் என்ற விதத்தில் குறிப்பிடத்தக்கது. இப்பிரதேச முஸ்லீம் மக்களது பேச்சுமொழியை சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளமை இந்நாவலிற்குச் சிறப்பளிக்கின்ற விடயமாகிறது.

## தனிமனித உணர்வுகள்

சமூக, அரசியல் பிரச்சினைகள் அனைத்திலிருந்தும் விடுபட்டு வித்தியாசமான கருவைக் கொண்டு எழுந்துள்ள (தெணியானின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காத்திருப்பு' (1999), 'கானலில் மான்' (2002) ஆகிய இரண்டும் கவனத்திற்குரிய இக்காலப் படைப்புகளாகின்றன. முன்னைய நாவல் உடல்வேட்கை காரணமாக ஒழுக்கப்பிறழ்வுக்குள்ளாகின்ற பெண்ணும் அதனால் அவளை வெறுக்காத கணவனும் பற்றி அமைய, அடுத்த நாவல் அன்பிற்காக ஏங்கும் ஒரு மனிதன் பற்றியதாகக் காணப்படுகின்றது. நாவல்களின் பாத்திர வார்ப்பும் கலாபூர்வமான வெளிப்பாடும் கவனத்தைக் கோருகின்றன.

## புகலிட நாவல்கள்

முற்றிலும் புதிய களம், புதிய பிரச்சினைகள் ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டு வெளிப்பட்டுள்ள புகலிட நாவல்கள் இக்கால நாவல்களுள் முக்கியமான கவனிப்பை கோரியுள்ளன. இவற்றுள் வெவ்வேறு தளங்களில் இலண்டனில் வாழ்கின்ற தமிழர்களது வாழ்க்கை பற்றிப் பேசுகின்ற (இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய) 'உலகமெல்லாம் வியாபாரிகள்' (1991), 'தேம்ஸ்நதிக்கரையில்' (1992), 'பனிபெய்யும் இரவுகள்' (1993), 'வசந்தம் வந்து போய்விட்டது' (1997), 'அவனும் சில வருடங்களும்' முதலில் விதந்துரைக்கப்பட வேண்டியவை. நோர்வே தமிழரது வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்டு தமிழ் இளைஞனொருவனின் பாலுணர்வு உந்தலையும் எயிட்ஸ் நோய்க்கு அவன் உள்ளாவதையும் சித்திரிக்கும் (தியாகலிங்கம் எழுதிய) 'அழிவின் அழைப்பிதழ்' (1997), நவநாஜிகள் இயக்கம் ஏற்படுத்தும் நெருக்கடிகளை விவரிக்கும் 'நாளை' (1999) என்பனவும் குறிப்பிடத்தக்க நாவல்களாகின்றன.

ஈழத்தமிழரது அரசியல் / சமூகப் பிரச்சினைகள் விவரிக்கின்ற நாவல்களும் புகலிட நாவலாசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள், (ஷோபா சக்தி எழுதிய) "கொரில்லா" (2001), கெக்கிராஜ் என்ற பாத்திரம் இந்திய / இலங்கை இராணுவங்கள், ஒரு தமிழ்ப் போராளிக் குழு என்பவற்றிடமிருந்து அடைந்த இன்னல்களைத் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றது; 'ம்', வெலிக்கடைப் படுகொலையை முதன்மைப்படுத்துகிறது. (செழியன் எழுதிய) 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' என்ற நாவல் இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் அவற்றிலிருந்து தப்பி வருமொருவரையும் பற்றியது.

University of Peradeniya
08 MAR 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்நிலைவாத நோக்குடைய நாவல்கள்

ஆண் எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ள பெரும்பாலும் மார்க்சிய பெண்நிலைவாத நோக்கினை அனுசரித்துச் செல்கின்ற பல நாவல்களின் வரவும் இக்காலப் பகுதியில் இடம்பெறுகின்றது. இவ்விதத்தில் (செ.யோகநாதன் எழுதிய) 'தனிமையில் ஒருத்தி', (செ.கணேசலிங்கன் எழுதிய) 'ஒரு பெண்ணின் கதை' (1992), 'இரண்டாவது ஜாதி' (1993), 'ஒரு குடும்பத்தின் கதை' (1993), 'நீ ஒரு பெண்' ( 1995), 'உலகச் சந்தையில் ஒரு பெண்' (1996), 'நான்கு சுவர்களுள்' (2000) என்பன குறிப்பிடத்தக்கன.

## முன்னைய போக்குகளின் தொடர்ச்சி - பிரதேசநாவல்கள்

### தென்னிலங்கை

தென்னிலங்கைப் பிரதேச முஸ்லிம் மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கும் முக்கியமான நாவல்கள் சில, இக்காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. இவற்றுள் (எம்.எச்.எம்.ஷம்ஸ் எழுதிய) 'கிராமத்துக் கனவுகள்' (1999), தென்னிலங்கையின் பழைய கிராமமொன்றின் மூன்று தலைமுறை வாழ்க்கையையும் பாரம்பரிய நடைமுறைகளை யும் சமய நம்பிக்கைகளையும் பழைமையின் சரிவையும் புதுமையின் வரவையும் எழுச்சியையும் தத்ரூபமாக அக்கிராம மக்களது மொழியில் பேசுகின்றது. இவ்விதத்தில், ஈழத்தில் இன்றுவரை வெளியான முஸ்லீம் மக்கள் பற்றிய நாவல்களுள் முதன்மை இடம்பெறுகின்றது. நாவலாசிரியரது மார்க்சீய சிந்தனைகளின் வெளிப்பாடு காரணமாக முஸ்லீம் விமர்சகர் சிலரது கடுமையான கண்டனங்களுக்குள்ளான முதல் நாவலாகவும் இது விளங்குகின்றது.

(திக்வெல்லை கமால் எழுதிய மூன்று நாவல்களுள் ஒன்றான) 'ஒளிபரவுகின்றது' (1995) என்ற நாவல் தென்னிலங்கைக் கிராம மொன்றில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைச் சூழல் அக் கிராம மக்களது வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களை முதன்மைப்படுத்தி நகர்கின்றது. நோன்புக்கால பின்புலத்தில் பள்ளிவாசல் நிர்வாகத்தோடு தொடர்புபட்ட இருகுடும்பங்களுக் கிடையே நிகழும் பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றது. 'நச்சுமரமும் நறுமலர்களும்' (1998) என்ற நாவல். 'பாதை தெரியாத பயணம்' (1999), பாடசாலையைத் தளமாகக் கொண்டு இளந்தலைமுறையினர் கல்விபற்றி அலசமுற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஸனீறா காலிதீன் என்ற பெண் நாவலாசிரியை எழுதிய) 'ஒருதீபம் தீயாகிறது' (1999) களுத்துறைப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டெழுந்த முதல் நாவலாகவுள்ளது. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஆண்களால் தவறாக எடைபோடப்பட்ட, உயர் சிந்தனையுள்ள பெண்ணொருத்தியை முதன்மைப்படுத்தி எழுந்த நாவலாகின்றது.

**மட்டக்களப்பு**

உதயம் பதிப்பகம் என்ற நிறுவனம் மட்டக்களப்பு எழுத்தாளர்களது நாவல்களை மாதமொரு முறை வெளியிடுகின்ற நோக்கோடு இக்காலப் பகுதியில் செயற்பட்டமை காரணமாக மட்டக்களப்பு பிரதேசம் சார்ந்த நாவல்கள் அதிகளவு வெளிவரும் வாய்ப்பு உருவானது. மூத்த தலைமுறை எழுத்தாளர்களும் புதிய தலைமுறை எழுத்தாளர்களும் தமது நாவல்களை வெளியிடுவதில் ஆர்வங் காட்டினர். எனினும், இவற்றுள் பலவும் குறுநாவல்களே. இவற்றைத் தவிர்த்து நோக்கும்போது பிற்பட வெளிவந்த நாவல்களுள் (செ.குணரத்தினம் எழுதிய) 'துன்ப அலைகள்' (2002) ஏழைக் குடும்பமொன்றின் அன்றாட வாழ்க்கை அவலங்களை வெளிப் படுத்துகின்றது. பின்தங்கிய கிராமமொன்று கல்வி வாய்ப்புக் காரணமாக முன்னேறுவது பற்றிய இலட்சிய நாவலாகவுள்ளது (செ.குணரத்தினம் எழுதிய) 'ஒரு கிராமம் தலை நிமிர்கிறது' (2001), (ஓ.கே.குணநாதன் எழுதிய) 'ஆடித் தீ ' இனக்கலவரத்திற்குப் பிற்பட்ட இருதசாப்த கால நிகழ்வுகளை காதலும் இயக்கப் போராட்டமும் விரவ விபரிக்கின்றது.

**அம்பாறை**

இப்பிரதேச நாவல்களுள், கோளாவில் கிராமத்தில் வாழ்ந்த கௌரி, மரகதம், சாரதா ஆகிய மூன்று பெண்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் (இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய) 'தில்லையாற்றங்கரை' குறிப்பிடத்தக்கதொன்று. மூன்று தலை முறைகளின் சட்ட திட்டத்தை எதிர்த்துப் போராடியதைப் பற்றி அல்லது போராடியதாக நினைத்ததைப்பற்றிய மூன்று பெண்களின் கதையாகவுள்ள இந்நாவலின் முற்பகுதி மண்வாசனை மிக்கதாகவும் பிற்பகுதி சமகால அரசியல்வாடை வீசுவதாகவும் விளங்குகின்றது.

சலவைத் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பரஞ்சோதி என்ற பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு (விமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைவேல் என்பவரால்) எழுதப்பட்ட 'வெள்ளாவி' என்ற நாவல் இரு காரணங்களால் விதந்துரைக்க வேண்டியதொரு படைப்பாகும். உயிர்த் துடிப்புடைய பேச்சுமொழியைக் கொண்ட மண்வாசனைமிக்க நாவலாக இருப்பது, ஒன்று. ஈழத்தில் சலவைத் தொழிலாளர் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இன்ப துன்பங்களையும் முதன் முதலாக யதார்த்தபூர்வமான முறையில் சித்திரிப்பது மற்றொன்று.

**திருகோணமலை**

இவ்விதத்தில் (புரட்சிபாலன் என்பவரெழுதிய) 'வசந்தகாலக் கோலங்கள்', (திருமலை வீ.என்.சந்திகாந்தி எழுதிய) 'மீண்டும் வசந்தம்' ஆகியவை கவனிக்கப்பட வேண்டியவை. முன்னைய நாவல், திருக்கடலூர் (படுக்கை) பகுதியில் வாழ்கின்ற மீனவர் மக்களது அன்றாட வாழ்க்கையைச் சித்திரிக்க முயல்கின்றது. மற்றைய நாவல் பெயரளவில் திருகோணமலை நகரினைக் களமாகக் கொண்டிருந் தாலும் ஒழுக்கம் தவறிய காதலும் அதுகாரணமாக ஏற்படும் பொதுவான பிரச்சினைகளுமே கருப்பொருளாகவுள்ளன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமமொன்றின் மீனவ வகுப்பினரது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இன்ப துன்பங்களையும் வெளிப்படுத்துவதாக காணப்படுகின்ற (செ.யோகநாதன் எழுதிய) 'மீண்டும் வந்த சோளகம்' இவ்விதத்தில் கவனிக்கத்தக்கது.

**மலையகம்**

இப்பிரதேசஞ் சார்ந்த குறுநாவல்கள் பல வெளிவந்துள்ள அளவிற்கு அதிக நாவல்கள் இக்காலப்பகுதியில் வெளிவந்திருப்பதாகக் கூறமுடியாதுள்ளது. இவ்வாறு வெளிவந்தவற்றுள் (மாத்தளை சோமு எழுதிய) 'எல்லைதாண்டா அகதிகள்' (1994), 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்பன குறிப்பிடத்தக்கன. முன்னையது இனக் கலவரச் சூழலைக் களமாகக் கொண்டும் பின்னையது களுகங்கைப் பிரதேசத்தில் மாணிக்கம் தோண்டுவோரது வாழ்க்கையைக் களமாகக் கொண்டும் அமைந்துள்ளன. (மாத்தளை வடிவேலுவின்) 'வழி பிறந்தது' தோட்டத் தொழிலாளரது வறுமையையும் அதனாலுருவா கின்ற போராட்டச் செயற்பாடுகளையும் பற்றிப் பேசுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனஒற்றுமை

தமிழர் - முஸ்லீம்கள், தமிழர் - சிங்களவர் ஆகியோரிடையேயான நெருக்கமான உறவுகளைப் பேசுகின்ற நாவல்கள் முன்னைய காலம் போன்று இக்காலப் பகுதியிலும் வெளிவருகின்றன. இவ்விதத்தில் மட்டக்களப்பு பின்புலத்தில் தமிழர் - முஸ்லீம்களுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவைச் சித்திரிக்கும் (ஜுனைதா ஷெரிவ் எழுதிய) 'ஒவ்வா முனைக் காந்தங்கள்' என்ற நாவலும், தமிழர் சிங்களவருக்கிடையிலான நெருக்கமான உறவினைப் பேசுகின்ற (அப்துல் ஸமது எழுதிய) 'தவறுகளாகும் தர்மங்கள்' நாவலும் குறிப்பிடத்தக்கவை.

## பல்கலைக்கழக வாழ்க்கை

பேராதனைப் பல்கலைக்கழக வாழ்க்கைக் களமாகக் கொண்டு முன்னர் 'கங்கைக் கரையோரத்தில்' எழுந்தது போன்று, தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பின்புலத்தில் வெளிவந்த (அப்துல் றஸாக் எழுதிய) 'வாக்குமூலம்' (2003) கவனத்திற்குரியதொன்று. மாணவர்களது பிரச்சினைகள் முதன்மை பெறாவிடினும் அவர்களுக்கிடையேயான நட்பு, பாசம் சார்ந்த உறவுகள் கலாபூர்வமான முறையில் அதுவும் இளந்தலைமுறை எழுத்தாளரொருவரால் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறே கிழக்குப் பல்கலைக்கழகப் பின்புலத்தில் (மைக்கல் கொலின்ஸ் என்பவரால் எழுதப்பட்ட) 'வெண்ணிலவே வாராயோ?' மாணவரிடையேயான நட்பு, காதல், கல்விசார் அனுபவங்களைச் சுவையாக விவரிக்கின்றது.

## வேடுவர் சமூக வாழ்க்கை

வேடர் வாழ்க்கையைப் பின்புலமாகக் கொண்டு முன்னர் 'கிட்டி', 'ஜன்ம பூமி' ஆகிய நாவல்கள் வெளிவந்திருப்பது போன்று இப்போது வெளிவந்துள்ள (ஆ.மு.சி.வேலழகன் எழுதிய) 'சில்லிக் கொடி ஆற்றங்கரை' (2004)யும் விதந்துரைக்கப்பட வேண்டிய தொன்று. மட்டக்களப்பு பிரதேச வெல்லாவெளிப் பகுதியை ஒட்டி, உட்பகுதிக்குள் செல்கின்ற வைக்கிஎல்ல, கொளுகொல்ல, உகன, வண்டந்தீவு ஆகிய கிராமங்களிலே 1940களில் சேனைப் பயிர்ச் செய்கை செய்து வந்த வேடுவர் சமூகத்தினரதும் வெல்லாவெளிப் பகுதியில் விவசாயம் செய்துவந்த விவசாய சமூகத்தினரதும் வரலாற்றுப் பின்னணியில் இந்நாவல் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்சாதியினர் வாழ்க்கை

யாழ்ப்பாணப் பிரதேச உயர்சாதியினரது சமகால வாழ்க்கை நிலையை - அவர்களது சரிவை - "எங்கள் தாத்தாவிற்கு ஒரு யானை இருந்தது" என்பது போன்ற மனஉணர்வில் வாழ்கின்ற அவர்களது நிலையை - விஜயலெட்சுமி என்ற பாத்திரத்தை மையமாகக் கொண்டு வெளிப்படுத்தும் (தெணியான் எழுதிய) 'மரக்கொக்கு' இக்காலப் பகுதியில் வெளிவந்த நாவல்களுள் முக்கியமானதொன்று. சிறந்த பாத்திர வார்ப்பில் கவனஞ் செலுத்தாத ஈழத்து நாவல் வளர்ச்சிப் பின்புலத்தில் விஜயலெட்சுமி என்ற பாத்திரப்படைப்பு ஈழத்துத் தமிழ் நாவலுலகில் நிலைத்திருக்கக் கூடியதொன்றாகக் சிருஷ்டிக்கப் பட்டுள்ளமை இந் நாவலுக்குரிய சிறப்பம்சங்களுளொன்றாகின்றது.

## வரலாற்று நாவல்கள்

இக்காலத்திலெழுந்த வரலாற்று நாவல்களுள், "கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்த"னின் தமிழ் நாட்டுப் படையெடுப்பைக் கருவாகக் கொண்ட (கலைவாணன் எழுதிய) 'காளைவிடுதூது' (1992), கயிலை வன்னியனது வரலாற்றைக் கருவாகிக் கொண்ட (முல்லைமணி எழுதிய) 'வன்னியர் திலகம்' (1998), எல்லாளனதும் துட்டகாமினியினதும் அரைநூற்றாண்டு வரலாற்றைக் கருவாகக் கொண்ட (செங்கை ஆழியான் எழுதிய) 'ஈழராஜா எல்லாளன்' (2004), 'குவேனி' ஆகியவை கவனத்திற்குரியவை. இவற்றுள் இறுதியாகக் குறிப்பிட்ட, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதம் எவ்வளவு தூரம் பயன்பட்டுள்ளது என்பதனை காலத்திற்கேற்ற விதத்தில் வெளிப்படுத்தும் 'ஈழராஜா எல்லாளன்' குறிப்பிடத்தக்கதொரு படைப்பாகின்றது.

## முன்னைய நாவல்கள் நூலுருப்பெறல்

முன்னர் எழுதப்பட்டு பிரசுரிக்கப் படாமலிருந்த (சில தொடர்கதைகளாக ஏலவே வெளிவந்தவை) நாவல்கள் பல இக்காலப் பகுதியில் நூலுருப் பெற்று வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்விதத்தில் (கசின் என்பவரது) 'சகடயோகம்' (1949), (அங்கையன் கயிலாசநாதனின்) 'செந்தணல்' (1969), (இளங்கீரனின்) 'அவளுக்கு வேலை வேண்டும்', (சி.வி.வேலுப்பிள்ளையின்) 'வாழ்வற்ற வாழ்வு' (1960) என்பன விதந்துரைக்கப்பட வேண்டியவை. எவ்வாறாயினும் உள்ளடக்கரீதியில் இக்காலகட்ட ஈழத்துத் தமிழ்நாவல் வளர்ச்சிப் போக்கு, முன்னைய காலகட்ட வளர்ச்சிப்போக்கிற்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று என்பதில் தவறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II
# சிறப்பு நோக்கு

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

## சிறிய தொக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# மட்டக்களப்பின் முதல் நாவல்: 'அரங்கநாயகி'

தமிழின் முதல் நாவல் 1879இல் வெளியான 'பிரதாப முதலியார் சரித்திரம்' ஆகும். இலங்கையின் முதல் நாவலாக 1856இல் வெளிவந்த 'காவலப்பன் கதையை' ஒரு சிலர் கருதுவர். அவ்வாறெனில் தமிழின் முதல் நாவலும் அதுவெனப் பெருமைப்பட முடியும். ஆயினும், அது மேலைத்தேய கிறிஸ்தவ சமயந் தழுவிய கதைகளுள் ஒன்றெனபதே பொருத்தமானது. அதே வேளையில் 1885இல் வெளியான 'அசன்பே சரித்திரம்' இலங்கையின் முதல் நாவலாகக் கருதப்படுவதில் பலருக்கும் உடன்பாடுள்ளது. திருக்கோணமலையின் முதல் நாவல் 1891இல் வெளியிடப்பட்ட "ஊசோன் பாலந்தைக்கதை"யாகும். யாழ்ப் பாணத்தின் முதல் நாவலாக 1905இல் வெளிவந்த "வீரசிங்கன் அல்லது சன்மார்க்க விஜயம்" என்பதனைக் கொள்ளலாம். இவ்விதத்தில் மட்டக்களப்பின் முதல் நாவலாக அமையக் கூடியது 1934இல் வெளியான 'அரங்க நாயகி'.

அரங்கநாயகியை எழுதியவர் மட்டக்களப்பு தாமரைக்கேணிப் பகுதியைச் சேர்ந்த வே.ஏரம்பமுதலி என்பவராவார். இவர் நீண்ட காலமாக நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளராகவும் சில வருடமாக ஆசிரியராகவும் பணிபுரிந்தவரென அறிய முடிகின்றது. பெருமாள்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரது மகனாகப் பிறந்த இவர் அரசடி சாதனா பாடசாலையில் ஆரம்பக் கல்வி பயின்று பின் உவெஸ்லியன் மிஷன் மத்திய ஆங்கில கலாசாலையில் கேம்பிறிச் சீனியர் வகுப்பில் சித்தி எய்தி கொழும்பில் உயர் கல்வி கற்றவராகத் தெரிகிறது.

அரங்கநாயகி, ஆங்கில நாவலாசிரியரான வால்ரர் ஸ்கொட் என்பவர் 1811இல் எழுதிய 'கெனில் வேர்த்' என்ற ஆங்கில நாவலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவலாகக் காணப்படுகின்றது. இந்நாவல் ஏரம்ப முதலி கல்வி கற்ற போது கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைக்கு ஒரு பாட நூலாக வைக்கப்பட்டிருந்தது.

அரங்நாயகி 1934இல் வெளிவந்தமை, தமிழ் நாட்டிலோ இலங்கையின் பிற பிரதேசங்களிலோ நாவல்கள் வெளியாகிச் சில வருடங்களுக்குப் பின்னரே மட்டக்களப்பில் நாவல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றது. இதற்குக் காரணம் யாது? நாவல் என்ற இலக்கிய வடிவம் மேலைத் தேயத்திலிருந்து தமிழிற்கு வந்த நவீன இலக்கிய வடிவமென்பது யாவருமறிந்ததே. ஆங்கில ஆட்சியினால் தமிழ் நாட்டில் உருவான சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களின் அறுவடையே அது. இத்தகைய மாற்றங்கள் சற்றுப் பின்னரே சிற்சில ஏற்ற இறக்கங் களுடன் இலங்கையின் பிற பிரதேசங்களில் குறிப்பாக யாழ்ப் பாணத்தில் நிகழ்கின்றன. மட்டக்களப்பில் மேலும் சற்றுப் பின்னர் ஏற்படுகின்றன. (அவையும் முழுமையாக ஏற்படவில்லை); இதனாலேயே முதல் நாவலின் பிறப்பு பிந்திவிடுகின்றது.

மட்டக்களப்பிலே முதல் நாவல் 1934இல் வெளிவரும் போது அதாவது முப்பதுகளில் - தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கு எத்தகையதாகக் காணப்படுகிறது? அவ்வேளை தமிழ் நாட்டின் தமிழ் நாவல் வளர்ச்சி இரண்டாவது காலகட்டத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது. துப்பறியும் நாவல்களும் மர்ம நாவல்களும் மொழி பெயர்ப்பு நாவல்களும் தழுவல் நாவல்களும் பெருமளவிற் குவியத் தொடங்குகின்றன. வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர்.ரங்கராஜு முதலியோர் இத்தகைய எழுத்தாளருள் குறிப்பிடத்தக்கவராகின்றனர். இலங்கையிலும் எச்.செல்லையா முதலானோர் இக் காலப் பகுதியில் இத்தகைய நாவல்களை எழுதி வருகின்றனர். இவ்வாறு நோக்கும் போது அரங்க நாயகியும் சமகாலத் தமிழ் நாவலின் பொதுவான போக்குடன் ஒத்ததாக விளங்குகின்றமை புலப்படுகின்றது.

இவ்விடத்தில் இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது. தமிழ் நாவல் வளர்ச்சியின் முதற் கால கட்டம் சமூகச் சீர்திருத்த நாவல்களுக்குரியது. தமிழ் நாட்டிலும் இலங்கையில் யாழ்ப்பாணத் திலும் அத்தகு நாவல்கள் பல வெளிவருகின்றன. மட்டக்களப்பில் அத்தகு நாவல்கள் எவையும் அக்காலப் பகுதியில் வெளிவரவில்லை. இதற்குக் காரணம் யாது? நாவலின் பிறப்பு மட்டக்களப்பில் பிந்தியமைக்கு மேலே கூறப்பட்ட காரணம் இவ்விடத்திலும் பொருந்துகின்றது. இன்னும் நுணுகிக் கவனிப்போம். இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட தீவிர மதமாற்றமும் அது தந்த எதிர்ப்புணர்வும் மத்தியதர வர்க்கத்தின் தோற்றமும் கல்வி வளர்ச்சியும் சீர்திருத்த வேட்கையுணர்வும் பிந்தியே மட்டக்களப்பில் ஏற்படுகின்றன. மேலும், இங்கு மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் நவீன இலக்கிய வேட்கை தீவிரமாகக் காணப்பட்டது என்றும் கூறமுடியாது. இத்தகைய நிலையில் மட்டக்களப்பு பிரதேச நாவல் வளர்ச்சியின் ஆரம்பம் சமூக சீர்திருத்த நாவலாக அமையாமல், தழுவல் நாவலாகவும் மர்ம நாவலாகவும் அமைவது தவிர்க்க இயலாததாகி விடுகின்றது!

ஏரம்பமுதலி அவர்கள் அரங்கநாயகியை எழுதியமைக்கான "அகத்தூண்டுதல்" யாது? அவரே சொல்கின்றார்:

> "இக்கதையை நான் ஏன் எழுதினேன் என்பதை இங்கு சொல்ல வேண்டியிருக்கின்றது. ஆங்கிலத்திலுள்ள 'கெனில்வேர்த்' என்னும் புத்தகமானது 1914ஆம் ஆண்டு கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைக்கு ஓர் இலக்கிய பாடமாக என்னால் வாசிக்கப்பட்டது. அப்போ அக்கதையின் சுவையும், ஆசிரியர் அவர்களின் பாஷா வன்மையும் கதையிலே காணப்பட்ட அரிய படிப்பினைகளும் என் மனதைக் கவர்ந்தன. ஆகவே, பாடசாலையை விட்டு விலகிய பின்பும் சில சமயங்களில் அக்கதையை வாசிக்கலானேன்.
>
> பின்னர் 1919ஆம் ஆண்டு சிறிது காலம் உபாத்திமைத் தொழிலில் அமர்ந்திருந்த போதும் நேரப்போக்கிற்காக அக் கதையைச் சிலவேளை வாசித்ததைக் கண்ட எனது மனைவி அதைத் தமிழில் மொழி பெயர்த்தால் ஆங்கிலம் அறியாதாரும் வாசித்தறியலாமே என வேடிக்கையாகச் சொல்லவே வேலையற்றிருக்கும்போது விளையாட்டாய் இக்கதையை எழுதலானேன்."

நோக்கம் எதுவாயினும் ஆசிரியரது நாவல் இலக்கிய முயற்சி பாராட்டத்தக்கது. அதேவேளையில் தமிழ் முதல் நாவலாசிரியர் களுக்கிருந்த இலக்கிய நோக்கும் சமூக நோக்கும் ஏரம்ப முதலியிடம் காணப்படவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது.

நாவலின் மூலக்கதை இங்கிலாந்தில் இரண்டாம் எலிசபெத் இராணியின் காலத்தில் நடந்த உண்மைச் சம்பவங்களைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

அதே வேளையில் நாவல் தமிழ்ச் சூழலில் நடப்பதாக விருந்தாலும் அச் சூழல் தமிழ் நாட்டிற்குரிய சூழலே தவிர இலங்கைக்குரிய தமிழ்ப் பிரதேச (அல்லது மட்டக்களப்பு பிரதேசச்) சூழலுக்குரியதல்ல என்பது மனங்கொள்ளத்தக்கது. நாவலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கமும் தமிழ் நாட்டு நாயக்கர் காலச் சூழலுக்கே ஏற்புடையதென்பதும் உண்மையே.

தமிழில் அக்காலப் பகுதியிலே வெளிவந்த மர்ம நாவல்கள், துப்பறியும் நாவல்கள், மொழி பெயர்ப்பு நாவல்கள், தழுவல் நாவல்கள் எவையாயினும் அவை நீதி போதனை நிகழ்த்துவதை முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டு செயற்பட்டன. நாவலாசிரியன் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன தனது நாவல் அறிஞர்களின் அங்கீகாரம் பெறவேண்டுமாயின், அவன் அறப் போதனையாளனாகத் திகழ வேண்டியிருந்தது. அரங்கநாயகியிலும் அறப்போதனை ஆங்காங்கு இடம்பெற்றுள்ளது.

மேலும் இந்நாவல் சாதாரண வாசகரையும் மனங் கொண்டு எளிய நடையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அதே வேளையில் பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் ஆங்காங்கே கையாளப்படுவதையும் அவதானிக்கின்றோம்). மேலும் அத்தகைய வாசகரின் வியப்பார்வத்தைத் தூண்டும் விதத்தில் கதாபாத்திரங்களின் செயல்களும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. அரங்கநாயகியின் குருட்டுக் காதலும், சந்திரசேகரனின் சாமர்த்தியமும், கமலநாதனின் கபட சூழ்ச்சியும், இராசநாயகத்தின் புத்திக் கூர்மையும், இரு பிரபுக்களின் பகைமையும், வீரசிங்கனின் பிரமிப்பூட்டும் கருமங்களும் அத்த கையனவே.

சுருங்கக் கூறின், மட்டக்களப்பின் முதல் நாவலானது சமகாலத் தமிழ் நாட்டின், நாவல் போக்கிற்கமையவும் சமகால இலங்கையின் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச நாவல் போக்கிற்கமையவும் மர்ம நாவலாகவும் தழுவல் நாவலாகவும் விளங்குகின்றமை புலப்படு கின்றது.

அது மட்டுமன்றி (முதற் பந்தியிற் கூறியவாறு) ஏனைய பிரதேசங்களின் முதல் நாவல்களுக்குரிய பண்பினையும் (இரண் டாவது காலகட்டமாயினும்) மட்டக்களப்பின் முதல் நாவல் பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

***அரங்கநாயகி' : மட்டக்களப்பின் முதல் நாவல்,***
***மட்டக்களப்பு பிரதேசச் சாகித்திய விழாமலர்,***
***ஆவணி, 1993.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# நாற்பதுகளில் எழுதப்பட்ட ஈழத்து நாவல் : 'அனிச்சமலரின் காதல்'

காரைநகர் வே.தில்லைநாதன் என்பவரால் 1942 அளவில் எழுதப்பட்டு 1953இல் பிரசுரிக்கப்பட்டது "அனிச்ச மலரின் காதல்" என்ற நாவல். நாவலாசிரியர், கல்லூரி ஆசிரியர்; நியாயதுரந்தரர். நாவலுக்கான அணிந்துரையை எழுதியவர் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை. அண்மையில் இந்நாவலை வாசித்த போது அது ஈழத்து நாவல் வளர்ச்சியினதும் பின்னணியினதும் சிற்சில போக்குகளை இனங் காட்டுகின்றமை புலப்பட்டது. இந் நாவல் எழுதப்பட்ட காலப் பகுதிகளில் துப்பறியும் மர்ம நாவல்களும், நல்லொழுக்கப் போதனை நாவல்களுமே பெருமளவில் வந்து கொண்டிருந்தன; சமூக சீர்திருத்த நாவல்கள் ஒரு சிலவே வர ஆரம்பித்தன; இந்நாவல் பிற்கூறப்பட்ட வகையினைச் சார்கின்றது. பெண்கள் விருப்பத்தை அறியாமல் அவர்களுக்கு இசைவில்லாத மணத்தினைச் செய்து வைக்கும் முறையை வேருடன் அறுக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டது என்பர் நாவலாசிரியர்.

நாவலின் கதைச் சுருக்கம் இது தான் : அனுராதபுரத்தில் வசிக்கும் 'கடை வாணிகர்' கருணாகரன், மனைவி வசந்தம்மாள்; மகள் அனிச்சமலர்; கிராம நீதவானாகிய ஏலேலசிங்கரை அவள் விரும்புகிறாள். விருப்பத்துக்கு மாறாக, சொத்து நிரம்பிய குணசீலனுக்கு பெருஞ் சீதனத்துடன் மணம் முடிக்கப்படுகின்றாள். உள்ளத்தால் மட்டுமன்றி (அவனிடம் இரு வாக்குறுதிகள் பெற்று) உடலாலும் தன்னை அவனுக்கு அனிச்சமலர் ஒப்படைக்கவில்லை. அனிச்சமலர் தன் தந்தை இறந்தபின் தந்தையின் நண்பர் சட்டத் தரணி மகேசன் உதவியோடு குணசீலனை விவாகரத்துச் செய்து ஏலெலசிங்கரை மணம் முடித்துக் கொள்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல் எடுத்தாளும் முற்கூறிய பிரச்சினை, இந் நாவல் எழுந்த காலப் பகுதியில் பரவலானதும் ஆழமானதுமாக விளங்கியது. இது பற்றி நாவலாசிரியர் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

> முக்கியமாக, பெண்ணுக்கு விருப்பமில்லாத சடங்கு செய்கிற கொள்கையை முறியடிக்கிறதே இப்புஸ்தகத்தின் நோக்கம். என்னுடைய அனுபவத்திலும் பத்திரிகை வாயிலாகவும் வேறு நேராகவும் எத்தனையோ தற்கொலைகள் நடைபெற்றதை அறிந்தேன். உதாரணமாக என்னிடம் கற்ற ஓர் மாணவனும் காதலித்த பெண்ணும் தங்கள் பெற்றோர் சடங்குக்கு அநுமதி கொடாத காரணத்தால் ஒரு கிணற்றில் வீழ்ந்து உயிரை நீக்கி விட்டார்கள். இவ்விதமான நிகழ்ச்சிகள் தமிழ் மக்களுக்குள் மட்டுமல்ல சிங்கள மக்களுக்குள்ளும் நடைபெறுகின்றதை ஒவ்வொருவரும் அறிந்த காரியம்.

மேற்கோள் நீண்டதாயினும் பல முக்கிய விடயங்களைப் புலப் படுத்துகின்றதல்லவா? இவற்றுளொன்று, நாவலின் அடித்தளமாக யதார்த்தம் அமைந்துள்ளதென்பது. அதாவது, வெறுங் கற்பனைக்கு முதன்மை கொடுப்பதை விடுத்து மனித வாழ்வில் நிகழும் உண்மை நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் நாவலாசிரியர்.

நாவல் யதார்த்தத் தளத்தில் அமைய, உரையாடல்களும் அவ்விதம் அமையுமென்று எதிர்பார்க்கலாமா? ஒரு சந்தர்ப்பத்தில் இரு பாத்திரங்கள் பின்வருமாறு உரையாடுகின்றன:

> 'அங்கே யாரோ வாறான்ரா. இனி நாங்கள் பேசிக் கொண்டிருந்தால் பழிவரும் ......'
>
> 'வாற ஆள் நம்மடை கூட்டாளி. மாடன், அவனுக்கு இதைப்பற்றி நல்லாத் தெரியும். மாடன் எங்காலை வாறாய்? ஊரில் என்னடா புதினம்?'

ஆயினும் மேற்கூறிய பாங்கிலான இயல்பான உரையாடல் நாவல் முழுவதும் காணப்படுகிறது என்பதற்கில்லை. குறிப்பாக கல்வி கற்ற பாத்திரங்களின் உரையாடல் இலக்கியச் சொல்லாட்சி மிக்கதாகவும் செயற்கை ரீதியானதாகவும் அமைகின்றது எனலாம்.

இந்நாவலைப் பொறுத்தவரையில் கவனிக்கத்தக்க இன்னொரு அம்சம், பழந் தமிழ் இலக்கியச் செல்வாக்கும் மொழிப்பற்றும் ஆசிரியரைப் பல்வேறு தடங்களில் வழிநடத்திச் சென்றுள்ளமையாம். ஆங்காங்கே திருக்குறள், பழந்தமிழ் இலக்கியச் செய்யுட்கள், அருட்பாடல்கள் முதலியன இடம் பெறுகின்றன. பாத்திரங்களின் உரையாடல்களில் இலக்கிய மணம் வீசுகிறது. அனைத்தையும்விட, நாவல் எடுத்துக் கொண்ட பிரச்சினையின் தீர்வுக்கான பக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாகவும் பழந்தமிழ் இலக்கியக் காதற் கொள்கையே எடுத்துரைக்கப்படுகிறது. இதனை எடுத்துரைக்க பண்டிதர் என்றொரு பாத்திரம் படைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவாறு நாவலாசிரியர் செயற்பட, பல காரணங்கள் உளவேனும் ஒன்றுமட்டும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். அது நாவலெழுந்த காலத்துப் பின்னணியுடன் தொடர்புடையது. இவ்விடத்தில் அணிந்துரையில் பேராசிரியர் கூறும் கருத்துக்களை எடுத்தாள்வதே போதுமானது. அவர் கூறுகின்றார்:

> "நாவல்களைப் படிப்பதில் நலமுண்டா? நாவல்கள் எழுதுவது உலகத்தின் நன்மைக்கா? இக் கேள்விகளைப் பலர் இக்காலத்தில் எழுப்புகிறார்கள். காரணம், நாவல்கள் சிற்றின்பத்தைப் பற்றியே பெரும்பாலும் பேசுவனவாயும் மொழிநடையில் அழகற்றனவாயும் ஆதாரமற்ற கொள்கைகளை மேற்கொண்டனவாயும் வெளி வருதலால் ஆகும். அறிஞர் அவற்றைக் காணும்போது அவை சிறுவர் கையிலும் சிறுமியர் கையிலும் இருக்கத்தக்கன அல்ல என்று எண்ணி வெறுக்கின்றனர். ஆனால், 'அனிச்சமலர்' என்னும் நாவல் அத்தகையதன்று. நல்ல புத்தியையும் மொழிப்பற்றையும் தரக்கூடிய ஒரு நூலாகும்"

எளிமையானதாக இந்நாவலை அமைக்க வேண்டுமென்பதிலும் ஆசிரியர் அதிக கவனஞ் செலுத்துகின்றார். நடை, எளிமையானது மட்டுமன்றி ஒவ்வொரு அத்தியாயத்தினுள்ளும் பல உட்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இது கதையின் வேகத்தைக் குறைக்கிறது என்பதுண்மையே. ஆயினும், நாவலாசிரியருக்கு நாவலின் எளிமைத் தன்மை கருதி இது அவசியமானதாகவேபடுகிறது.

ஆசிரியரது முகவுரையில் இடம்பெறும் இன்னொரு கருத்தும் குறிப்பிடத்தக்கதே. சுய பாஷையில் வெளிவரும் நாவல்கள் அப்போது குறைவென்பதும் வெளிவந்தாலும் வாசிப்போர் குறைவென்பதும் அங்கு ஓரிடத்தில் தெரிவிக்கப்படுகிறது. இது காரணமாக, 'சென்ற பல ஆண்டுகளாக இந்தப் புஸ்தகத்தைப் பிரசுரஞ் செய்யலாமா, விடலாமாவென்ற நிகழ்ச்சி என் மனதில் தோன்றிக் கொண்டிருந்தது' என்கிறார் ஆசிரியர். இங்கு குறிப்பிட வருவது யாதெனில், அக்கால நாவலாசிரியரை எதிர் நோக்கிய இன்னொரு தடையை இனங் காண்கின்றோம் என்பதுவேயாகும்.

நாவலின் கதை நிகழும் களமாக அநுராதபுரம் அமைவதும் அவதானிக்கத்தக்கது. ஆயினும், அநுராதபுரம் பூங்கா, பழைய கட்டிடங்கள் முதலானவை பற்றி மேலோட்டமாகத் தெரிவிக்கப்படு கிறதேயன்றி ஆழமாகவோ இரண்டறக் கலந்தோ எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படவில்லை. அக்கால நாவல்களில் இதற்குமேல் எதிர்பார்க்கவும் இயலாதது தானே!

அக்காலத்தில் நிலவிய சீதனக் கொடுக்கல் வாங்கல்கள், நீதிமன்ற விசாரணை முறைகள், ஊழல்கள், பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழா பற்றிய தகவல்கள் முதலானவை பற்றிய பல விடயங்களைக்கூட இந்நாவலிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறே அனிச்சமலரின் காதல் மணத்திற்குப் பக்க பலமாக சமகாலத்தில் நிகழ்ந்த இந்திராகாந்தியின் திருமணத்தை நேருவும் காந்தியும் ஆதரித்தமை பற்றிய செய்தியும் அமைகின்றதெனலாம்.

ஆங்காங்கு இடம்பெறும் தத்துவ விசாரணைகளும் விதி பற்றிய விசாரணையும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக சோவியத்தில் ஸ்டாலின் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றிக் கூறப்படுவதும் சுவையானது. அனிச்சமலர் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றாள்:

> "விதியொன்றிருக்கிறது மெய்தான். ஆனால் மனிதர் வகுத்த சட்டத்தை மனிதர் அழிக்கலாம். அதையும் விதியென்று சொல்லலாமா? சோவியத் ரஷ்யாவிலே தம் நாட்டிலிருந்த வறுமையெல்லாவற்றையும் ஒரு சட்டத்தில் பாசுபண்ணி ஓட்டிப் போட்டார்கள், வறுமையையும் விதியைப் பொறுத்ததென்றல்லவா இது வரை எண்ணியிருந்தோம்...".

மேற்கூறியவாறான விடயங்களை எழுதுவது பற்றி ஆசிரியருக்கு தயக்கமிருப்பதாகவும் தெரிகிறது. எனவேதான் பின்வருமாறு கூறுகின்றார் :

> "சில விஷயம் பற்றியும் சில கொள்கைகளைப் பற்றியும் எழுதியுள்ளேன். எழுதிய ஒவ்வொன்றும் நேர்மையாக உண்மையை அறியும் நோக்கந்தான். அதில் சிலருக்கு விருப்பமில்லாமலிருக்கலாம்".

இந்நாவல் எழுதப்பட்டதன் நோக்கமும் எங்கே தவறாக விளங்கப்பட்டுவிடுமோ என்ற எண்ணமும் ஆசிரியருக்குண்டு. அனிச்சமலர் பெண்மணிகளுக்கு ஒரு உதாரணமாக அமைந்து விடுவாளோ என்ற பயமும் உண்டு. இவை பற்றியும் முகவுரையில் சிலாகித்துப் பேசப்படுகின்றது. ஆயினும் இங்கு அழுத்தியுரைக்க விரும்புவது இதுபற்றியன்று. அக்கால நாவலாசிரியர் எதிர்நோக்கிய இன்னொரு இடரையும் இதிலிருந்து உணர்ந்து கொள்கிறோம் என்பது பற்றியாகும்.

இன்னுமொன்று: அச்சிடும் செலவு தவிர இந்நாவலினை விற்றுவரும் மிகுதிப் பணம் காரைநகர் சிவசுப்பிரமணிய கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூந்தோட்டத்திற்கும் அண்மையிலுள்ள இந்து சன்மார்க்க சங்கத்தினரால் தாபிக்கப்பட்ட வித்தியாலயத்திற்கும் உபரிக்கப்படுவதாக முன்னுரையிலுள்ள அடிக்குறிப்புக் கூறுகின்றது!

எவ்வாறெனினும் இந்நாவல் உள்ளடக்கம் காரணமாகக் கவனிப்புப் பெறும் அதேவேளையில் உருவத்தைப் பொறுத்த வரையில் மிக முற்பட்ட நாவல்களையே நினைவுபடுத்துகின்றது. ஆசிரியரது அணிந்துரை மேன்மேலும் ஆழ்ந்து நோக்கத்தக்கது. பிரதாப முதலியார் சரித்திரம், காண்டேகரது நாவல்கள், மு.வ.வின் நாவல்கள், இந்நாவல் ஆகியவற்றின் ஒருமித்த இயல்புகளையும் இலக்கிய ஆர்வலர் அவ்வழி எண்ணிப் பார்க்கவும் கூடும்.

**- '*அனிச்சமலரின் காதல் :***
**ஓர் ஈழத்து நாவல் பற்றிய சில குறிப்புகள்*',**
***மல்லிகை, 1984.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# மார்க்சிய நோக்கில் ஈழத்துத்தமிழ் நாவல்கள்

## செ. கணேசலிங்கனின் நாவல்கள் பற்றிய அவதானிப்பு

ஏறத்தாழ, நாற்பது நாவல்கள் எழுதியுள்ள செ.கணேசலிங் கனின் நாவல்கள் பற்றிய ஆய்வினை வசதிகருதி (அ) ஈழத்துத் தமிழ்நாவல் வரலாற்றுப் பின்புலத்திலும் (ஆ) வளர்ச்சிப்போக்கு அடிப்படையிலும் (இ) மார்க்சிய நோக்கு நிலையிலும் அணுகுவது இவ்வேளை வசதியானதும் பொருத்தமானதுமாகின்றது.

### வரலாற்றுப் பின்புலத்தில் ......

இவ்வழி நோக்கும்போது 1960 வரை வெளிவந்த ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றுப் போக்கில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது :

1. முதல் நாவலான 'அசன்பே சரித்திரம்' (1885) தொடக்கம் 1905ஆம் ஆண்டு வரை வெளியான நாவல்கள் தழுவல் களாகவும் மொழிபெயர்ப்புகளாகவும் பிறநாட்டினைக் களமாகவும் கொண்டிருந்தன.
2. 1905ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த நாவல்கள் ஈழத்தினைக் களமாகக் கொண்டிருந்த போதும் அவை மேலோட்டமான விவரிப்பாகவே அமைந்தன.
3. 1914இல் வெளியான 'நொருங்குண்ட இருதயம்' ஈழத்தின் முதல் யதார்த்த நாவல் எனத்தக்கது. பாத்திர உருவாக்கம் காரணமாகவும் பெண்நிலைவாத நோக்கிலும் மேன்மேலும் கவனத்திற்குரியது. இவ்வழி, ஈழத்துத்தமிழ் நாவலின் பிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படைப்புடனேயே ஆரம்பிக்கின்றதென்று கூறுவது பொருத்தமானது.

4. தொடர்ந்து, சமூகச் சீர்திருத்த நோக்குடைய சில நாவல்கள் (உ-ம் : 'உலகம் பலவிதக் கதைகள்' தொடர்) அவ்வப்போது வெளிவரினும் பத்திரிகைகளின் தோற்றத்துடன் பரபரப்பு நாவல்களே குவியத் தொடங்கின (எ-டு : வீரகேசரியில் வந்த தொடர்கதைகள்).

5. எனினும் ஈழகேசரித் தொடர்கதைகளுட் சில, குடும்பம், காதல் உறவுகள் சார்ந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

6. ஈழம், சுதந்திரம்பெற்ற பின்னரும் கூட, ஈழத்துத்தமிழ் மக்களது வாழ்க்கையையோ பிரச்சினைகளையோ ஆழமாக நோக்கிய நாவல்கள் எவையும் வெளிவரவில்லை.

7. மேற்கூறிய, ஈழத்து தமிழ் நாவல் வரலாற்றுப் போக்கிலே, கனக.செந்திநாதன், மு. தளையசிங்கம், இளங்கீரன் ஆகியோரது வருகையுடனேயே முக்கிய திருப்பமேற்படுகின்றது. குறிப்பாக, இளங்கீரனின் இரண்டாம் காலகட்ட நாவல்களான 'தென்றலும் புயலும்' (1955), 'நீதியே நீ கேள்' (1959) முதலியன அவ்வழி விதந்துரைக்கப்பட வேண்டியன என்றும் பிரக்ஞைப்பூர்வமாக ஈழத்து மக்களது வாழ்க்கைச் சித்திரிப்பு, பிரச்சினை முனைப்பு முதலியன காரணமாக ஈழத்து தமிழ் நாவலின் பிறப்பு இளங்கீரனின் நாவல்களுடனேயே ஆரம்பித்துள்ளது என்றும் அண்மைக் காலமாகக் கருதப்பட்டிருந்தது. எனினும், மறுமதிப்பீட்டு நிலையில் இன்று அக்கருத்து பின்வரும் காரணங்களினால் வலுவிழந்து போயுள்ளது:

அ) 'தென்றலும் புயலும்' யதார்த்தப் பண்பு குன்றிய நாவலாகவே காணப்படுகின்றது. நாவலின் உரையாடல் பேச்சு மொழியில் அமையாமையும் நாவலின் முடிவு யாழ்ப்பாணச் சமூகப் பின்னணியில் பொருந்தி அமையாமையும் இதற்குச் சான்றுகளாகின்றன.

ஆ) 'நீதியே நீ கேள்' நாவலிலும் யதார்த்தம், பேச்சுமொழிப் பயன்பாடு ஆகிய அம்சங்கள் அரிதாகவே உள்ளன.

இ) எல்லா நாவல்களும் பத்திரிகைத் தொடர்கதைகளானமையினால் தொடர்கதைக்குரிய அம்சங்களையே அதிகம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஆரோக்கியமற்ற சூழலிலேயே செ.கணேசலிங்கனின் நாவலுலகப் பிரவேசம் நிகழ்கின்றது. அவரது முதல் நாவலான 'நீண்டபயணம்' (1965) முற்கூறிய குறைபாடுகளின்றி வெளிவருகின்றது. இவ்விதத்தில் ஈழத்துத் தமிழ்நாவலின் ஆரோக்கியமான பிறப்பு இப்போதுதான் - 'செ.க.'வுடன் தான் - நிகழ்கின்றது என்பது முதற்கண் வற்புறுத்தப்பட வேண்டிய விடயமாகின்றது.

இனி, அறுபதுகள் தொடக்கமான ஈழத்துத்தமிழ் நாவல் வளர்ச்சிப் பின்புலத்தில் 'செ.க.'வின் நாவல்கள் பற்றி உள்ளடக்கம், வடிவம் என்ற அடிப்படையில் கவனிப்பது பொருத்தமானது.

## உள்ளடக்க நோக்கில்.....

### சமகால வரலாறு

ஈழத்தமிழ் நாவல் வளர்ச்சிப்போக்கினை நுணுகி நோக்கும் போது, பிரக்ஞைபூர்வமாகவும் யதார்த்தமான முறையிலும் ஈழத்தின் சமகால வரலாறு முதன்முதலாக நாவல் உள்ளடக்கமாக அமைவது 'செ.க' வுடனேயே ஏற்படுகின்றது. இத்தகைய சமகால வரலாறு, (அ) சமூகம் (ஆ) அரசியல் (இ) பொருளாதாரம் என்பவற்றிற்கு அழுத்தம் கொடுத்துப் பெரும்பாலான நாவல்களில் தனித்தனியாகவும் சிலவற்றில் கலந்தும் வெளிப்படுகின்றது. வாசகருக்கு அவற்றை அறிமுகம் செய்யும் நோக்கில் ஒவ்வொரு நாவல் பற்றியும் தனித் தனியே நோக்குவது பயனுடையது.

### சமூகம்

#### சாதி

***நீண்டபயணம் (1965)*** : இந்நாவல் யாழ்ப்பாண பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற சிறு கிராமமொன்றில் (1956 அளவில்) ஏற்பட்டு வந்த மாற்றங்களையும் அம் மக்களது ஆலயப் பிரவேசப் போராட்டங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டது. இவ்விதத்தில் ஈழத்தின் முதல் நாவலாகின்றது. இதற்கப்பால், தமிழ் நாவல் வரலாற்றிலும் முக்கியம் பெறுகின்றது. இவ்விதத்தில் அகிலனின் பின்வரும் குறிப்பு கவனத்திற்குரியது :

> "டாக்டர் மு.வ.அவர்களின் "கரித்துண்டு" என்ற நாவலில் தான் நான் முதன்முதலாக வாழ்க்கையின் அடித்தளத்திலுள்ள மக்களின் நிலையை அங்கங்கே காணமுடிந்தது. இந்தக் கதையில் அதையே மையமாகவும் முழுமையாகவும் காணமுடிகின்றது. இது ஓர் புதுமை கொண்ட புதினம் என்பதில் சிறிதும் ஐயமில்லை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய தன்மை காரணமாக, பின்னர் டி.எம்.செல்வராஜ் முதலான தமிழ்நாட்டு எழுத்தாளர் மத்தியிலே பாதிப்பு ஏற்படுத்திய நாவலாகவும் இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**போர்க்கோலம் (1969)** : இந்நாவல், தாழ்த்தப்பட்ட மக்கள் தமது ஆலயப்பிரவேசம் தொடர்பாகவும் தண்ணீர்ப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டும் நடத்துகின்ற (மக்கள்மயப்பட்ட) போராட்டம் பற்றியது. அத்துடன் போராட்டச் சூழலில் உயர்சாதியினரின் சதிகாரணமாக இறந்த மாணிக்கம் என்பவனுக்காக அன்னம்மா என்ற பெண் பழிவாங்கும் சம்பவத்தையும் முதன்மைப்படுத்துகின்றது. போராட்ட முனைப்பும் வர்க்க முரண்பாடுகளும் 'நீண்ட பயணத்தை' விட இந்நாவலில் கூர்மை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நிலவுடைமை**

**சடங்கு (1967)** : முன்னிரு நாவல்களிலும் யாழ்ப்பாண நிலவுடைமையின் சிதைவு காட்டப்பட்டிருப்பினும் இந்நாவலில் அது விரிவாகவும் ஆழமாகவும் பேசப்படுகின்றது. யாழ்ப்பாண நிலவுடைமைச் சமூகத்தின் (திருமணம், மரணம்) சடங்குகளின் போலித்தன்மை -"வெறுங்கோயில்" நிலைமை - நுணுக்கமாகப் படம் பிடிக்கப்படுகின்றது, இவ்வழி தமிழ் நாவல் வரலாற்றில் முதல் நாவலாகின்றது. (இந்நாவலின் சில பகுதிகள் கன்னட நாவலான சம்ஸ்கராவுடன் ஒப்பிடத்தக்கன).

**மண்ணும் மக்களும் (1969)** : இந்நாவல் நிலவுடைமைச் சமூகத்தினரின் கொடுமைகளுக் கெதிராக விவசாய மக்கள் கிளர்ந்தெழுவது பற்றியது. இந்திய - நக்ஸலையிற் கிளர்ச்சி, ஈழத்தின் சேகுவேரா கிளர்ச்சி என்பவற்றை மனங்கொண்டு (கற்பனைக்) கிராமமொன்றில் நடப்பதாகப் புனையப்பட்டுள்ளது. கிளர்ச்சியே முனைப்பு அம்சமாதலாலும் அது கற்பனை சார்ந்ததொன்றாக இருந்தமையாலும் இதனை நாவல் என்பதனைவிட கட்டுரைத் தன்மை விரவிய நாவல் என்று கூறுவதே பொருத்தமாகின்றது. சில காலம் தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டிருந்த படைப்பு என்பது மட்டுமே இதன் சிறப்பம்சமாகும்.

**வர்க்கம்**

**செவ்வானம் (1967)** : இந்நாவல், ஒருபுறம் முதலாளி வர்க்கம், மத்தியதர வர்க்கம், தொழிலாளிவர்க்கம் ஆகியவற்றை முதன்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியும், இன்னொருபுறம் ஈழத்தின் சமகால அரசியலை (1957 எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க காலம்) முதன்மைப்படுத்தியும், பிறிதொருபுறம் காதலை முதன்மைப்படுத்தியும் உருவாகியுள்ளது. வர்க்கப்பார்வையும் அரசியல் பின்னணியும் ஒட்டுமொத்தமான தமிழ் நாவல் வரலாற்றில் முதல் முதலாக ஆழமாகப் பேசப்பட்டு கவன ஈர்ப்பை பெறுவதும் (தெய்வீகமாகக் கருதப்பட்டு வந்த) "காதல்" பற்றிய கணிப்பீடு அதிர்ச்சிக்குள்ளாவதும் விதந்துரைக்கப்பட வேண்டியாகிறது. இத்தியாதி உள்ளடக்கமும் மார்க்சிய விமர்சகர் க.கைலாசபதியின் முன்னுரையும் காரணமாக, "செ.க" தமிழ்நாட்டின் கவனத்திற்குட்படுவதும் தொடர்ந்து ஈழத்து நாவல்கள் தமிழ் நாட்டினரால் கவனிக்கப்படுகின்ற வரலாற்றின் ஆரம்பமும் முதன் முதலாக இந்நாவலின் வரவோடு சம்பவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**தரையும் தாரகையும் (1968)** : இந்நாவலும் 'செவ்வானம்' போன்று மூன்று வர்க்கத்தினரையும் கவனத்திற் கொண்டாலும் நுணுகி நோக்கின் மத்திய தரவர்க்கத்தினரையே முதன்மைப்படுத்துகின்றது என்பது புலப்படுகின்றது. இன்னொரு விதமாகக் கூறின், "தரையை மறந்து தாரகைகளைப் பிடித்து மாலையாக்க விரும்பும் மத்தியதர வர்க்கத்தினரின் வளர்ச்சியையும் வாழ்வையும் யதார்த்தமாகக் காட்டக்கூடிய நாவலொன்றினை" ஆசிரியர் எழுத விழைந்ததன் விளைவே 'தரையும் தாரகையும்'. (1958 இல் ஏற்பட்ட இனக்கலவரச் சூழல் இந்நாவலில் பதிவாகியுள்ளமையும் கவனத்திற்குரியது). ஈழத்து மத்தியதரவர்க்கம் பற்றி முதன்முதலாகவும் (இன்றுவரை) ஆழமாகவும் இந் நாவலிலேயே பேசப்பட்டுள்ளது.

### அரசியல்

#### தேசிய இனப்பிரச்சினை

**இளமையின் கீதம் (1987)** : ஈழத்தின் சமகால வரலாறு என்ற விதத்தில் அரசியலுக்கு குறிப்பாக தேசிய இனப்பிரச்சினைக்கு முதன்மை கொடுத்து எழுதுகின்ற எழுத்தாளராக தமது நீண்டகால வனவாசத்தின் பின் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்ற 'செ.க.'வின் முதல் நாவல் இதுவாகும்.

மேற்கூறிய விதத்தில், இந்நாவல் யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் களமாகக் கொண்டு 1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்திற்கு முன்னரும் பின்னருமான அரசியல் சூழலைப் பிரதிபலிக்கின்றது. "இந்நாவல் கற்பனை என்று கூறமாட்டேன். அண்மைக்காலம் வரை இலங்கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரிடையே நடைபெற்ற போராட்டங்கள், அரசியல் விழிப்பு, கருத்து மோதல்கள், அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தாக்கம் ஆகியவற்றை கதைபோலப் பின்னியுள்ளேன். அங்கு நடைபெறும் சம்பவங்களை ஒழுங்குபடுத்தித் தந்துள்ளேன்" என்று 'செ.க.' இந்நாவல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தேசிய இனப்பிரச்சினையை மட்டுமன்றி, தமது விருப்பத்திற்கெதிரான தமது பிள்ளைகளின் காதலைத் தடை செய்ய ஒரு சமூகம் மேற்கொள்ளும் குரூரச் செயல்களையும் ஓரளவு வெளிப்படுத்துகின்றது இந்நாவல்.

**ஒரு மண்ணின் கதை (1994) :** இந்நாவல், தனது திருமணத்திற்காக, கனடாவிலிருந்து கொழும்பு வருகின்ற இளைஞனொருவனூடாக கொழும்பிலும், இந்திய அமைதி காக்கும் படைச்சூழலில் யாழ்ப்பாணத்திலும் நிகழ்கின்ற நெருக்கடிகளைப் பற்றிப் பேசுகின்றது. நாவலின் இத்தகைய கட்டமைப்புக்காரணமாக "ஒரு கோடை விடுமுறை" (இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்), "இரவல் தாய்நாடு" (செ.யோகநாதன்) என்பன நினைவிற்கு வருகின்றன. தரவேறுபாட்டில் ஏற்ற இறக்கமிருப்பினும் இம்மூன்று நாவல்களும் கவனத்திற்குரிய நாவல்கள் என்ற ரீதியில் ஒரு கோட்டில் இணையக் கூடியனவாக உள்ளன என்றே கூறத்தோன்றுகின்றது.

**அயலவர்கள் (1995) :** இந்நாவல், 1983 இனக்கலவரத்திற்கு முன் பின்னாக இந்திரா காந்தி காலத்து ஈழச்சூழலையும் ஆயுதமேந்திய விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளையும் களமாகக் கொண்டு, முன்னர் கொழும்பில் அயல்வீட்டில் வாழ்ந்து, பின்னர் இராணுவ உயர் அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் சுமணபாலாவினதும், (முன்னர் அயல்வீட்டில் வாழ்ந்த) அவனது (முன்னாள்) காதலியாக விளங்கி, இன்று யாழ்ப்பாணத்தில் இளம் விதவையாக தனது தாயுடன் வாழ்கின்ற சாந்தியினதும் (சமகாலச்) சந்திப்பூடாகவும் அவ்வழி கிளர்ந்தெழுகின்ற பழைய நினைவலைகளூடாகவும் உரையாடல் களூடாகவும் நகர்கின்றது. "எவ்வாறாயினும் தவிர்க்க முடியாத பூகோள அமைப்பின் படியும் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இலங்கையில் அயலவர்களாகவே வாழநேரும் என்பது இக்கால கட்டத்தில் தவிர்க்க முடியாத யதார்த்த நிலையாகும்" என்பது ஆசிரியரது நோக்காக இழையோடுகிறது.

**பொய்மையின் நிழலில் (1997) :** இந்நாவல் ஏறத்தாழ 1980களின் பிற்கால யாழ்ப்பாணத்து அரசியல் நெருக்கடிச்சூழலுக்கு - இராணுவ முகாம் வதைகளுக்கு (அத்துடன் வெலிக்கடைசிறைச்சாலை வதைகளும்) முதன்மை கொடுக்கின்றது என்பது தவிர, மேற்கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அயலவர்க"ளுடன் ஒத்த தன்மையாகவுள்ளது. அதாவது, முன்னர் ஒரு (தமிழ்ப்) பேராசிரியரின் மாணவனாகத் திகழ்ந்து அவரது மகளை விரும்பி, இந்நாள் யாழ்ப்பாணத்தில் மேஜராகப் பணிபுரிகின்ற குணசேகராவினதும் முன்னாள் காதலி கமலாவினதும் சமகாலச் சந்திப்பு, நினைவலைகள், உரையாடல்களூடாகவே நாவல் நகர்ந்துள்ளது.

எனினும், இறுதியாகக் கூறிய, இருநாவல்களும் தமிழர்களோடு சிங்கள மாந்தர்களையும் பாத்திரமாகக் கொண்டுள்ளன என்ற விதத்தில் தேசியப் பிரச்சினை பற்றிய நாவல்களுள் விதந்துரைக்கப்பட வேண்டியவை. ஏனெனில் அத்தகைய பாத்திரங்களூடாக, இராணுவத்திற்கு வரும் சிங்கள இளைஞர்களது குடும்பச்சூழல், யுத்தம் பற்றிய கண்ணோட்டங்கள், கருத்து முரண்பாடுகள் என்பன அறியப் படுவதற்கான வாய்ப்பு தமிழ் வாசகர்களுக்கு கிட்டியுள்ளன என்றே கூறவேண்டும்.

**ஈனத்தொழில் (1997) :** இந்நாவல் 1995இல் நிகழ்ந்த யாழ்ப்பாண இடப் பெயர்வினையும் அதனுடனொட்டி நிகழ்கின்ற புலிகள் இயக்க இராணுவச் செயற்பாடுகளையும் பின்னணியாகக் கொண்டது. சட்டரீதியான அனுமதியுடன் அப்பாவிப் பொது மக்களைக் கொல்கின்ற இராணுவத்தினரின் தொழிலே 'ஈனத்தொழில்' என்று ஆசிரியரால் கருதப்படுகின்றது. "மாபெரும் மக்கள் வெளியேற்றத்தைச் சுட்டிக்காட்டி நாவல் வடிவில் பதிவு செய்யும் நோக்கில்" இந்நாவல் எழுதப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அப்பதிவு நாவலில் முதன்மை பெறவில்லை. (1995 இடப்பெயர்வு பற்றிய, இன்னொரு நாவலான 'மரணங்கள் மலிந்த பூமி'யும் அத்தன்மையதே).

**வதையின் கதை (1995) :** மேற்கூறப்பட்ட நாவல்கள் தேசிய இனப் பிரச்சினை சார்ந்தனவாக அமைய, இந்நாவல் அவற்றிலிருந்து வேறுபட்டு எழுபதுகளில் ஈழத்தில் ஏற்பட்ட சேகுவேரா கிளர்ச்சி பற்றியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, சேகுவேரா கிளர்ச்சியாளர்கள் சிறையில் அனுபவித்த வதைகள் பற்றி விவரிக்கின்றது. இவ்விதத்தில் ஈழத்துத் தமிழ் நாவலுலகிற்கு புதியதொன்றாகின்றது.

## பெண்நிலைவாதம்

தமிழ் நாவலாசிரியர்களுள் பெண்நிலைவாத நோக்கில் பல நாவல்களை எழுதிய ஒரே ஒருவராக 'செ.க.' விளங்குகின்றார். இவ்வழி, நாவல் ஆய்வாளரது விசேட கவனத்திற்குட்பட வேண்டியவராகின்றார் என்பதிலும் தவறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை (1989)** : "பல்வேறு தவறான கருத்துகள் எமது சிந்தனையை கவர்ந்துள்ளன. மனித இனத்தின் பாதி பெண்கள் பரம்பரையாக உலகில் ஆணாதிக்கம் நிலைபெற்று விட்டது. அத்தோடு பெண்ணினம் பற்றிய பல்வேறு தவறான கருத்துகளும் ஆண்களின் சிந்தனையில் மட்டுமல்ல பெண்களின் ஆழ்மனதிலும் பதிந்து விட்டன. அவை வெறும் பரம்பரைக் கருத்துக்கள். ஆணாதிக்கத்தால் பல வகையில் பெண்ணினத்தை அடிமைப்படுத்துவதற்காக நிலைநாட்டப்பட்ட கருத்தியல்கள். அவற்றில் சிலவற்றை எடுத்துக்காட்டுவது" இந்தநாவலின் நோக்கமாகும்.

மேற்கூறிய நோக்கத்தினை நிறைவேற்றும் வழி இந்நாவல் துபாயில் பணிப்பெண்ணாக வேலைசெய்துவிட்டு ஈழத்திற்கு வரும் சித்ரா, அவளது தோழியும் ஜெயிலரின் மனைவியும் ஜெயிலர் அகால மரணமெய்தியபின் தனித்து வாழ்பவளுமான உமா, வேலைக்காரி மீனாட்சி, முற்போக்குச் சிந்தனை கொண்ட பாலன் முதலானோரைச் சுற்றி நகர்கின்றது. நினைவலைகளும் உரையாடல்களும் அவ்வழி முதன்மை பெறுகின்றன.

**ஒரு பெண்ணின் கதை (1992)** : இந்நாவல் குடும்ப வாழ்க்கை யிலீடுபட்ட உமாவினதும் அசோகனதும், உமாவின் தோழியான திலகாவினதும் செயற்பாடுகள், உரையாடல்களூடாகச் சுழன்று செல்கின்றது. அதேவேளையில், முதன்முதலாக உயிரியல், உளவியல், சமூகவியல் ஆகிய மூன்று நோக்குகளும் விரவிவர ஆண் - பெண் குடும்பவாழ்க்கை அலசப்படுவது இந்நாவலின் சிறப்பம்சமாகும்.

**இரண்டாவது ஜாதி (1993)** : இந்நாவல், தோழிகளான இந்திரா, பவானி அவர்களது கல்லூரிக்கால நினைவுகள், அவர்களது பிற்காலக் குடும்ப வாழ்க்கை, அதன் முரண்பாடுகள், பவானியின் அடிமை நிலையும் இந்திராவின் விடுதலை நிலையும் என்ற விதங்களில் இன்றைய பெண்கள் வாழ்க்கையின் அவலங்கள் பற்றி ஆழமாகப் பேசுகின்றது.

**ஒரு குடும்பத்தின் கதை (1993)** : இந்நாவல் கூட்டுக்குடும்பமாய் ஈராண்டு வாழ்ந்துவிட்டு, தனிக்குடித்தனம் நடத்துகின்ற கற்பகம் எதிர்கொள்ளும் கஷ்டங்கள், முரண்பாடுகள் என்பனபற்றியும், அவளது தோழி மாலதி, அவளது நண்பன் சங்கரன் ஊடாக, நாவல் வரலாற்றில் முதன்முதலாக அவற்றிற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றியும் விவரிக்க முற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீ ஒரு பெண் (1995)** : இந்நாவல், ஒரு பெண்ணை 'நீ ஒரு பெண்' என இனங்காணும் போது, நீ ஒரு அடிமை என ஆணாதிக்கம் மதிப்பிடாதபடியான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் எழுந்துள்ளது; சிவகாமி - கண்ணப்பன் குடும்ப வாழ்வு, சிவகாமி - ரவியின் முன்னாள் காதலுறவு அவ்வழி முறையே, பெண் மீதான சமூகத்தின் கலாசார ஆதிக்கம், ஆணாதிக்கம் முதலான விடயங்கள் பற்றி விரிவாக அலசப்படுகின்றது.

**உலகச் சந்தையில் ஒரு பெண் (1996)** : "உங்கள் வீட்டுக்கதவை யாரோ தட்டுகிறார்கள். கதவைத் திறக்கிறீர்கள். தோளில் பையுடனும் சிரித்த முகத்துடனும் ஒரு பெண் நிற்கிறாள். நயமாகப் பேசி தன் பையிலுள்ள சில நுகர்பண்டங்களை எடுத்து விற்கமுயலுகிறாள். இந்தப் பெண் வழக்கமாகத் தலையில் காய்கறிச் சுமையுடன் கத்தரிக்காய் வெண்டிக்காய் .... என்று கூவி, வீடு வீடாகச் சென்று விற்கும் சாதாரண பெண்ணல்ல. தனிநபருமல்ல. உலகச் சந்தைப் பிரதிநிதி, விற்பனை முறைகளில் பயிற்சியும் திறமையும் உள்ளவள் ....." என்ற, வித்தியாசமான ஒரு பெண்ணின் அறிமுகம் இந்நாவலின் வித்தியாசமான உள்ளடக்கம் பற்றி - சந்தைப் பொருளாதார முறைமையும் அவ்வழி, கம்பனியொன்றில் சேல்ஸ் புரோமோஷன் ஆபிஸராக இருக்கின்ற சுமதி என்ற பெண்ணும் பற்றி - வாசகருக்கும் தமிழ்நாவல் உலகிற்கும் அதன் ஆரம்பத்திலேயே அறிவித்து விடுகின்றது. சுருங்கக்கூறின், மாறிவரும் இன்றைய உலகப் பொருளாதாரச் சூழலுக்கேற்ற ஆற்றலும் ஆளுமையும் கொண்ட ஒரு புதுமைப் பெண்ணின் கதையாக இந்நாவல் அமைந்துள்ளது. "புதிய சந்தையில்" என்ற நாவலையும் இந்நாவலுடன் இணைத்துப் பார்க்க முடியும்.

**நான்கு சுவர்களுக்குள் (2000)** : இந்நாவல், குடும்பவாழ்க்கையில் பெண்படும் கஷ்டங்களை துளசி என்ற பெண்ணின் வாழ்க்கையூடாக வெளிப்படுத்தும் அதே வேளை துளசியுடன் பழகுகின்ற வெவ்வேறு நிலைப்பட்ட பெண்களூடாக, பெண்கள் பலரும் படும் கஷ்டங்களை வெளிப்படுத்துகின்றது என்ற விதத்திலே கவனத்திற்குரியது.

## தேசிய இனப்பிரச்சினையும் பெண்நிலைவாதமும்

செ.க. நாவல்கள் சிலவற்றிலே ஒன்றிற்கு மேற்பட்ட பிரச்சினைகள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈழத்தின் இன்றைய சமூக, அரசியல் நிலைமைகளில் அவை கலப்பது இயல்பானது என்பது உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்முறை வடுக்கள் (1995)** : இந்நாவல், நாவலின் கட்டமைப்புக் காரணமாக இராணுவ வன்முறைகளையும் ஆணாதிக்க வன்முறை களையும் பற்றி வெகு இயல்பான முறையில் விவரித்துச் செல்கின்றது. அதாவது, தவறுதலாக இராணுவமுகாமிற்கு அழைத்து வரப்பட்ட சந்திரகுமார் ஊடாக இராணுவ வன்முறைகள் பற்றியும் அவனது மருமகளது வாழ்க்கையூடாக ஆணாதிக்க வன்முறைகள் பற்றியும் பேசுகின்றது. இதற்கு அப்பால், சந்திரகுமாரின் நினைவலைகளூடாக, அவனது இளமைக்கால வன்முறையற்ற இளமை இன்பம் பற்றிப் பேசப்படுகின்றது. அவ் வழி, இளமை, இன்பம் பற்றி அறியாமை மிக்கிருந்த சந்திரகுமாரை விட, அவனுடன் நெருங்கிப் பழகிய இரு "பெண்"களின் (ஏழுவயது சுவர்ணா, திருமண வயது எட்டிய மலரக்கா) இளமை உணர்வுகள் பற்றிய விவரிப்பு குறிப்பிடத்தக்கது; இது தமிழ் நாவலுலகிற்குப் புதியது.

**இலட்சியக் கனவுகள் (1999)** : இந்நாவலில் பெண்நிலைவாதம், தேசிய இனப்பிரச்சினை என்பனவற்றோடு சாதிப்பிரச்சினையும் பேசப்படுகின்றது. குரும்பையூர் என்பது கற்பனையூராயினும் அது யாழ்ப்பாணம் சார்ந்த ஊரேயாகும் - எவ்வாறாயினும், இந்நாவலின் சிறப்பு, மேற்குறிப்பிட்ட மூன்று பிரச்சினைகளினதும் எதிர்கால நிலைமைக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனைகளுக்கு - முதன்மை யளிப்பதாகும்.

**செல்வி (2000)** : இந்நாவல், யாழ்ப்பாண மக்களது இடப்பெயர்வுப் பின்புலத்தில் தேசிய இனப்பிரச்சினை பற்றியும், பால்யத்தோழிகளான செல்வி, கற்பகம் ஆகியோரது குடும்ப வாழ்க்கையூடாக பெண்களது பிரச்சினைகள் பற்றியும் பேசுகின்றது இவ்விரு பிரச்சினைக ளூடாகவும் வன்மை இணக்கம், அதிகாரத்துவம், மேலாதிக்கம், வன்முறை கலாசாரம் என்ற கோட்பாடுகளைத் தெளிவுபடுத்த முயல்வது இந்நாவலின் சிறப்பம்சமாகிறது.

**பொருளாதாரம்**

**புதிய சந்தையில் (1996)** : இந்நாவல், ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆட்சிக் காலத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வந்த சூழலில் ஏற்பட்ட புதிய பொருளாதார மாற்றங்களும் அவ்வழி பெண்களது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களும் பற்றி விபரிக்கின்றது. ஐந்து நட்சத்திர ஹோட்டலில் பணிபுரிகின்ற வசந்தி என்ற பெண்ணின் அன்றாட வாழ்க்கையை மையமாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்கின்றது. (முற்கூறப்பட்ட 'உலக சந்தையில் ஒரு பெண்' என்ற நாவலை இவ்வகையான வகைப்படுத்தலினுள்ளும் சேர்த்துக் கொள்ளலாம்).

### புகலிட வாழ்க்கை

புகலிட வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டெழுந்த நாவல்கள் பற்றி ஆராய்வோர், அப்பொருள் பற்றி 'செ.க.' எழுதிய நாவல்களை யாது காரணத்தாலோ ஆராயத் தவறினும், அவை கவனத்திற்குட்பட வேண்டிய முக்கியமான நாவல்களாகவே காணப்படுகின்றன.

**கோடையும் பனியும் (2003)** : இந்நாவல், சுவீடன் நாட்டிலே வாழ்கின்ற சிவபாலன், அங்கு (அவன் போன்று புலம்பெயர்ந்து) வாழ்கின்ற ரூபி என்கின்ற பெண்ணை விரும்பித் திருமணஞ் செய்வதும் தந்தையின் மரணச் சடங்கிற்காக ரூபியுடன் ஈழத்திற்கு வருவதும், ஈழம் வந்த ரூபி, ஈழத்து வாழ்க்கைச் சூழலுக்கு ஒத்துவர முடியாத சூழலில், சிவபாலனிடம் ஒரு பிள்ளையை ஒப்படைத்து விட்டு மற்றொரு பிள்ளையுடன் அவனைவிட்டு "விலகி" சடுதியாக சுவீடன் திரும்பி விடுவதும் பற்றி விவரிக்கின்றது. ரூபி செல்வதற்கான காரணம் பற்றிய நாவலாசிரியரது மார்க்சிய நோக்கிலான விளக்கமே இந்நாவலின் சிறப்பம்சமாகின்றது.

**தாய்வீடு (2001)** : இந்நாவல், தந்தையின் மரணச்சடங்கிற்காக, ஒருமகள் ஜேர்மனியிலிருந்தும், மற்றொரு மகள் கனடாவிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற சூழலில், அவர்களது புகலிட நாட்டுக் குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள், அனுபவங்கள் சிலவற்றை வெளிப்படுத்த முயல்கின்றது. அவ்வளவே.

**இருட்டறையில் உலகம் (2004)** : இந்நாவல், புனிதம் என்ற பெண்ணின் அபிலாஷைகள், கனவுகள் ஊடாக புகலிடநாட்டு வாழ்க்கை பற்றி விஸ்தாரமாகப் பேசமுற்பட்டுள்ளது. சாதாரண உழைப்பாளியான தனது கணவனை முதலில் ஈரானுக்கும் பின்பு இந்தியாவிற்கும் பின்பு ஜேர்மனுக்கும் அனுப்பிய புனிதம், இறுதியில் அவனுடன் கனடா சென்று வாழ முற்படுகின்றாள். கனடா வாழ்க்கைச் சூழல் அவனது குடும்பத்தில் பண்பாட்டு ரீதியில் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பது மட்டுமன்றி அவளது கனவுகள் கலைவதற்கும் வழிவகுக்கின்றது. நாவலாசிரியது மார்க்சிய நோக்கிலான விளக்கமே இந்நாவலின் சிறப்பெனலாம். எவ்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாயினும் ஏனையோர் எழுதிய தமிழ்ப் புகலிட நாவல்களுடன் ஒப்பிடும்போதுதான் இம் மூன்று நாவல்களினதும் பலமும் பலவீனமும் தெரியவரும்.

## கருத்து விளக்க நாவல்கள்

### முதுமை, மரணம்

***மரணத்தின் நிழலில் (1994) :*** இந்நாவல், முதுமை, மரணம் ஆகிய விடயங்களுக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்டதாகக் கூறப்படு கின்றது. நோயுற்ற தந்தையொருவரின் பின்னணியில், உரையாடல் பாணியில் அவ்வப்போது இவை பேசப்படுவதுண்மையே. எனினும், அவற்றை விட பின்புலமாக அமைகின்ற இராணுவக் கெடுபிடிகள், இழந்த காதலர் சந்திப்பு முதலியனவே நாவலில் முதன்மை பெற்றுள்ளன. ஆயினும், மரணம், முதுமை பற்றி அலசும் நாவல்கள் தமிழில் அபூர்வமாகவே வெளியான சூழலில் (மரணம் பற்றிப் பேசுகின்ற தமிழ் நாவல்களில் சம்பத் எழுதிய "இடைவெளி" முக்கியமானதொன்று) இப்படைப்பு புறக்கணிப்பிற்குரியதன்று.

### அந்நியமாதல்

***அந்நியமாதல் (1995) :*** இந்நாவல் "இன்றைய போட்டிச் சமூகத்தில் மனிதனுக்கு தனது கல்வி, உழைப்பு, நிர்வாகம் உற்பத்திப் பண்டம், ஆத்மா அனைத்திற்கும் எவ்வாறு அந்நியப்பட்டு வாழ்கின்ற ஒரு பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது" என்ற சித்தாந்தக் கருத்தைத் தொட்டுக் காட்ட முற்பட்டுள்ளது. ஆனந்தி (பிரபல டாக்டரின் மனைவி), மனோகரன் (இளம் நிறுவன அதிபர்), சந்திரன் (தொழிற்சங்கவாதி, ஆனந்தியின் முன்னாள் காதலன்) ஆகியோரது செயற்பாடுகளும் (எ-டு : மனோகரன் வயது கூடிய ஆனந்தியை விரும்ப முற்படுதல், நீண்ட காலத்திற்குப் பிற்பட்ட சந்திரனது உறவு காரணமாக ஆனந்தியின் சிந்தனையில் மாற்றமேற்படல்) உரையாடல்களும் ஊடாக, அந்நியமாதல் நிலைமை ஓரளவு துலக்கமுறுகின்றது எனலாம்.

### சுயநலம், சுரண்டல்

***தேன் பறிப்போர் (2004) :*** "வர்க்க பேதம் உட்பட, சமூக வாழ்வில் முதன்மை பெறும் மொழி, நிறம், இனம், மதம், சாதி, பால்பேதம் அனைத்தும் உயர் வர்க்கத்தினரால் தமது சுரண்டலுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலத்திற்குமுள்ளாக்கப்படும் நிலையில் வர்க்கம், பால் ஆகியவை பற்றி விரிவாகவும் ஏனையவைபற்றிச் சுருக்கமாகவும் கதையூடாக விளக்குவதாக" இந்நாவல் அமைகின்றது. அவற்றை அவ்வாறு உறிஞ்சுவோரே 'தேன் பறிப்போர்' ஆகின்றனர். வர்க்க நிலையில் தேன் பறிப்போர் பற்றி எடுத்துக்காட்டுவதற்காக, மலையகத் தொழிலாளரது வாழ்க்கை நிலை சுருக்கமாகச் சித்திரிக்கப்படுகின்றது.

**தமிழக மக்களது வாழ்க்கை**

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுள் ஒரு சிலர் தமிழக மக்களது வாழ்க்கையை உள்ளடக்கமாகக் கொண்டு நாவல்கள் எழுதியுள்ளனர். அத்தகைய எழுத்தாளருள் மிகச் சிலர் தமிழகத்தே வாழ்ந்து அத்தகைய நாவல்களைப் படைத்துள்ளனர். செ.க.வும் அவ்வாறான எழுத்தாளரே. அவர் அவ்வாறாக எழுதிய நாவல்களும் அவற்றின் முக்கியத்துவம் காரணமாக கவனத்திற்குட்பட வேண்டியனவாகின்றன.

**சூழலியல்**

***நரகமும் சொர்க்கமும் (1996)*** : இந்நாவல், சுற்றுச் சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது. அதற்கேற்ப, சேரிவாழ்க்கையைக் களமாகக் கொண்டது. அதற்கேற்ப, கல்லூரிப் படிப்பறிவுடைய, சேரியில் வாழ்கின்ற வேலுச்சாமி முக்கிய பாத்திரமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். சேரியின் சுற்றுச்சூழல் மாசடைதல் பற்றி மட்டுமன்றி சேரி மக்களது வாழ்க்கையின் நன்கு அறியப்படாத சில பக்கங்களை வெளிப்படுத்துவதாலும் பெண்களது உழைப்பாற்றல் பற்றி எடுத்துத்துரைப்பதாலுங்கூட, இந்நாவல் சிறப்படைகின்றது.

**கலை, இலக்கியம், சினிமா**

***கவர்ச்சிக் கலையின் மறுபக்கம் (1997)*** : இன்று தமிழகத்தில் முக்கியமாக இடம் பிடித்துள்ள சினிமா என்ற நிறுவனம் பற்றிப்பேசுகின்ற தமிழ் நாவல்கள் மிகச் சிலவாகவே உள்ளன. இவ்விதத்தில், சினிமா உலகின் திரைமறைவு வாழ்க்கையின் சில பகுதிகளை, பிரபல படத் தயாரிப்பாளர், உதவியாளர் அரவிந்தன், சுலோஜனா என்ற நடிகை, புறோக்கர் முனுசாமி முதலானோரது பாத்திரங்களூடாக அம்பலப்படுத்த முற்பட்டு அதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளது. குறிப்பாக நடிகைகளாக வருவோரின் குடும்பநிலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைரக்டர் - நடிகை தொடர்புகள், முன்னுக்கு வருவதற்காக நடிகைகள் செய்கின்ற விட்டுக் கொடுப்புகள் முதலான பல விடயங்கள் முதன் முதலாக இந்நாவலூடே வெளிவருகின்றன.

**கடவுளும் மனிதனும் (2005)** : இந்நாவலில், சம்பவங்கள் ஊடாக சினிமா பற்றியும், உரையாடல்கள் ஊடாக கலை, இலக்கியங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றது. இத்தியாதி விடயங்களுக்கு, டைக்டர் சிவராமன் நடிகை தேவிகா, துணை நடிகை சீதா ஆகியோரும் உதவி டைரக்டர் கபிலனும் நாவலாசிரியருக்குதவி செய்கின்றனர்.

**சமகால அரசியல்**

**ஓர் அரசியலின் கதை (1997)** : 'செ.க.' ஈழத்தின் சமகால அரசியலை உள்ளடக்கமாகவோ பின்புலமாகவோ கொண்டு நாவல்கள் எழுதியது போன்று, தமிழகத்தில் ஜெயலலிதா முதல்வராக இருந்த காலப் பகுதியைக் களமாகக் கொண்டு எழுதமுற்பட்ட நாவலே இது. மகாமகத்திற்குச் சென்று சனநெரிசல் காரணமாக சிலர் இறந்த உண்மைச் சம்பவம் நாவலில் முக்கியமாகவிருப்பினும், முற்பட்ட காந்தீய அரசியல் தொடக்கம் தற்கால காவிரி நீர்ப்பிரச்சினை வரை பல விடயங்களும் பாத்திர உருவாக்கத்தினூடேயும் உரையாடல் மூலமாகவும் நாவலில் அலசப்படுகின்றன.

**சிறுவர் உழைப்பு**

**அடைப்புகள் (1998)** : சிறுவர் உழைப்பினை முதல் நோக்கமாகக் கொண்டெழுந்த இந்நாவல் அதற்கேற்ப சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையைக் களமாகக் கொண்டது; சிறுவர் உழைப்பினை மட்டுமன்றி, இன்ஸ்பெக்டர்மார் ஊழல், பெண்கள் உழைப்பாற்றல், கிராமிய ஒழுகலாறு என பலவிடயங்கள் பற்றியும் பாத்திரங்கள், சம்பவங்கள், உரையாடல்கள் ஊடாக அலச முற்பட்டுள்ளது.

**புலம்பெயர்வு**

**குடும்பச்சிறையில் (1999):** இந்நாவல் தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற மகாதேவன், குமுதினி, சுகன்யா ஆகியோரையும் மகாதேவன் சென்னை வந்து திருமணஞ் செய்துகொண்ட சகுந்தலாவையும் சுற்றி நகர்கின்றது. சகுந்தலா ஊடாக, தமிழகப் பெண்களது புகுந்த வீட்டு வாழ்க்கை நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும் கனடாவில் வாழ்வோரூடாக, தமிழ்ப் பண்பாட்டு மாற்றங்கள் பற்றியும் அவ்வழி தமிழ்வாசகருக்கு அதிர்ச்சியூட்டக்கூடிய விடயங்கள் பற்றியும் (எ-டு: குமுதினி, சுகன்யா ஆகியோர் மகாதேவனுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற நெருக்கமான உறவு) எடுத்துரைக்கின்றது.

**சேரி மக்கள் வாழ்க்கை**

***சிறையும் குடிசையும் (2002)*** : இந்நாவல், சென்னை நகரை அண்டியுள்ள சேரிபகுதி மக்களது வாழ்க்கையைக் களமாகக் கொண்டது. சேரிப் பகுதியில் வாழ்கின்ற நாதன், ஆய்வு மாணவருக்கு வழங்கும் தகவல்கள், உரையாடல்களே நாவலின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துள்ளன. நாதனுக்கு, சிறைவாழ்க்கை அனுபவமும் இருப்பதால், சேரிவாழ்க்கை பற்றி மட்டுமன்றி, சிறை வாழ்க்கை பற்றி அலசுகின்ற வாய்ப்பும் நாவலாசிரியருக்குக்கிடைத்துள்ளது.

**ஈழத்து மக்களது தமிழக வாழ்க்கை**

***இருமுகம் (2004)*** : இந்நாவல், ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் ஈழத்து குடும்பத்தினருக்கும் தமிழ் நாட்டுக் குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட திருமண உறவு காரணமாக உருவான குடும்பமொன்றின் வாழ்க்கையை உள்ளடக்க மாகக் கொண்டது. ஈழத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு குடும்ப வாழ்க்கை திருப்திதர முடியாத நிலையில் அதற்கான காரணமும் அது காரணமாக பிரித்து சென்று 'விடுதலை' உணர்வுடன் ஈழத்திலுள்ள தனது முன்னாள் காதலனுடன் அவள் வாழ்வதுமாக நாவல் அமைகின்றது.

**தனிச்சொத்துடைமை**

***கூட்டுக்கு வெளியே (2002)*** : கருத்து விளக்க நாவல் வரிசையில், தமிழக வாழ்க்கைப் புலத்தில், செ.க. எழுதிய இந்நாவல் தனிச் சொத்துடைமையின் பல்வேறு அம்சங்களையும் குடும்ப அமைப்பு உருவாக்கம், பெண்ணடிமை நிலை, குடும்பப் பாதுகாப்பு முதலானவற்றையும் விளக்குவதாக வெளிப்பட்டுள்ளது. அதற்கேற்ப பாத்திரங்களும் உரையாடல்களும் கதைப்பின்னலும் கைகோர்த்துச் செல்கின்றன. தனிச்சொத்துடைமை (பட்டுப்புழுவின்) கூடு ஆகவும், புழு அதிலிருந்து வெளியேறுவது தனது கூட்டை உடைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாக வெளியேறுவதாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. இவ்வழி தனிச் சொத்துடைமையை விரும்பாத செந்தாமரை வித்தியாச மானதொரு பாத்திரமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உலகமயவாக்கம்**

***போட்டிச்சந்தையில் (2006)*** : இந்நாவல் இன்று உலகமயவாக்கம் காரணமாக உருவாகி வரும் போட்டிச் சந்தை நிலைமையில் பெண், யுத்தம், போட்டிச்சந்தை ஆகிய மூன்று அம்சங்களையும் உரசிப் பார்க்க முற்பட்டுள்ளது. யுத்தம் பற்றி உரையாடல் ஊடாகவும், ஏனைய இரு அம்சங்கள் பற்றி சிவகாமி, சுமதி ஆகிய பெண்களது வாழ்க்கையூடாகவும் வெளிப்படுத்த முனைகின்றது.

## உள்ளடக்க நோக்கிலான மதிப்பீடு

மேற்கூறியவாறான, 'செ.க.'வின் நாவல்களின் உள்ளடக்கம் பற்றிக் கூர்ந்து தொகுத்து நோக்கும்போது மனங்கொள்ளப்பட வேண்டிய சில அம்சங்கள் அவ்வழி வெளிப்படுவதைக் காணலாம். அவை பின்வருமாறு :

1. சில விடயங்கள் ஈழத்து நாவல் உலகில் முதன் முதலாகப் பேசப்படுகின்றன அவையாவன :
   - ★ தலித்திய (விளிம்புநிலை) மக்களது போராட்டம் (நீண்டபயணம், போர்க்கோலம்).
   - ★ நிலவுடமையின் வீழ்ச்சி (சடங்கு, மண்ணும் மக்களும்).
   - ★ (பெண்நிலைவாத நோக்கில்) குடும்ப உறவு, திருமண உறவு, வாழ்க்கை முறை மாற்றம் முதலானவை (சூரியன் கிழக்கில் உதிக்கின்றது முதலியன).
2. (மேற்கூறியவை உட்பட) சில விடயங்கள் முதன்முதலாக ஆழமான விமர்சனத்திற்குட்படுகின்றன :
   - ★ தொழிலாளர், மத்தியதர, முதலாளித்துவ வர்க்கத்தினரின் வாழ்க்கை (செவ்வானம், தரையும் தாரகையும்).
   - ★ தேசிய இனப் பிரச்சினை (இளமையின் கீதம் முதலியன).
   - ★ புகலிட வாழ்க்கை (கோடையும் பனியும், இருட்டறை உலகம்).
   - ★ ஈழத்தின் (ஏறத்தாழ ஐம்பதாண்டுக்கால) சமகால வரலாறு (செ.க.வின் ஈழத்து நாவல்கள் அனைத்தும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தமிழ் நாட்டுப் பிரச்சினைகள் சில முதன்முதலாக ஆழமான விமர்சனத்திற்குட்படுகின்றன. அவையாவன :
   - ★ சிறுவர் உழைப்பு (அடைப்புகள்).
   - ★ கலை, இலக்கியம், சினிமா (கவர்ச்சிக்கலையின் மறுபக்கம், கடவுளும் மனிதனும்).
   - ★ சேரிவாழ்க்கை (சிறையும் குடிசையும்).
   - ★ உலகமயவாக்கம் (உலகச்சந்தையில் ஒருபெண்).
   - ★ தமிழ்நாட்டினரது புலப்பெயர்வு (குடும்பச்சிறையில்).
   - ★ ஈழத்தவரது தமிழ்நாட்டுப் புலப்பெயர்வு (இருமுகம்).
   - ★ சமகால அரசியல் (ஒரு அரசியலின் கதை).
   - ★ (பெண்நிலைவாத நோக்கில்) குடும்பம், திருமணம், காதல்.
   - ★ சமகால வரலாறு (மேற்கூறிய அனைத்து நாவல்களும்).
4. ஒட்டுமொத்தமான தமிழ் நாவல் வளர்ச்சிப் போக்கில், செ.க.வின் நாவல்களூடாகவே முதன்முதலாக பெண்நிலைவாத நோக்கில் பெண்களது வாழ்க்கை ஆழமான விமர்சனத்திற் குட்படுகின்றது.

**மார்க்சிய நோக்கில் . . . .**

மேற்கூறியவாறான சமூகப் பிரச்சினைகள் ஆழமான விமர்சனத்திற்குட்படுவது என்பது எவ்வாறு சாத்தியப்படுகின்றது அல்லது எவ்வாறு இடம்பெறுகின்றது என்பதே இவ்வேளை எழுகின்ற முக்கிய வினாவாகின்றது. சமூகம் பற்றிய ஆழமான விமர்சனப் பார்வை என்பது "செ.க."வைப் பொறுத்தவரையில் மார்க்சிய நோக்கிலான அணுகுமுறையூடாகவே நடைபெறுகின்றது என்பது கண்கூடு. இந்நோக்கிலான நாவலாசிரியர்கள் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் பலரிருப்பினும் இவர்கள் ஒரு சில சமூகப் பிரச்சினை களைக் கவனத்திற் கொள்ள, "செ.க."வோ மார்க்சிய நோக்கில் பல்வேறு பிரச்சினையையும் கவனத்திற் கொள்வதே விதந்து ரைக்கப்பட வேண்டிய விடயமாகின்றது. அது மட்டுமன்றி மார்க்சிய சித்தாந்த தெளிவுடையவராகவும் "செ.க." விளங்குவதை தமது நாவல்கள் ஒவ்வொன்றிற்கும் எழுதிய முன்னுரைகளூடாகவும் (ஏனைய கட்டுரை நூல்கள், வாயிலாகவும்) உறுதி செய்துள்ளமை கவனத்திற்குரியதே. மலையாளத்தில் செ.க. போன்று மார்க்சிய அறிவுடன் படைப்பிலக்கியம் படைப்பவரைக் கூறுவதற்கில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார் கூற்றையும் இவ்விடத்தில் மனங்கொள்வது பொருத்தமானது (ஒரு மண்ணின் கதை - முன்னுரை).

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் வற்புறுத்தியாக வேண்டும். செ.க.வின் மார்க்சிய சிந்தனை சார்ந்த அறிவும், தெளிவும் கார்ல்மார்க்சின் சிந்தனைகளுடன் மட்டும் நிற்காமல் அதற்குமப்பால் மார்க்சிற்குப் பிற்பட்ட மார்க்சிய தத்துவ ஆய்வாளர்களான அல்தூஸர் (எ-டு : தேன்பறிப்போர்), கிராம்ஸி (எ-டு : கோடையும் பனியும்), தியடோர் அடனோர் (எ-டு : இருட்டறையில் உலகம்), ஐஸ்அகமட் (எ-டு : போட்டிச்சந்தையில்) முதலானோரின் சிந்தனைகளையும் உள்வாங்கியனவாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

"செ.க." வின் மார்க்சிய சித்தாந்த அறிவுத்தேடலில் மேன்மேலும் ஆழமும் தெளிவும் வளமும் ஏற்படுத்தியுள்ளதொரு விடயம் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, சிக்மன் பிராய்ட் (பல நாவல்கள்), லக்கன் (தேன்பறிப்போர்), ஹாவ்லொக் அலிஸ் (தேன்பறிப்போர்) முதலானோரின் உளவியல் சார்ந்த கருத்துக்களும் சீமோன்டி பவ்யர், அலெக்சாந்தர் கொலந்தை ஆகியோரின் பெண்நிலைவாதஞ் சார்ந்த கருத்துகளும் மார்க்சிய நோக்குத் தெளிவுடன் 'செ.க.'வை ஆக்கிரமித்து, அவரது நாவல்களில் வெளிப்பட்டுள்ளன. இவ்வாறு நோக்கும்போது செ.க.வின் நாவல்கள் தொடர்பான இன்னொரு விடயம் பற்றியும் கூறவேண்டியுள்ளது. சமூகப் பிரச்சினைகள் சிலவற்றை தேவையானவிடத்தில் உளவியல் நோக்கிலும் பெண் நிலைவாத நோக்கிலும் ஆழமாக அணுகிய எழுத்தாளராகவும் செ.க. காணப்படுகின்றார் என்பதே அதுவாகும். உளவியல் நோக்கில் அணுகிய தமிழ் நாவலாசிரியர் வேறு சிலர் இருந்தாலும் பெண் நிலைவாத நோக்கில் பெண்களது பிரச்சினைகள் பலவற்றை அணுகிய ஒரே ஒரு தமிழ் நாவலாசிரியர் "செ.க." என்றுரைப்பதும் பொருத்தமானதே.

எனினும், செ.க. தமது நாவல்களில் உளவியல், பெண்நிலை வாதச் சிந்தனைகள் என்பனவற்றிற்கு இடமளித்த போதும் தேசிய இனப்பிரச்சினை, புகலிட வாழ்க்கை, உலகமயவாக்கம் முதலான விடயங்களைக் கையாண்டபோதும் அவரது இந்த கதைகளில் முதன்மையிடம் பெறுகின்ற மார்க்சிய தத்துவமே அனைத்து சமூகப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக அவரது நாவல்களில் வெளிப்படுகின்றது. இது அனைவருமறிந்ததொன்றாதலின், விதந்துரைக்கப்படவோ மேற்கோள்களூடாகவோ நிறுவப்பட வேண்டியதொன்றன்று.

சுருங்கக் கூறின், ஈழத்து தமிழ் நாவல் வரலாற்றுப் பின்புலத்தில் ஆரோக்கிய விதத்தில், ஈழத்துத் தமிழ்நாவல் முன்னோடிகளுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையானவராக இருக்கின்ற செ.க. ஈழத்துத் தமிழ்நாவல் வளர்ச்சி உட்பட, ஒட்டுமொத்தமான தமிழ்நாவல் வளர்ச்சிப் பின்புலத்திலும் மார்க்சிய நோக்குடைய நாவலாசிரியர்களுள் முதன்மையானவராகவும் விளங்குகிறாரென்பது இதுவரை கூறிய வற்றிலிருந்து தெளிவாகின்றதெனலாம்.

## வடிவஞ் சார்ந்த மதிப்பீடு

அதே வேளையில் "நாவல்" என்பது தனித்துவ இயல்புகள் கொண்ட தனியொரு இலக்கிய வடிவமென்ற அடிப்படையில் கலாபூர்வமான முறையில் வெளிப்பட வேண்டியதவசியமே. இந்நிலை நின்று பார்க்கும்போது செ.க.வின் நாவல்கள் எவ்வாறமைகின்றன என்று நோக்குவதும் தவிர்க்க இயலாததே. இவ்விதத்தில் வடிவரீதியில் நாவலுக்குரிய இயல்புகள் அல்லது நாவலின் ஆக்கக்கூறுகள் பற்றி - அவை செ.க.வின் நாவல்களில் வெளிப்படுகின்ற விதம் பற்றி - நோக்குவது பொருத்தமானது.

நாவலுக்குரிய இயல்புகள் பலவிருப்பினும் கதை அம்சம், பாத்திரங்கள், உரையாடல், பின்னணி முதலியன இவ்விதத்தில் முதற்கண் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் கதை அம்சத்தின் முக்கியத்துவம் பற்றி நன்குணர்ந்துள்ள செ.க. தனது நாவல் பலவற்றில் அத்தன்மையைப் பேணுவதில் கூடிய கவனம் செலுத்தியுள்ளார். (செ.க.விற்கு கதையம்சத்தின் முக்கியத்துவத்தை மட்டுமன்றி எவ்வாறு அதனைச் சுவையாகக் கொண்டு செல்லலாமென்று உணர்த்தியதிலும் எழுத்தாளர் அகிலனுக்கு முக்கிய பங்குண்டு). அது பற்றி தனது நாவல் முன்னுரைகளில் குறிப்பிட்டுள்ளார். எனினும், சுவைநயத்துடன் கதை சொல்லுந்திறன் ஆரம்பக்கால நாவல்களில் (நீண்டபயணம், சடங்கு, போர்க்கோலம், செவ்வானம், தரையும் தாரகையும்) வெளிப்பட்டது போன்று பிற்கால நாவல்களில் வெளிப்படவில்லை. அத்துடன் குறிப்பிட்ட சில கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்பதற்காக, கதையை உருவாக்கும் தன்மையையும் அது காரணமாக, கதை இயல்பு ஓட்டத்திலும் யதார்த்த பூர்வமான முறையிலும் அமையாத தன்மையையும் அவற்றிலே அவதானிக்க முடிகின்றது.

நாவலொன்றின் உருவாக்கத்தில் பாத்திரங்களுக்கு முக்கிய இடமுண்டு. இவ்வழி இத்தகைய பாத்திரங்கள் இரத்தமும் சதையும் கொண்ட பாத்திரங்களாக அமைவதா? எலும்புக் கூடுகளாக அமைவதா? என்பதும் அவை "தாமாக" ஆடுமா? ஆட்டுவித்தால் ஆடுமா? என்பதும் எழுத்தாளரது ஆற்றலிலும் ஆளுமையிலுமே தங்கியுள்ளன. செ.க.வின் ஆரம்பகால நாவல்களிலும் (எ-டு : 'நீண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தில்' வருகின்ற செல்லத்துரை, வள்ளி, கற்பகம், சரஸ்வதி, 'போர்க்கோலத்தில்' வரும் அன்னம்மா, 'சடங்கு', 'தரையும் தாரகையும்' நாவல்களில் வரும் பாத்திரங்கள்) பிற்கால சில நாவல்களிலும் ('அயலவர்கள்' நாவலில் வரும் சாந்தி, சுந்தரி, 'சூரியன் கிழக்கில் உதிக்கும்' நாவலில் வரும் உமா, ஜெயிலர், சித்திரா, 'இரண்டாவது ஜாதி'யில் வரம் இந்திரா, 'வன்முறை வடுக்கள்' இல் வரும் மலரக்கா, சுவர்ணா முதலான பாத்திரங்கள்) வருகின்ற சிலரே இரத்தமும் சதையும் கொண்ட பாத்திரங்களாகத் திகழ்கின்றனர். ஏனைய பலரும் எலும்புக் கூடுகளாக அல்லது ஆட்டுவித்தால் ஆடுபவர்களாக விளங்குகின்றனர். செ.க.வின் நாவல்களில் வரும் இன்னொரு சாரார் (பெரும்பாலும் எல்லா நாவல்களிலும் இடம் பெறுபவர்கள்) கருத்து விளக்கப் போதனையாளர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு விதத்தில் இவர்கள் "இணைப்பாளர்" களாகத் (சம்பவங்களையோ பாத்திரங்களையோ பிரச்சினை களையோ இணைப்பவர்கள்) திகழ்கின்றனர்.

பாத்திரங்களின் இயக்கமும் உரையாடல்களும் நாவல்களில் விரிவாக அமைய வேண்டியன. "செ.க."வின் நாவல்களில் பாத்திரங்கள் தாம் இயங்குவதைவிட, உரையாடல்களிலேயே அதிகம் ஈடுபடு கின்றனர். இத்தகைய உரையாடல் அம்சத்தை தனது நாவல்களின் உயிர் என்னும் படியாகக் கருதி, அதனைத் திறம்பட யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவதில் ஆற்றல் மிக்கவராக விளங்குகின்றார் செ.க.

**எ-டு : 1**

"ஏன் ஒரு வெள்ளாடிச்சியைக் கட்டிப்போட்டு அரிசி இடிக்க வைச்சுப் பார்த்துக்கொண்டு நிற்கிறது தானே.
அவளவை அங்கை இடிக்கப் போறாளவை.
அங்க நீங்க இடிச்சுக்குடுக்கிறது தானே.
என்னடி சொன்னாய்? ...."

- (போர்க்கோலம், ப.97)

**எ-டு : 2**

பல்கனியில் ஏறி இருந்ததும் ஈஸ்வரி சொன்னாள்
"நீங்கள் ஷோ காட்டிறதிலை நிற்கிறியள் ஒழிய என்னையும் குழந்தையையும் வாழவைக்க வேணுமெண்டு விரும்புற ஆளில்லை.

நீ பெரிய கொம்பு, பேசாமல் படத்தைப்பார் தெரிஞ்சவங் களெல்லாம் வந்திருக்கிறாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அவங்களுக்குக் காட்ட வெக்கமாயிருக்கோ. இனிமேல் உம்மோடை படத்துக்கு வந்தால் பாரும்.

நீ வேறை ஆரையேன் கூட்டிக்கொண்டுபோ இப்ப பேசாதையடி, இது வீடில்லை, சுத்திவர ஆக்கள் " .......

*- (சடங்கு, ப.173)*

**எ-டு : 3**

"குமுதினி, உங்க முடிவுதான் என்ன?

என்னுடையதும் அதே முடிவுதான். சுதந்திரமான பாலுறவுதான் வாழ்க்கைக்கு முக்கியமானதென்று எண்ணினால் தற்போது நடப்பதுபோல தொடரலாம் இருவருடனும் பாலுறவு கொள்ளத்தக்க வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தேன். இத்தகைய வாய்ப்பு பேசும் திருமணத்தில் ஒரு போதும் கிடையாது. யோனிப் பொருத்தத்தை ஜாதகத்தில்தான் பார்ப்பார்கள். நம் இருவரிலும் பிடித்தவரோடு நீங்கள் வாழ்வதிலும் தவறில்லை. அமெரிக்காவில் குடும்ப உறவுப் பெயரின்றி அவரவர் தமது பெயருடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாழ்பவர் ஏராளம். சுகன்யாவைப் பிடிக்காவிட்டால் அதே போலவே வாழ்ந்து பார்க்கத் தயாராயிருக்கிறேன். நான் விரும்பாத வேளை வெளியேறி விடுவேன். அந்த சுதந்திரம் வேண்டும் .... "

*- (குடும்பச் சிறையில், ப.183)*

**எ-டு : 4**

"கலியாணத்திற்கும் பிள்ளை பெறுவதற்கும் என்ன தொடர்பு? எனக்குப் பிள்ளை வேணுமென்றால் தெருவிலே போகிற எந்த வாலிபனோ கிழவனோ கூடத் தயாராக இருப்பாங்க. நான் விரும்பினவனைக் கூப்பிட்டே சினைப்படுத்த முடியும்.

*- (சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, ப.61)*

நாவலைப் பொறுத்தவரையிலான பிறிதொரு முக்கிய அம்சம் நாவலின் காலம் அல்லது களம் என்பது. இவ் அடிப்படையில் நோக்கும் போதுதான் செ.க.வின் நாவல்களின் முக்கியமான சிறப்பியல்பொன்று தெரியவரும். அதுதான், ஈழத்தின் சமகால வரலாற்றை தமது எல்லா நாவல்களினதும் பின்புலமாக கொண்டிருந் தமையாகும். இவ்விதத்தில் ஈழத்துத் தமிழ்நாவல்களில் பிரக்ஞை பூர்வமான முறையில் சமகால வரலாற்றை முதன்முதலாகப் பொருளாக்கியவராக செ.க. விளங்குவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுமை நோக்கிலான மதிப்பீடு

ஆயினும், இதுவரை கூறப்பட்ட நாவலின் ஆக்கக்கூறுகள் அனைத்தையும் கொண்டமைவதால் மட்டும் நாவலொன்று கலாபூர்வமான படைப்பாக உருப்பெற்றுவிட முடியாது. அல்லது ஆக்கக்கூறுகளுள் ஏதோவொன்றை முனைப்பாகவும் - சிறப்பான முறையிலும் கொண்டிருப்பதால் மட்டும் அவ்வாறு ஆகிவிட முடியாது. அவை நாவலாசிரியனின் படைப்பாற்றலுக்கமைய, ஏற்ற இறக்கத்துடனோ சமமாகவோ இடம்பெறலாம். அவ்வாறு இடம்பெறும்போது நாவலின் இயல்பான உயிரோட்டத்திலிருந்து விலகிவிடாமல் அமைவதே அவசியமானது. இவ்வாறான படைப்பே கலாபூர்வமான படைப்பாகின்றது. இவ்வடிப்படையில் செ.க.வின் நாவல்களுள் ஆரம்பகால நாவல்கள் சிலவே ஈழத்து நாவல் வரலாற்றில் நிலைத்து நிற்க கூடியனவாகின்றன. இவ்விதத்தில் ஆய்வாளர் நா.சுப்பிரமணியனின் கூற்றொன்றினை எடுத்தாள்வது பொருத்தமானது. அது வருமாறு:

> "இன்று வரையும் ஈழத்தில் வெளிவந்த நாவலிலே தரமான பத்து நாவல்களை தெரிவு செய்வதாயின் இவரது ஐந்து நாவல்கள் இத் தெரிவில் இடம்பெறும் என்பதற்கு ஐயமில்லை. நீண்ட பயணமும் செவ்வானமும் இவற்றிலே தலையாய படைப்புகள். கணேசலிங்கனுக்குப் பின் ஈழத்து எழுத்தாளர் எவரும் இத்தகைய படைப்புகளைத் தர முடியவில்லை என்பது அவதானிக்கத்தக்கது".

அதேவேளையில், மார்க்சிய நோக்குடைய தமிழ் நாவலாசிரியர்கள், விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியில் செ.க.வின் நாவல்களுக்கு முக்கியமானதொரு இடமுண்டு என்பதையும், அவர்கள் மத்தியில் வாசிப்பு வளர்ச்சிப் போக்கில் செ.க. முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியவரென்பதையும் மறுப்பதற்கில்லை. தவிர வாசகர்கள் மத்தியிலும் படிநிலையுண்டென்பதையும் நாவல் வாசிப்பினூடாகச் சிந்தனை அவாவுகின்ற வாசகர்களும் உள ரென்பதையும் இவர்கள் செ.க.வின் நாவல்களை தொடர்ந்து வரவேற்று படிக்கின்றனரென்பதையும் மனங்கொள்வதவசியமாகும்.

**- 'செ.கணேசலிங்கனது படைப்புகள்',**
***முற்போக்கு இலக்கியத்தில் புனைகதைச் சுவடுகள்,***
**பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு, 2006.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள்

## கானல், அடிமைகள் பற்றிய சிலகுறிப்புகள்

*ஈழத்துப் புனைகதை ஆசிரியர்களால் நீண்ட காலமாகக் கையாளப்பட்டு வருகின்ற சமூகப் பிரச்சினைகளுள் சாதியம் முக்கியமானதொன்று. குறிப்பாக, நாவல் இலக்கியத்தை எடுப்பின், ஈழத்தில் 1925ல் அதற்கான கால்கோளிடப்பட்டுவிட்டது. அன்று தொடக்கம் இன்றுவரை ஈழத்தில் வெளியான சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள் குறிப்பாக 'கானல்' (1983), 'அடிமைகள்' (1984) பெறுகின்ற இடம் குறித்துச் சுருக்கமாக நோக்குவதே இங்கு இடம்பெறுகின்றது.*

*ஏறத்தாழ 75 ஆண்டுக்கால வரலாறு கொண்ட இத்தகைய நாவல்களின் வளர்ச்சி பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது மூன்று விதமான ஓட்டங்களை இனங்காணலாம்.*

## இலட்சிய நோக்குடன் கலந்த சமூகச் சீர்திருத்தப் போக்கு

*சாதியம் பற்றி எழுதிய முதல் நாவலாசிரியரான இடைக்காடரின் 'நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன்' (1925), எஸ்.தம்பிமுத்துப்பிள்ளையின் 'அழகவல்லி' (1926), எச்.நல்லையாவின் 'காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி' (1937), மூத்ததம்பி செல்லாப்பாவின் 'சுந்தரவதனா அல்லது இன்பக்காதலர்' (1938), செல்வநாயகத்தின் 'செல்வி சரோஜா அல்லது தீண்டாமைக்குச் சவுக்கடி' (1938) முதலியன இத்தகைய போக்கின் வெளிப்பாடுகளாம்.*

*ஆயின், இந்நாவல்கள் சாதியம் பற்றிப் பேசினாலும் அது பற்றி ஆழமாக அணுக முற்படவில்லை. மகாத்மா காந்தியின் சீர்திருத்தக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களின் உந்துதலால் ஏற்பட்ட குருட்டுணர்வே சாதியம் பற்றிய இந்நாவல்கள். இவை, ஒருபுறம் அறப்போதனை செய்வனவாகவும் மறுபுறம் வீரதீரச் செயல்கள், மர்மம் என்பன விரவியனவாகவும் விளங்குகின்றன. அன்றைய கால இலக்கியச் சூழலும் வாசகர் ரசனையும் பத்திரிகைத் தேவையும் (பெரும்பாலானவை, பத்திரிகை களில் தொடர்கதையாக வெளியானவை) இதற்குக் காரணமாகலாம். எவ்வாறாயினும், அக்காலகட்ட ஈழத்துப் புலவர்களும் கவிஞர்களும் பேசாப்பொருளை இவர்கள் பேச முற்பட்டமை மனங்கொள்ளத் தக்கது.

## எழுத்தார்வ நோக்குடனான சமூகச் சீர்திருத்தப் போக்கு

இத்தகைய போக்குடைய நாவல்களின் வரவு ஏறத்தாழ 70களிலிருந்து ஆரம்பமாகின்றது. செங்கை ஆழியானின் 'பிரளயம்' (1975), சொக்கனின் 'சீதா' (1963/1974) தி.ஞானசேகரனின் 'புதிய சுவடுகள்' (1977) முதலியன இத்தகைய போக்குடையன. இவை முற்கூறப்பட்ட போக்கினைப் பிரதிபலித்த நாவல்களை விட சாதியம் பற்றி சற்று உரத்துப்பேசின. அந்நாவல்கள் கொண்டிருந்த முற்குறித்த இயல்புகளிலிருந்து விடுபட்டு, யதார்த்தப் பாங்கில் சாதியப் பிரச்சினையை அணுகின. அது மட்டுமன்றி, சாதியப் பிரச்சினை யிலிருந்து விடுபடுவதற்கு, கலப்புத் திருமணம், மனமாற்றம், அன்பு மார்க்கம், கல்வி கற்று மாற்றுத்தொழில் புரிதல் முதலானவற்றைத் தீர்வுகளாக முன்வைத்திருந்தன. இவ்விதங்களில் முற்குறிப்பிட்ட நாவல்களின் போக்கிலிருந்து இவை வேறுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. ஆயினும் இத்தகைய தீர்வுகளின் நடைமுறைச் சாத்தியப்பாடு பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டன என்பதனை மறுப்பதற்கில்லை.

## மார்க்சிய நோக்குடைய சமூக விமர்சனப் போக்கு

இப்போக்குடைய நாவல்கள் 1955லிருந்து வெளிவரத் தொடங்கின. இளங்கீரனின் 'தென்றலும் புயலும்' (1955) முன்னோடி யாக அமைய, தொடர்ந்து, செ. கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' (1965), 'சடங்கு' (1966), 'போர்க்கோலம்' (1969), 'மண்ணும் மக்களும்' (1970), செ. யோகநாதனின் 'காவியத்தின் மறுபக்கம்' (1977), தெணியானின் 'விடிவைநோக்கி' (1973) முதலியன வருகின்றன. இத்தகைய போக்கின் வழிவந்தவரே டானியலும். இவ்விதத்தில் 'பஞ்சமர்' - (1972), 'பஞ்சமர் - 2' (1982), 'கோவிந்தன்' (1982), 'தண்ணீர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1987 - 2ம் பதிப்பு), 'பஞ்சகோணங்கள்' (1984), 'அடிமைகள்' (1984), 'கானல்' (1983) என்பவற்றின் ஆசிரியர் அவர்.

பொதுவாக இப்போக்குடைய நாவல்கள் சாதியத்தை ஆழமாகவும் சமூக விமர்சனக் கண்ணோட்டத்துடனும் பார்த்தன. நடைமுறைச் சாத்தியப்பாடான தீர்வினை முன்வைத்தன. எனினும், இந்நாவல்களுள் பலவும் பிரச்சாரப் பண்பு துருத்திநிற்பனவாகவும் செயற்கைப் பாங்குடையனவாகவும் கலைத்துவம் குன்றியனவாகவும் கருதப்பட்டமையை மறுப்பதற்கில்லை.

அது எவ்வாறானயினும் டானியல் சாதியம் பற்றி எழுதிய ஏனைய நாவலாசிரியரிடமிருந்து வேறுபட்டுள்ளார்; டானியலின் நாவல்கள் ஏனைய சாதிய நாவல்களிலிருந்து வேறுபட்டுள்ளன என்பனவே எமது கவனத்திற்குரிய விடயங்களாகின்றன. அதாவது, ஏனைய நாவலாசிரியர்கள் போலன்றி (தெணியான் தவிர) டானியல் நேரடியான - சொந்த - வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுள்ளவர். இதனால் இவரது நாவல்கள் முற்றுமுழுதான உண்மை அனுவங்களின் அறுவடைகளாகின்றன. இதனால் இவரது நாவல் பாத்திரங்கள் குருதியும் தசையும் கொண்டு உயிராற்றலுடையனவாகின்றன. பாத்திரங்களின் பேச்சுமொழி உயிர்த்துடிப்புடையனவாகின்றது. இத்தியாதி இயல்புகளை சாதியம் பற்றிய ஏனைய நாவல்களில் காண்பதரிது.

இவ்விடத்தில் கானலின் இன்னொரு சிறப்பையும் குறிப்பிட்டாக வேண்டும். மார்க்சிய நோக்குடைய ஏனைய நாவலாசிரியர்களது குறைபாடுகளிலிருந்து டானியலின் நீண்ட கால எழுத்துலக அனுபவம், அனுபவ முதிர்ச்சி, படைப்பாளுமை வளர்ச்சி கானலை கலைத்துவமுடைய படைப்பாக்கியுள்ளமை விதந்துரைக்கப்பட வேண்டியதாகின்றது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது பின்வரும் விவரணப்பகுதி:

> இளையவன் பாவத்தை முறையிடத் தொடங்குகிறான். குருவானவர் இடைமறித்தார்.
>
> "இற்றைக்கு தேவ நற்கருணை பெற ஏன் பிள்ளாய் வரவில்லை?" குருவானவரின் இந்தக் கேள்விக்கு இளையவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. அவன் விக்கித்தான்.
>
> சொல்லு பிள்ளாய், குருவானவரிடம் மறைப்பது கடவுளிடம் மறைப்பது போன்றாகும். சொல்லு பிள்ளாய்?
>
> "நேற்றைக்கு கோவிலடியிலை குடிச்ச பால் கஞ்சிக்குப் பிறகு நான் ஒண்டும் தின்னவில்லைக் குருவானவரே இஞ்ஞை இருந்து வாங்கி வச்சிருந்த கஞ்சியை மச்சாள் இரவு பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளுக்கும் குடுத்திட்டு எனக்கும் கொஞ்சம் வைச்சா, நான் வேண்டாம் எண்டிட்டு அவையைக் குடிக்கவைச்சிட்டு படுத் திட்டன் இஞ்சை பால சங்கீர்த்தனம் செய்து போட்டுப்போனோம் பிறகு தண்ணிகூடக் குடிக்கயில்லை ஆண்டவரே விடியப்புறம் வேலை வயத்தை விறாண்டிச்சுது உயிர் போயிடும் போல் கிடக்குது ஆண்டவரே பக்கத்துத் தென்னம் தோட்டத்துக்கை போய் ஒரு சின்ன மரத்திலை களவா இளநீ இரண்டு பிடுங்கிக் குடிச்சிட்டன் ஆண்டவரே பாவம் செய்திட்டன். தேவரீர் அதுதான் சற்பிரசாதம் எடுக்க வரவில்லை களவெடுத்திட்டன் சுவாமி அதுதான் வரரேல்லை!

இளையவன் பதில் சொல்லி விட்டான் குருவானவர் சிறிது வேளை ஒன்றும் பேசவில்லை. பின்பு,

"சரி, முந்தநாள் பாவமன்னிப்புப் பெற்றுப் போட்டு நேற்று ஏற் சற்பிரசாதம் எடுக்கவராமல் விட்டனி பிள்ளாய்?" குருவானவர் அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"முந்தநாள் பிரசங்கத்திரை குருவானவர் சாதிபாத்து எங்கடை ஆக்களை ஒரு பக்கத்திலை இருக்கச் சொன்னார். எண்ட கவலையிலை கோவிலில் இருந்து வெளியிலை போய் தம்பண் ணைக்கு முன்னாலை குருவானவரைத் தூஷணத்தாலை பேசிப் போட்டன் சுவாமி! அது தான் பாவம் செய்ததாலை நேற்று சற்பிரசாதம் எடுக்க வரேல்லை ஆண்டவரே!"

இளையவன் இரண்டாவது கேள்விக்கும் துணிந்து பதில் சொல்லி விட்டான்.

இடைவெளி விடாமலேயே குருவானவர் மூன்றாவது கேள்வியையும் கேட்டார்.

"போனகிழமை பாவமன்னிப்பு பெற்றுப்போட்டு அடுத்த நாள் ஏன் சற்பிரசாதம் எடுக்க வரேல்லைப் பிள்ளாய்!"

"அது ஆண்டவரே, அண்டைக்கு மத்தியானம் மச்சாள் கூழ் காச்சினவ! பொழுது படுகிற நேரத்திலை தான் பிள்ளையளுக்குக் குடிக்கக் குடுத்து, எனக்கும் தந்த, தானும் குடிச்சவ, இரா ஒண்டு பாதியிலை அண்ணற்றை நடுவிலான பசி பசி எண்டு கத்தினான் ஆண்டவரே! நான் சாமத்திலை எழும்பிப் போய் பூக்கண்டவற்றை தோட்டத்துக்கை இரண்டு கட்டை மரவள்ளிக்கிழங்கைப் பிடுங்கி வந்து, மச்சாளுக்கும் தெரியாமல் அவிச்சு அவனுக்குக் குடுத்தவன் சுவாமி! பாவம் செய்திட்டன் ஆண்டவரே படகினி சுவாமி!"

இளையவன் மூன்றாவது கேள்விக்கும் பதில் கூறிவிட்டான். புதிதில் வீட்டில் இந்தச் சிங்களச் சொல்லை அவன் கற்றிருக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு அவர் பாவமன்னிப்பு கொடுக்கவில்லை. அவனின் பாவங்களுக்கு அவதாரம் இடவில்லை. இருந்த இரையிலேயே நிலைத்து விட்டார்.

இளையவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

குருவானவர் கண்ணீர் விட்டார்!

எழுந்தார்

பாடுபட்ட யேசுவின் சொரூபத்துக்குச் சென்று அதன் முன்னால் முழம்தாழ் படியிட்டு அழத்தொடங்கிவிட்டார்.

இளையவன் உட்கார்ந்த நிலையிலேயே சிலையாக நிலத்தோடு ஒட்டிவிட்டான்! வெகுநேரத்திற்குப் பின்பு உத்தரீயத்தில் கண்களைத் துடைத்துக்கொண்டு அறைவிட்டு விறாந்தைக்கு வந்தார்.

விறாந்தையில் போடப்பட்ட கதிரையில் உட்கார்ந்தார் எதிரே வெட்ட வெளியில் நீண்ட தூரத்திற்குக் கண்களை வீசினார். வீசிய கண்கள் அப்படியே நின்றன!

தொலைவில் தகிக்கும் வெய்யிலின் கானல், நீர் போன்று அலை அலையாகத் தெரிந்தது!

இளையவன் கூறி முடித்தானே அந்தக் கடைசி வார்த்தை! 'படகினி'!

ஞானமுத்துக் குருவானவர் பன்மொழிப்புலவர். இந்தச் சிங்களச் சொற் பிரயோகத்தின் மொழிபெயர்ப்புக் குரல் அவர் நெஞ்சுக் குள்ளே எழுந்து செவிப்புலன்கள் வரை எட்டியது.

"வயிற்றிலே நெருப்பு!"

செவிப்புலனுக்கு இது கேட்க, கட்புலனுக்கு .....

கானல் தெரிந்து கொண்டே இருந்தது.

மேற்கோள் நீண்டு விடப்பட்டதாயினும் ஈழத்திலெழுந்த கலைத்துவம் மிகுந்த புதியதோர் உலகம் முதலான ஒரிரு படைப்புகள் வரிசையில் கானலும் இடம்பெறக் கூடியதென்பது அப் பகுதியூடாக ஓரளவாவது புலப்படலாம்.

அண்மைக்காலமாக வரலாறு பற்றி - வரலாறெழுதியல் பற்றி - புதிய கண்ணோட்டம் நிலவுகின்ற சூழலில் விளிம்பு நிலை மக்களது கடந்தகால வாழ்க்கையைக் கூறுகின்றன என்ற விதத்திலும் இந் நாவல்கள் எமது கவனத்தை ஈர்க்கின்றன.

ஈழத்தின் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சாதிய வரலாறு பற்றிய சமூகவியல் ஆய்வுகள் போதியளவு நிகழ்ந்திருப்ப-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகக் கூறுவதற்கில்லை. இவ்விதத்தில், கடந்த கால யாழ்ப்பாணச் சாதியவரலாறு பற்றி நுணுக்கமான விவரங்களை அறிய முற்படும் சமூகவியலாளர்களுக்கும் இவ்விரு நாவல்களும் பயன்படக்கூடியன: எ- டு.

> "அவற்றுள் கோவியக்குடிகள் முன்னேயும் மாராயக் குடிகள் பின்னேயும் நளக்குடிகள் அதற்கு அடுத்ததாகவும் சுமார் ஐம்பது பேர்கள் வரை கழியக் கடைசியா பரியாரிவல்லியனும் அவன் மருமகன் குட்டியனும் வருகின்றனர்".
>
> பத்துக்கு மேற்பட்ட வில்லு வண்டிகளை வெள்ளை வெளேரென்ற வடக்கன் காளைகள் இழுத்துச் செல்ல, அதை யடுத்து நுகத்தடி கட்டப்பட்ட பத்து வண்டிகளை நுகத்திற்கு இருவராக, வடக்கன் நாம்பனுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்ற தோரணையில் அடிமைகள் வடக்கன்களின் வேகத்துக்கு அமைய இழுத்துச் செல்ல, அடிமைகளாக இழுத்துச் செல்லப்படும் ஒவ்வொரு வண்டியையும் இழுத்துச் செல்லும் நரகாளைகள் களைப்புற்றுப் போகும்பொது கைமாற்றிக் கொள்ள வண்டிக்கு இருவராகப் பின்தொடர, அதை அடுத்து சற்று இடைவெளிவிட்டு, பத்துக்கட்டாடிமார்கள் நிலபாவாடை விரித்துச் செல்ல அதற்குப் பின்னால் நட்டுவ மேளவாத்தியங்கள் கூட்டாக அணிவகுத்து முழங்கிவர அதற்குப் பின்னால்தான் தம்பதிகளின் பல்லக்கு அசைந்து வருகிறது.
>
> இந்த வரிசை முடிந்த பின்னர் இருவர் தோரணங்கள் பொருத்தப்பட்ட கம்பு ஒன்றினைத் தூக்கிப்பிடித்து வர அதற்குப் பின்னால் பல்லக்கு முதலியாரின் மதிப்புக்குரிய அடிமைகள் திரண்டு வருகின்றனர்".

இவ் வர்ணணை நாவலின் பகைப்புலத்தை மட்டுமன்றி சாதியமைப்பு முறைமை, அதன் சமூக அந்தஸ்து முறைமை என்பன பற்றியும் அறியத் தருகின்றது. மறுபுறம் நாவலாசிரியரின் ஆற்றலையும் ஆளுமையையும் உணர்த்தி நிற்கின்றது.

இவ்வாறே யாழ்ப்பாணச் சமூகத்தின் கடந்த காலப் பண்பாட்டு வரலாற்றினை எழுதுவோருக்கும் இவ்விரு நாவல்களும் பயன்தரக் கூடியன. இவ்விடத்தில், அடிமைகளில் யாழ்ப்பாண பிரதேச பாரம்பரிய வைத்திய முறைபற்றிக் கூறப்படுகின்றமை (எ-டு: புக்கை கட்டுதல், நையம் அடித்தல், கொம்புக்கல் உரைத்து நாக்கில் தடவுதல், பெறுமாதப் பிள்ளைத்தாச்சி மருந்து கொடுத்தல், எண்ணெய் முழுக்கு) நினைவுக்கு வருகின்றது. இவ்வாறே கானலில் இடம்பெறும் கூத்து பற்றிய விவரங்களும் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர இவ்விரு நாவல்களிலும் இடம்பெறும் யாழ்ப்பாண மக்களின் கடந்தகால பேச்சு மொழிப்பிரயோகங்கள் பற்றிய விவரங்கள் மொழியியலாளருக்கு நன்கு பயன்படுவன. (இத் தொடர்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் விரிவான கட்டுரையொன்றினை எழுதியிருப்பதும் குறிப்பிடத்தக்கதே) அதுவும் கானலினூடாக, கிறிஸ்தவ மக்களின் வித்தியாசமான தனித்துவமான பேச்சுமொழிப் பிரயோகங்கள் பற்றி அறியமுடிவது அழுத்தியுரைக் கப்பட வேண்டிய விடயமாகின்றது.

அதேவேளையில் கானல், அடிமைகள் என்பன வேறுவகையான சிறப்பம்சங்களையும் பெற்றுள்ளன.

மேற்கூறிய விதத்தில், முதலிற் குறிப்பிடத்தக்கது இவ்விரு நாவல்களின் "காலம்" (களம்) ஆகும். அதாவது இவை கடந்த காலத்தைப் பின்னணியாகக் கொண்டவை. 'கானல்' 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைக் கொண்டதான காலப்பகுதியிலும் 'அடிமைகள்' 1890 தொடக்கம் 1956 வரையான காலப்பகுதியிலும் நிகழ்கின்றன. இவ்வாறு கடந்தகால சமூக வாழ்க்கையைக் களமாகக் கொண்டு தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க பல நாவல்கள் வந்திருப் பினும் ஈழத்தில் அது அபூர்வமே; (செ.யோகநாதனின்) 'நேற்றி ருந்தோம் அந்த வீட்டினிலே' என்ற ஒரு நாவல் மட்டுமே அத்தகையது. அத்தகைய பகைப்புலத்தில் எழுதுவதென்பது சிரமமான விடயமாக இருப்பதே அதற்கான காரணமாகும். எனவே இவ்விதத்திலும் டானியலின் இவ்விரு நாவல்களும் குறிப்பிடத்தக்கனவாகின்றமை கண்கூடு.

'அடிமைகள்' நாவலை விடக் 'கானல்' நாவல் மேலும் சிக்கலான விடயம் பற்றிக் கவனஞ்செலுத்துகின்றது. அதாவது கிறிஸ்தவர், சைவர் என்று இருவேறு மதம்சார்ந்த மக்களது வாழ்வியலை எழுதுவதென்பது இருமடங்கு சிரமமானது. டானியல் இத்தகைய சிரமமான பணியினைத் திறம்படக் கையாண்டுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

**'ஈழத்துச் சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள் : கானல், அடிமைகள் பற்றிய சில குறிப்புகள்', *பண்பாடு*, 12.2003.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# எண்பதுகளில் வெளிவந்த ஒரு நாவல்: 'மரக்கொக்கு'

'மரக்கொக்கு' நாவலின் ஆசிரியரான தெணியான் ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்களுள் மூன்றாம் தலை முறையைச் சேர்ந்தவர்.

ஈழத்தின் முதலாம் தலைமுறை நாற்பதுகளின் பிற்பகுதியில் உருவானது; கே.கணேஷ், அ.ந.கந்தசாமி முதலானோர் இத்தலை முறையினர். இவர்களது காலத்திலேயே முதன்முதலாக முற்போக்கு இலக்கியச் சிந்தனைகள் பரவத் தொடங்கின. இதனாலும் இவர்கள் பல்துறை முயற்சிகளில் ஈடுபட்டமையாலும் ஈழத்து இலக்கிய உலகில் இத்தலைமுறையினர் தடம் பதித்தாரல்லர்.

இரண்டாம் தலைமுறை அறுபதுகளளவில் முகிழ்த்தது. (இதற்கு முன்பே தி.மு.க. செல்வாக்கினால் எழுதத் தொடங்கிய) இளங்கீரன், டொமினிக் ஜீவா, டானியல், செ.கணேசலிங்கன் முதலானோர் இத்தலைமுறையினர். இவர்களின் காலத்தில் முற்போக்கு இலக்கியச் சிந்தனைகள் உத்வேகமாகப் பரவத் தொடங்கிவிட்டன. பெருமளவு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாத இலக்கியச் சூழலில் இவர்களது படைப்புக்களுள் வெளிப்படையான பிரச்சாரம், கதைமுதன்மை, சம்பவத் தொகுப்பு, ஒரேபாணி இவை அனைத்தையும் விட கலையழகில் அக்கறையின்மை, எழுத்தில் முதிர்ச்சியின்மை முதலான பல குறைபாடுகள் காணப்பட்டன.

மூன்றாம் தலைமுறை எழுபதுகளளவில் உருவாகியது. முற்போக்கு இலக்கியம் தொடர்பான குறைபாடுகள், அத்தகைய சிந்தனை வட்டத்திற்கு வெளியே உள்ளவர்களால் மட்டுமன்றி முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களுள் சிலராலும் உணரப்பட்டன; உணர்த்தப்பட்டன. இத்தகைய சூழலில் இத்தலைமுறை சார்ந்தவரான தெணியானின் படைப்புக்களுள் முற்கூறப்பட்ட குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியாக அருகத் தொடங்கின. இவ்விதத்தில் மரக்கொக்கு முக்கியமானதொன்று.

'மரக்கொக்கு' நாவலில் செ.கணேசலிங்கத்தின் நாவல்கள் போன்று வெளிப்படையான பிரச்சாரம் காணப்படுவதில்லை. டானியல் நாவல்கள் போல் கிளைக் கதைகள், சம்பவத் தொகுப்புக்கள் என்பன இல்லை.

அனைத்தையும் விட வேறு மூன்று முக்கிய சிறப்புகளும் இந்நாவலில் காணப்படுகின்றன. இவற்றுளொன்று, பாத்திரவார்ப்பு. தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் கணிசமானோரது நாவல்களில் மறக்க முடியாத பாத்திரவார்ப்புக்களுள்ளன. இவ் விதத்தில் இலக்கிய ஆர்வலரொருவருக்கு கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் ஆடுசாபட்டி அம்மையப்பிள்ளை, நாகம்மாளில் வரும் நாகம்மாள், பொய்த்தேவில் வரும் சோமு, இதயநாதத்தில் வரும் கிருஷ்ண பாகவதர், அம்மா வந்தாளில் வரும் அப்பு, மரப் பசுவில் வரும் அம்மணி, மோகமுள்ளில் வரும் ஜமுனா முதலானோர் நினைவிற்கு வருவது தவிர்க்க இயலாததே. எனினும், ஈழத்து நாவலாசிரியர்கள் பாத்திர உருவாக்கத்தில் அக்கறை கொண்டவர்களல்லர். உன்னதமான பாத்திர உருவாக்கம் என்பது ஆழமான அனுபவம், கூர்மையான அவதானிப்பு, நிதானமான எழுத்து முயற்சி, ஞாபகசக்தி, எழுத்துடனான ஒன்றிப்பு, தேர்ந்த வாசிப்பு, பழந் தமிழ் இலக்கியப் பயிற்சி முதலானவற்றிலேயே உருவாகும். இத்தியாதி தன்மைகள் தெணியானிடம் காணப் பட்டமையாலேயே 'மரக்கொக்கு' நாவல் ஊடாக விஜயலட்சுமி என்றொரு சிறந்த பாத்திரத்தினை ஈழத்து நாவலுலகம் பெற்றுக் கொண்டது.

மற்றொரு அம்சம், தெணியானின் மொழிநடை. வேறெந்த ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களிடமும் காணப்படாத செழுமை யான மொழிநடையை மரக்கொக்கிலே காண முடிகின்றது.

பிறிதொரு அம்சம் வித்தியாசமான வெளிப்பாட்டு முறைமை. அதாவது, நாவல் பாத்திர அறிமுகம், பாத்திர இயக்கம், சம்பவங்கள், பின்புலச் சித்திரிப்பு யாவுமே ஒரு "கமரா" ஊடாகப் படம் பிடிக்கப்படுவது போன்று இந்நாவலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, நாவலின் உள்ளடக்கம் தொடர்பாக ஒன்றினைக் குறிப்பிட வேண்டும். உயர் சமூகமொன்றின் வீழ்ச்சியினை சித்திரிப்பதென்பது மிகக் கடினமானதொரு விடயம். எனவேதான் தமிழில் இத்தகைய நாவல்கள் அரிதாகவுள்ளன. மாறாக மலை யாளத்தில் இவ்வாறான படைப்புக்கள் அநேகமுள்ளன. இவ்விதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டுமொத்தமாக தமிழ் நாவல்களின் வரிசையில் முக்கிய இடம் பெறக்கூடிய மரக்கொக்கு, மலையாள நாவல்கள் சிலவற்றை (எ-டு: அண்டை வீட்டார்) வாசித்தது போன்று உணர்வினைத் தருவதையும் மறுப்பதற்கில்லை.

மேற்கூறிய பண்புகளுள் பல தெணியானிடம் ஏற்கனவே வெளியான 'பொற்சிறையில் வாடும் புனிதர்'களுடன் முகிழ்க்கத் தொடங்கி விட்டன. வேறு சில பண்புகள் மரக்கொக்கின் பின் வெளியான 'காத்திருப்பு' ஊடாக தலைகாட்டுகின்றன.

இவை யாவும் விரிவான ஆய்வை அவாவி நிற்கின்றன!

**'மரக்கொக்கு : சில குறிப்புகள்',**
***தெணியானின் மணிவிழா மலர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

642066

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 MAR 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் நாவல்: வளமும் வளர்ச்சியும்

## கலாநிதி செ. யோகராசா

ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக வெளிவந்த நூல்கள் எழுபதுகள் வரையான நாவல் வளர்ச்சி பற்றிக் கூறுவதுடன் நின்றுவிட, பிற்பட்ட கால நாவல் வளர்ச்சி பற்றி நூலுருவில் எவையும் வெளிவராத ஆரோக்கியமற்ற சூழலில் அத்தகைய குறைபாட்டினை பூரத்தி செய்யும் வகையில் இந்நூல் வெளிவருகிறது. ஈழத்து தமிழ் நாவல் வளர்ச்சியினை முழுமையாக விபரிக்கும் இந்நூல் 70களுக்குப் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சியினை மேலும் நுண்மையாக ஆராய்கின்றது.



**செல்லையா யோகராசா (1949):** யாழ்ப்பாணத்தில் கரணவாய் கிராமத்தைப் பிறப்பிமாகக் கொண்ட இவர் தமது இளங்கலைமாணி சிறப்புக் கற்கைநெறியை கொழும்புப் பல்கலைக்கழகத்திலே (1968—1972) பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையினதும் பேராசிரியர் கா. சிவத்தம்பியினதும் வழிகாட்டலில் முறையே முதுகலைமாணி (1991) கலாநிதி (1999) பட்டங்களைப் பெற்றார். பாடசாலைக்காலத்தில் 'கருணையோகன்' என்ற பெயரில் கவிதை, சிறுகதை எழுதியவர், பல்கலைக்கழகம் சென்றபின்னர் நவீன இலக்கியம், ஈழத்து இலக்கியம், தமிழியியல் ஆய்வு, விமர்சனம், பெண்கள் இலக்கியம், சிறுவர் இலக்கியம் என்பன சார்ந்த ஆய்வாளராக வெளிப்பட்டார். பல நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளதுடன் பல தொகுப்பு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். தற்போது கிழக்குப் பல்கலைக்கலைக்கழக மொழித்துறையில் முதுநிலை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார்.

ISBN 978-955-659-116-8

9 789556 591163

Rs. 250/-

குமரன் புத்தக இல்லம்

விடயம் : இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org